
ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்

# கலசம்
# KALASAM

கார்த்திகை - மார்கழி - தை 2014



இலண்டனிலிருந்து வெளிவரும் முதல் ஆன்மிக இலவச காலாண்டிதழ்


லண்டனில் No1 நகை மாளிகை
Lakshmis Jewellers
எங்கள் மாதாந்திர
நகைச்சீட்டு
திட்டத்தில் சேர்ந்து
பயனடையுங்கள்
தரமான தங்கத்துக்கு லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்
லட்சுமி ஜுவலர்ஸ்
276 High Street North London E12 6SA UK
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448
எங்களுக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை

மணி 22 **கலசம்** ஒலி 74
KALASAM
www.saivamunnettasangam.com
FREE ISSUE

# வாசித்தல்

செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்- என்பது மறுக்க முடியாத உண்மை. இதற்கு அடுத்ததாக நல்ல பயன்தரும் வழி வாசித்தலாகும். பயனுள்ளவற்றை படிப்பதும் கிரகிப்பதும் அறிவு வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகிறது.

கண்டதும் கற்றால் பண்டிதனாவான் எனும் பழமொழிக்கு ஒன்றைப் பார்த்தவுடன் அதைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் எனும் மறைமுகக் கருத்து இருந்தாலும் பலவற்றையும் தெரிந்து கொள்வதால் மனம் விரிவடையும் என்பதும் சரியான விளக்கமே.

இன்று பலர் கண்ணீரும், கவலையும், மனவுளைச்சலையும் தரும் பல தொலைக்காட்சித் தொட-ர்களுக்கு அடிமையாகிவிட்டார்கள் என்றால் அது பொய்யில்லை. இது எப்படி நடந்தது. நாமாக ஏற்படுத்திக் கொண்ட ஒரு பழக்கம் நாளடைவில் நம்மைக் கட்டுப் படுத்துகிறது.

இது போல வாசித்தலும் ஒரு பழக்கமாகி விட்டால் கையில் வாசிக்க ஒரு புத்தகமின்றி வெளியே போக மாட்டோம். அல்லது போன இடத்தில் ஒரு நூலைக் கண்டால் கையிலெடுக்காமல் விடமாட்டோம்.


தமிழில் இருக்கும் நூல்களை எண்ணினால் …..! எமது ஒரு பிறவியில் அத்தனையையும் படித்துவிட முடியாது. எனினும் அருள் நூல்களையும் நல்லவற்றையும் வாசிப்பதால் நிச்சயம் அறிவு வளர்கிறது. இதனால்தானே பெரியவர்கள் தாங்கள் அனுபவித்த நல்லவற்றை தம்முடன் கொண்டு செல்லாமல் எங்களுக்கு விட்டுச் சென்றுள்ளனர். கற்றது கை மண்ணளவு: கல்லாதவை உலகளவில் எம்மைப் பார்த்துக் கொண்டுடிக்கின்றன.

உலகம் வெளியிடும் எல்லாக் குப்பைகளும் நூலாகாது. “ மூவர் தமிழும் முனி மொழியும் கோவைத் திருவாசகமும் திருமூலர் சொல்லும் ஒருவாசகம் எனக்ொள்” என்பதற்கேற்ப ஆய்ந்துணர்ந்த ஞானிகள் மொழிந்தவற்றில் தமிழினிமையும் பொருட்செறிவும் நிறைய இருக்கிறது. நல்லவற்றை வாசிப்பதால் அறிவில் ஒரு பூரணத்துவம், முதிர்ச்சி ஏற்படுகிறது. மனம் எதை அசை போடுகிறதோ அதுவாகவே அது செயற்படுகிறது. மனவமைதிக்கும், அறிவு வளர்சிக்கும் தமிழில் ஆயிரக்கணக்காக நல்ல நூல்கள் இருக்கின்றது.

‘ கலசம்’ பல ஆண்டுகளாகத் தனது பங்கை இந்த வகையில் செய்து கொண்டிருக்கிறது. சங்கத்தின் நோக்கங்களில் எமது மக்களுக்குப் பயனுள்ளவற்றை ஆக்கித் தர வேண்டும் என்பதும் ஒன்றாகும். கலசத்தின் வாயிலாக உங்களை வந்தடையும கருத்துக்கள் பலதரப்பட்ட வயதினருக்கும், பல நிலைகளில் இருப்பவர்களுக்கும் ஏற்றதாக இருக்குமெனக் கருதுகிறோம்.

நீங்களும் பயனடைந்து சிறு வயதிலேயே குழந்தைகளுக்கும் நல்ல நூல்களை வாசிக்கும் சத்தான சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொடுப்போமாக.

இதை வாசிக்கும் உங்களுக்கு இப் புத்தாண்டும் பிறந்துள்ள தையும் நல்ல உடல் வளத்தையும் மன அமைதியையும் தந்து மகிழ்வான ஆண்டாக அமைய நாம் வாழ்த்துகின்றோம்.



ஆசிரியர்

ஆசிரியர் சதாசிவம் ஆனந்தத்தியாகர்
நிர்வாகக் குழு: வ. சிவனருட்செல்வர் க. ஜெகதீஸ்வரன் கவிஞர் பாலரவி
சி. அற்புதானந்தன் வ. இ. இராமநாதன் சிவ தம்பு



தாடர்பு முகவரி: SMS 2 Salisbury Road London E12 6AB Tel/Fax: 0208 514 4732
www.saivamunnettasangam.com

பயணக் கட்டுரை



# திருவொற்றியூர்

சாவகச்சேரியூர். டாக்டர் ம. கதிர்காமநாதன்

**சுவாமியின் திருப்பெயர்கள் -**

ஆனந்ததியாகர், மாணிக்கதியாகர், ஆதிபுரிஸ்வரா, தியாகேசர், புற்றிடம் கொண்டார், படம்பக்கநாதர், எழுத்தறியும் பெருமான்.

**அம்பாள் திருநாமம்** - வடிவுடை அம்மன்

**தலவிருட்சம்** - மகிழமரம்,

**தீர்த்தம்** - பிரமதீர்த்தம்.



சுந்தரமூர்த்தி நாயனார் திருவொற்றியூரில்தான் சங்கிலிநாச்சியாரை மகிழ மரத்தடியில் மணம் புரிந்தார். கலிய நாயனார் அவதரித்த இடமுமாகும். பட்டினத்தடிகள் முக்தி பெற்றதும், வள்ளல் பெருமான் வடிவுடை அம்மையாரின் மீது வடிவுடை மாணிக்கமாலை பாடியதும் திருவொற்றியூரில்தான்.

சிவபெருமான் வீற்றிருக்கும் திருவொற்றியூர் கோயில் விசாலமானதும் புகழ் பெற்றதுமாகும். இத் தலத்தை மூன்று நாயன்மார்களும் பாடியுள்ளனர். முதற் சிவதலம் என்பதால். ஆதிபுரீஸ்வரம் எனவும் அழைக்கப்படும்.

ஐந்து நிலைகள் கொண்ட இராசகோபுரம், கிழக்கே பார்த்த கோயில். முன்னிலையில் பூ, பழங்கள், அர்ச்சனைப் பொருட்கள் விற்கும் கடைகள். முதலில் விநாயகரை வணங்கி 16கால் மண்டபத்தைச் தாண்டிச் செல்கிறோம். சுயம்பு நாக வடிவில் அமைந்த சிவலிங்கத்தை வில்வத்தால் அர்ச்சனை செய்தோம். கோயிலின் வலப்புறமாகச் செல்லும்போது சூரியன் சந்நதி, அப்பர். சம்பந்தர், மாணிக்கவாசகர், சுந்தரர் சங்கிலியாருடன், அமிர்த கண்டீஸ்வர், சுப்பிரமணியர், காளி போன்ற பல மூர்த்தங்களை வணங்கலாம். இதை விட திரிபுரசுந்தரி, வடிவுடையம்மை, வடிவுடைமாணிக்கம், கல்யாணசுந்தரர் சன்னிதி என்ற மண்டபத்தை கண்டோம். பூட்டி இருந்தது. இங்கு திருமணங்கள் நடைபெறுமாம்.

“விடையவன் விண்ணுமண்ணும் தொழநின்றவன்
வெண்மழுவாய்
படையவன் பாய்புலித்தோலுடை கோவணம்
பல்கரந்தைக்
சடையவன் சாமதேவன் சசிதங்காய் சங்கு
வெண்தோடு
உடையவன் ஊனமின்றி உறையும் இடம் ஒற்றயூரே”
-சம்பந்தர்

**வடிவுடை அம்பாள் கோயில்**

வடிவுடை அம்பாள் கோயில்தான் திருவொற்றியூர் சிவன் கோவிலிலும் பார்க்க பிரசித்திபெற்றது. சிவனிலும் பார்க்க சிறிய தனிக் கோயில் இது. சுற்றிலும் ஒரே கூட்டமாக இருந்தது. பொதுசன வழிபாடு வரிசையின் முடிவே தெரியவில்லை. அவ்வளவு கூட்டம். நாங்கள் சிறப்புவழி செல்ல 25 ரூபாவிற்கு சீட்டு எடுத்தோம். அனுமான் வால் போல இதற்கும் நீண்ட வரிசைதான்.!

சென்னையிலுள்ள மூன்று சக்தி பீடங்களில் இதுவும் ஒன்று. ஞானசக்தியாக கருதுகின்றனர். அருள் புரியும் ஞானஅம்பாளுக்கு முன்னர் கொடிமரமும் உண்டு. சிகப்பு சேலையும், பலாப்பழமும் அன்பர்கள் அளிப்பர்.

சிறப்பு வழியில் கால்கடுக்க நின்றோம். பகீரதன் தோற்றுவிடுவான்! தவம் புரிந்து ஒரு மணித்தியாலத்தின் பின்னர் உள்ளே அனுமதித்தனர். உட்பிரகாரம் சிறிது என்றபடியால் 10-15 பேர் மாத்திரம் செல்லலாம். உள்ளே சென்று பூசை நன்றாகவே செய்து எமது அர்ச்சனைகளையும் முடித்து, பிரசாதமும் தந்தனர். அம்பாள் நின்ற நிலையில் சிகப்புச் சேலையில் ஞானரூபியாக அருள்புரிகிறாள். நாங்கள் வணங்கினால் நிச்சயம் அவள் அருள் கிடடும்.

பூசைகளை ஆசையாகப் பார்த்த பின்னர் நேரம் கழித்து மதிய போசனம் முடிக்க புஷ்பா ஹோட்டலுக்கு சென்றோம். அம்பாள் அருளால் என்னவோ எமக்கும் இடம் இருந்தது. “டோக்கன்”

எடுத்து உட்சென்றோம். தலைவாழை இலையில், வெள்ளிக்கிழமை, பிரதோச விரதம் தீர' ஜீவ' பூசை செய்தோம். இதன் பின்னர் பட்டினத்தார் அடிகளார் கோயிலுக்குச் சென்றோம்.

திருவொற்றியூர் சென்னையின் ஒரு பகுதி. 'உயர் நீதிமன்ற"ப் பகுதியில் இருந்து நகரப் பேரூந்து செல்கிறது. "தேரடி நிறுத்தத்தில்" (தேரடி stop) இறங்கினால் எதிரில் கோயில். சென்னையின் வட பகுதியிலிருக்கும் இவ்விடம் சென்னை மத்தியிலிருந்து 27 கி.மீட்டரில் உள்ளது. நாங்கள் வாகனத்தில் சென்றதால் இரண்டு மணித்தியாலத்தில் அடைந்தோம். திரும்பும் போது "மரினா" பீச்சுக்கும் சென்றோம். இது புகழ்பெற்ற இடமாகும்.

இலண்டனில் இருக்கும் நாங்கள், தமிழ் நாட்டின் பெயர் பெற்ற பெரிய கோயிலகளுக்கே மீண்டும் மீண்டும் செல்கிறோம். வேதாரணியம் (யாழ்ப்பாணத்தவர் பரிபாலிப்பது) திருவொற்றியூர் போன்ற கோவில்களைத் தரிசிப்பதில்லை. இது நாம் சிந்திக்க வேண்டியது.

# பட்டினத்து அடிகள் கோயில்

பட்டினத்து அடிகள் கடவுள்தான்.

***"பாரனைத்தும் பொய்யெனவே – பட்டினத்தார் போல் யாரும் துறக்க முடியாது"***




யாவற்றையும் துறந்த புத்த சமயக் கடவுளாகிய புத்தபிரானுக்கு நிகராக இவரை ஒப்பிடுவர். ஆதலால் பட்டினத்தாரும் கடவுளே.



பதினோராம் திருமுறையில் படடினத்தாரின் பாடல்கள் இருக்கின்றன.

கோயில் நான்மணிமாலை
திருக்கழுமல மும்மணிக்கோவை
திரு ஏகம்பமுடையார் திருவந்தாதி
திருவிடைமருதூர் மும்மணிக்கோவை
திலுவொற்றியூர் இருபா இருப·்து ஆகியவை.

படடினத்து அடிகள் = பட்டினம் + அடிகள்
பட்டினம் - காவிரிப்பூம் பட்டினத்தில் பிறந்ததால்.
அடிகள் - துறவியானதால். மேலும் பட்டினத்தாரை பட்டினத்துப்பிள்ளை எனவும் அழைப்பர்.

வணிகர் குடும்பத்தில் வளமை, வசதிகள், மிக்க செல்வச்சீமானின் நன்மகனாகப் பிறந்தார். திருவெண்காடர் அவரது முதற்பெயர். ஐந்து வயதில் தகப்பனை இழந்து, தாயாரின் அரவணைப்பில் வளர்ந்தார். ஒரு சகோதரியும் உண்டு.

சிவலிங்கத்தை வைத்து சிவபூசை செய்து வணங்கினார். பின்னர் சிவகலை என்னும் பெண்ணை மணந்து முப்பத்தைந்து ஆண்டுகள் மகப் பேறில்லாமல் வாழ்ந்தார். சிவபெருமான் அருளால் மருதவாணன் என்ற குழந்தையை எடுத்து வளர்த்தார். ஒரு போது மருதவாணன் "காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே" என ஓர் ஓலையில் எழுதியதைக் கண்டு, உண்மையை உணர்ந்து, உறைந்து யாவற்றையும் துறந்து துறவியானார்.



பட்டினத்து அடிகள் பல தலங்களுக்குச் சென்று இறைவனைத் தரிசித்து பல பாடல்களைப் பாடினார். இதைவிட அற்புதங்களும் இறைவன் அருளால் செய்தார். பாடல்கள் யாவும் மிக எளிமையாகவும், இலகுவாகவும் உளளன. தனது தாயாரின் இறுதிக் கிரியைக்கு உருக்கமாகப் பாடிய பாடல் இன்றும் அபரக்கிரியைகளின்போது பாடப்படுகின்றன.

உணவுகூட யாரும் கொண்டு சென்று கொடுத்தால் தான் உண்ணுவார்.

***"இருக்கும் இடம் தேடி என் பசிக்கே அன்னம்***
***உருக்கமுடன் கொண்டு வந்தால் உண்பேன் -***
***பெருக்க அழைத்தாலும் போகேன் அரனே என்***
***தேகம்இளைத்தாலும் போகேன் இனி"***

இவரது நோக்காகும்.

தனது இறுதிக்காலம் திருவொற்றியூர்தான் என உணர்ந்தார். அங்குள்ள வங்காள விரிகுடா கடற்கரையில் சமாதியானார்.

பட்டனத்தாரின் படத்தைப் பார்த்ததும், அவரது வரலாறு, பாடல்களைப் படித்ததும் எனது மனிதில் இக்கடவுளின் கோயிலை தரிசிக்க வேண்டும் என்று ஆவல் இருந்தது. இது 20-01-2012 இல்தான் நிறை வேறியது.


அன்று வெள்ளிக்கிழமை. கோயிலை பிற்பகல் 2 மணியளவில் அடைந்தோம். கூட்டமில்லை.. மக்களுக்கு இக்கோயிலில் நாட்டமில்லை என உணர்ந்தேன். சிறு கோயில்தான். பூட்டியிருந்தது. அதன் முன்னர் விசாலமான வெளி. 4 மணிக்கு பூசையாகும் என ஒருவர் கூறினார். இனறு பிரதோசம், வெள்ளிக்கிழமை. 3 மணிக்கே பூசையாகும் என்றார் மற்றொருவர். 4 மணியாயிற்று. பூசகர் வரவில்லை. கோயிலின் வடகிழக்கு மூலையில் இருந்த பூசகரின் வீட்டில் ஏதோ விசேசம் போலத் தோன்றியது. அங்கு பலரும் வருவதும் போவதுமாக இருந்தனர். ஒருவரிடம் கூறினேன். நாம் வந்திருக்கிறோம் என. பூசகர் உடனே வந்தார்.

பட்டனத்தார் சமாதி அடைந்த இடத்தில் இக் கோயில் உள்ளது. கோபுரமோ, விமானமோ கிடையாது. எளிமையாக, கடலைப் பர்த்தபடி கிழக்கு வாசல் கொணடது. முன் வாசலில் பட்டினத்தார் திருக்கோயில் என எழுதி மரப் பலகையில் தொங்க விட்டிருக்கின்றனர். மூன்று பிரிவுகள் - வணங்குமிடம், நுழைவாயில், மூலஸ்தானம்.

வணங்குமிடத்தின் சுவரில் பட்டினத்து அடிகளாரின் பாடல்கள் எழுதியிருந்தது. என் மனதைக் கவர்ந்த

*"கல்லாப் பிழையும் கருதாப்*
*பிழையும் கசிந்து உருகி*
*நில்லாப் பிழையும் நினையாப்*
*பிழையும் நின் அஞ்செழுத்தைச்*
*சொல்லாப் பிழையும் துதியாப்*
*பிழையும் தொழாப் பிழையும்*
*எல்லாப் பிழையும் பொறுத்*
*தருள்வாய் கச்சி ஏகம்பனே"*

என்ற பாடலும் இருந்தது. படித்த போது உள்ளம் உவகை கொண்டு மெய் சிலிர்த்தது.




இலிங்க வடிவில், சதுர பீடத்தில், கடவுளாக பட்டினத்து அடிகள் பிரகாசிக்கிறார். உள்ளே செல்லும் போது குனிந்துதான் செல்ல வேண்டும். நில மட்டத்திற்கு கீழேதான் லிங்கம் இருக்கிறது. இவரை வணங்குபவர் பணிவாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் அமைந்துள்ளது எனக் கூறுவர்.

கூட்டம் அதிகம் இல்லாததால் பூசையை நன்றாகவே பார்க்க முடிந்தது. பூசகரும் ஆறுதலாக, அமைதியாக பூசையைச் செய்தார். அவரிடம் பட்டினத்தார் என்ற புத்தகத்தையும் வாங்கினோம்.


ஆடித்திங்கள் உத்திராட நட்சத்திரத்தில் பட்டினத்தார் குருபூசை நடைபெறுகிறது.

புத்தபகவான் போன்ற இந்த ஞான அடிகளின் கோயிலுக்கு யாரும் செல்லலாம். விதிவிலக்கு ஒன்றுமில்லை. திருவொற்றியூர் கோயிலின் எதிரே, சிறிது தூரத்தில் நடந்தே சென்று இக் கோயிலை அடையலாம்.



அருள்திரு பட்டினத்தார்

# மங்கலம் - மங்களம்



இதில் எது சரியானது? மங்கலம் என்பது சரியா? அல்லது மங்களம் என்பது சரியா?

மங்கலம், மங்களம் என்ற இரண்டும் சரியானவைதான். ஒரு நிகழ்ச்சி அல்லது ஒரு வைபவம் தொடங்கும் போது அத்தொடக்க நிகழ்வினை மங்கலம் என்றும் அந்நிகழ்வின் முடிவினை மங்களம் என்றும் அழைத்தனர்.



மங்கலம் என்ற சொல் 'ல்'கரத்தையும் மங்களம் என்ற சொல் 'ள்'கரத்தையும் கொண்டிருக்கிறது.


நாவின் தொடக்க உச்சரிப்பு 'ல'. நாவின் நடுப்பகுதி உச்சரிப்பு 'ள'. நாவின் அடிப்பகுதி உச்சரிப்பு 'ழ'.

'ழ' என்பது உச்சஸ்தானி அது எந்த மொழியிலும் இல்லாத உச்சரிப்பைக் கொண்டது. அது அந்தமில்லாதது. அந்த அந்தத்தை ஒரு நல்ல நிகழ்விற்குஏற்புடையதல்ல என்று கருதினார்கள். இதனால் மங்களம் என்பதை நிறைவிற்கு கொண்டுவந்தார்கள். நிகழ்வுகளின் நிறைவு இறுதியல்லாததால் மங்களம் என்பது உச்சரிப்பாயிற்று.

மங்கலம் என்பது இல்லறவியலுக்கு என்று தொடங்குகிறார் வள்ளுவர்.

நிகழ்வின் நிறைவை சுப மங்களத்துடன் நிறைவு பெற்றது என்று 'ள்'கரத்துடன் கூறுகிறார்கள்.

ல்'கர, 'ள்'கர வேறுபாட்டை அதன் பொருளுணர்ந்து எழுதுவதும் உச்சரிப்பதும் சிறந்ததாகும்.



திருநாவுக்கரசர்–

# திருமுறை

**4ம் திருமுறை திருவெற்றியூர்**

மனமெனுந் தோணி பற்றி மதி
யெனுங் கோலை யூன்றிச்
சினமெனுஞ் சரக்கை யேற்றிச்
செறிகட லோடும் போது
மதனெனும் பாறை தாக்கி
மறியும்போ தறிய வொண்ணா
உனையுநு முணர்வை நல்கா
யொற்றியூ ருடைய கோவே.

பொழிப்புரை :

ஒற்றியூர் உடைய கோவே ! மனம் என்னும் தோணியைப் பொருந்தி, அறிவு என்று சொல்லப்படும் சவள் தண்டை ஊன்றிச் சினம் எனும் சரக்கை அத்தோணியில் ஏற்றிப் பாசக்கடலாகிய பரப்பில் அத்தோணியைச் செலுத்தும்போது மன்மதன் என்ற பாறை தாக்க அத்தோணி கீழ்மேலாகக் கவிழும்போது உன்னை அறிய இயலாதேனாய் வருந்துவேன். அப்போது அடியேன் என்னை மறந்து உன்னையே தியானிக்கும் அறிவை அடியேனுக்கு விரும்பி அளிப்பாயாக.



குறிப்பு : இப் பதிகத்தில் இரண்டு பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன. ஏனையவை சிதைவடைந்தன.

# கலித்தொகையில் கடவுட்கொள்கை

- வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன்

தமிழன்னையின் தண்ணென்ற மலர்ப் பாதங்களைத் தழுவி நிற்கும் சங்கம் மருவிய நூல்களுள் தலையாயது எட்டுத்தொகை நூல்களாகும். அவற்றுள்ளும் கலித்தொகையே சாலவும் நலம்பல படைத்தது. "கற்றறிந்தோர் ஏற்றும் கலி" என்று இத்துடன் புணர்க்கப்படும் அடைமொழியே கலித்தொகையின் பெருமையை வெள்ளிடை மலையென விளக்குகின்றது.

சேரமான் பெருங்கடுக்கோ, பாலையையும் பொய்யா நல்லிசைப்புலவர் பெருமானாம் கபிலர் குறிஞ்சியையும், மதுரை மருதனிளநாகனார் மருதத்தையும், சோழன் நல்லுருத்திரன் முல்லைக் கலியையும், மதுரையாசிரியர் நல்லந்துவனார் கலித்தொகையின் முதலில் காணப்பெறும் இறை வாழ்த்தையும் நெய்தற் கலியையும் இயற்றி அருளினார்கள் என்பது புலவர்கள் கொள்கை.

"பெருங்கடுங்கோன் பாலை கபிலன் குறிஞ்சி

மருதனிள நாகன் மருதம் - அருஞ் சோழனல்

லுருத்திரன் முல்லை நல்லந் துவனெய்தல்

கல்வி வலார்கண்ட கலி"

என்பது பாடல்

அழகு தமிழ்ப் பாடல்கள் 150தனைக் கொண்ட தீந்தமிழ்ப் பெட்டகமாய்த் தோன்றுகிறது கலித் தொகை. தமிழிலக்கணப் பெரு நூல்களில் கூறப் பெறும் அகப் பொருட் பகுதிக்குச் சிறந்ததோர் இலக்கிய எடுத்துக்காட்டாயத் திகழ்வதுடன், ஐந்திணைப் பாகுபாட்டின் சிறப்பையும், அவ்வந் நிலத்திலே வதியும் மக்களின் மனநிலை-யையும், மாண்புறு ஒழுகத்தையும் செறித்துக்காட்டும் செவ்வன் ஆடியாகவும், கலிப்பாவகையுட் சிறந்த ஒத்தாழிசையாலியன்று தேன் பிலிற்றும் மொழிகளையும், தெளிந்த உருவகங்களையும், இனிய நடையினையும் கொண்டு கற்றோரையன்றி மற்றோரையும் தன்னுட் பிணைக்கும் பெருமை வாய்ந்ததாகவும் திகழ்வது தனிப்பெரும்நூலான கலித்தொகையே. உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியாரின் உரைய-ினை இஃது பெற்றிருப்பதே நூலின் சிறப்பிற்கு நல்லதோர் சான்று.

எடுத்துக் கொண்ட எந்தப் பொருளையும் இறைவனுடன் இணைத்து சிந்திப்பதே தமிழர்களின் சிந்தனைப் போக்கு. உண்பவற்றையும், உடுப்பவற்றையும் உடையானுக்கே உடைமையாக்கி, இறைவனில் தன்னை இழந்து நிற்கும் மனம் நமது புலவர் பெருமக்களுடையது. சங்க இலக்கியமான கலித்தொகைச் சோலையுள், கடவுள் உண்மைகள் மலர்ந்து மணம்பரப்பும் இடங்களை இனி நுகர்வோம்.

கலித்தொகையை விரித்தவுடன் மதுரை ஆசிரியர் நல்லந்துவனார் நீலமேனி வாலிழை பாகனாக நெற்றிக் கண்ணனை நம்முன் நிறுத்துகிறார். பிறவாயாக்கைப் பெரியோனின் தாண்டவக் காட்சியுடன் கலித்தொகை விரிகிறது. கொடுகொட்டி, பாண்டரங்கம், காபாலம் என்ற முப்பெருங் கூத்துக்களை சிவபெருமான் ஆடுவதையும். அதற்கு சீர், தூக்கு, பாணி என்ற தாள வகைகளை உமை வழங்குவதையும் ஆசிரியர் காட்டுகின்றார்.

*"படுபறை பலவியம்பப் பல்லுருவம் பெயர்த்து நீ*

*கொடுகொட்டி யாடுங்காற் கோடுயர் அகல்குறிக்*

*கொடிபுரை நுசுப்பினாள் கொண்டசீர் தருவாளோ*

*மண்டமர் பலகடந்து மதுகையால் நீறணிந்து*

*பண்டரங்க மாடுங்கால் பணையெழில்*

*அணைமென்தோள்*

*வண்டரற்றுங் கூந்தலாள் வளர்தூக்குத் தருவாளோ*

*கொலையுழுவைத் தோலசைஇக் கொன்றைத்தார்*

*சுவற்புரள*

*தலையங்கை கொண்டுநீ காபாலமாடுங்கால்*

*முலையணிந்த முறுவலாள் முற்பாணி தருவாளோ"*

எனப் போற்றுகின்றார்.

ஆகாயத்தில் எயில் கட்டி வாழ்ந்த அவுணர்களை, அழிக்குமாறு சிவபெருமானைத் தேவர்கள் வேண்ட வியப்பும், விழைவும், பொலிவும் பொருந்திய தனது நோக்கினாலேயே, திரிபுரத்தை எரிமடுக்கச் செய்தார் இறைவன். பின்பு அவுணர்கள் வெந்து வீழ்நத வெண்பலிக்குகையிலே உமை ஒரு பால் நின்று தாளம் வழங்க "கொடுகொட்டி" என்ற கூத்தை ஆடினார். திரிபுரம் தீமடுத்தெரியக் கண்டும், இரங்காது கைகொட்டி ஆடிய கொடுமையை நோக்கி இவ்வாடல் கொடுங்கொட்டி, கொடுகொட்டி என்று அழைக்கப் பெற்றது போலும்.

பாண்டு என்றால் வெண்மை. அவுணர்களின் அழிவில் விளைந்த சாம்பலையே அரங்கமாகக் கொண்டு, நான்முகன் காண ஆடியதால் இறைவன் ஆடிய மற்றொரு திருநடனத்திற்கு "பாண்டரங்கம்" என்ற பெயர் நிலைக்கலாயிற்று. இதனை இளங்கோவடிகள் "கடலாடு காதையில்"

“பாரதி யாடிய பாரதி அரங்கத்துத்

திரிபுர மெரியத் தேவர் வேண்ட

எரிமுகப் பேரம்பு ஏவல் கேட்ப

உமையவ ளொருதிற னாக வோங்கிய

இமையவன் ஆடிய கொடுகொட்டி ஆடலும்

தேர்முன் நின்ற திசைமுகன் காணப்

பாரதி ஆடிய வியன் பாண்டரங்கமும்”

என்று குறித்துச் செல்கிறார். தாளத்தின் மூன்று பகுதிகளான சீர், தூக்கு, பாணி என்பவற்றைத் தக்க இடத்தில் ஆசிரியர் அறிவுறுத்தியிருப்பதனின்று அன்னாரின் இரசப்புலமை நமக்கு இனிது விளங்குகின்றது.

**பாலைக்கலி:-**

இனி பாலைக்கலியின் தொடக்கம்

பாலை என்றவுடன் குளிர்சாதன அறைக்குள் இருந்தாலும், வெம்மை உணர்வை நம்முள் உணரலாம். இத்தகைய பாலையின் கொடிய வெம்மையைச் சிறக்கப் பாடுகின்றார் பாலைபாடிய பெருங்கடுங்கோ. பாலை நிலத்தின் வெப்பத்தால் மலைகள் பிளந்து தூள்தூளாய்ப் பறந்தனவாம். அத்தகைய துகள்கள் பாலை நிலம் எங்கனும் நிறைந்து நிலத்தினைக் கடந்து செல்பவர்களை வருத்துகின்றனவாம்.

இதற்கு கடுங்கோ கண்ட உவமை என்ன தெரியுமா? அவுணர்களின் தொல்லைக்கு ஆற்றாத தேவர்கள், சிவபெருமானிடம் தம் குறையிரப்ப. மறத்தை அழித்து அறத்தை நிறுவுதல் வேண்டி, பெருமான் சினந்து நோக்கிய அளவிலே முப்புரங்களும் வெந்து பொடிப்பொடியாக உதிர்ந்ததல்லவா? வெய்யோனின் வெப்பத்தால் வரை பிளந்தமைக்கு முப்புரத்தின் அழிவை உவமை காட்டுகிறார்.

மேலும் 26வது பாடலில் இவர் இளவேனிற் பருவத்தில் செக்கச் செவேரென்று பூத்த அழகிய இலவங்க மலர்களில் ஆனேற்றுக் கொடியோனது அழல் நிறத்தைக் கண்டு நெஞ்சழிகின்றார். அது மட்டுமா! வெண்கடம்பு பரசுராமனையும், செருந்தி சூரியனையும், தேன் துளிக்கும் காஞ்சி காமனையும், ஞாழல் காமனின் தம்பி சாமனையும் நினைவூட்டுகின்றனவாம்.

*“ஒருகுழை ஒருவன்போ லிணர் சேர்ந்த மராமும்*

*பருதியஞ் செல்வன்போ னனையூழ்த்த செருந்தியு*

*மீனேற்றுக் கொடியோன் போல் மிஞிறார்க்குங்*

*காஞ்சியும்*

*மேனோன்போ னிறம்கிளர்பு கஞலிய ஞாழலும்*

*ஆனேற்றுக் கொடியோன் போல் எதிரிய இலவமும்*

*ஆங்கத்*

*தீதுதீர் சிறப்பின் ஐவர்கள் நிலைபோல”*

(பாலை – 26)

என்று உரைக்கின்றார்.

**குறிஞ்சிக்கலி:-**

இனி கபிலர் பெருமானிடம் வருவோம். குறிஞ்சி பாடுவதில் கபிலர் வல்லவர். இவர் குறிஞ்சிக்கலியீல் ஓர் குன்றக் காட்சியை வர்ணிக்கின்றார்.

வேங்கை மரமொன்று பூத்துப் பொலிந்து நிற்கின்றது. மதமயக்கத்தால் யானை ஒன்று பூத்த வேங்கையைப் பாயும் வேங்கையெனக் கருததித் தனது கூரிய தந்தத்தினால் குத்துகின்றது. பின்னர் உண்மையை உணர்கிறது. மரத்துள் ஆழ்ந்த தந்தத்தை எடுக்க முடியாமல் வரையகம் அதிரக் கூவுகின்றது. இக் காட்சியின் சுவையிலே ஈடுபட்ட புலவரின் நினைவினுள் மற்றோர் காட்சி விரிகின்றது.

சிவபெருமான் உமாதேவியுடன் திருக் கையிலையில் வீற்றிருக்க இலங்கையர்கோனாகி இராவணன் கயிலையைத் தன் தோள் வலிமையால் பெயர்க்க முற் படுகின்றான். வரையின் துளக்கத்தை உணர்ந்த இறைவன் தனது காற் பெருவிரலை ஊன்ற தோள்களும், கைகளும் நெரிபட்டு அலறுகிறான் அரக்கர் கோமான். புலவரின் நினைப்பின் இணைப்பிலே எத்தகைய ஒற்றுமை பாருங்கள். இதைத்தான் நாவுக்கரசரும்,

“கனகமா வயிரமுந்து மாமணிக் கயிலை கண்டும்

உனகனா யரக்கனோடி எடுத்தலும் உமையாளஞ்ச

அனகனாய் நின்ற வீச னூன்றலு மலறி வீழ்ந்தான்

மனகனாய் ஊன்றினானேன் மறித்து நோக்கில்லை

யன்றே”

என்ற 10பாடல்களின் வாயிலாக இராவணன் கயிலையைப் பெயர்ந்த செய்தியைத் தெரிவிக்கின்றார்.

மாதவச் சிவஞான சுவாமிகளும் கரிய கரடியை இராவணனுக்கு உவமையாக்கி உளம் பூரிக்கின்றார்.

“சுற்றெல்லாம் மலர் முல்லை ததைந்து

பெருந்தூறு செய அதன்கீழ் எண்கு

பற்றி நுழைந்து உறங்க நடுவளர் கொன்றைமிசைக்

கறிதாய் படருந் தோற்றம்

உற்றரக்கன் வெள்ளிமலை எடுத்த நாள்

வெரீஇத் தழுவும் உமையாளொடும்

கற்றைவார் சடைப்பெருமான் நின்றநிலை

காட்டுவதும் உண்டா லங்காண்”

வெண்ணையின் தொகுதியென விளங்கும் முல்லை வெண்பனிவரையையும் கரி நிறக் கரடி இருள் மனங் கொண்ட இராவணனையும், நடுவில் வளர் கொன்றை மரம் பிறைசூடிய பெருமானையும், பசிய

மிளகுச் செடி இமைய மடக் கொடியையும், சுட்டுகின்றனவாம். மற்றோர் புலவர் கூறுகின்றார். ஆறணிந்த கடவுளும், அழகுக் கொருவரும் ஒவ்வாத வல்லியும் ஒருநாள் கூடல் கொண்டார்களாம். பெருமானை அணுகாது பெருமாட்டி சற்று விலகியே இருந்தாள். இந்த நல்ல சமயம் பார்த்து கயிலைமலையைப் பெயர்க்கத் தொடங்கினான் இராவணன். மலை ஆட்டங் கண்டது. மலையரசி அஞ்சினாள். உலகுடைநாயகி ஊடலை மறந்து பெருமானின் பொன்மேனியை ஆரத் தழுவிக் கொண்டாளாம். நன்றிக்குரியவன் தானே அறம்புகா இலஞ்சி சூழ் அணி இலங்கை வேந்தன்.

*"அருவியங் குன்றம் அரக்கன் பெயர்ப்ப*

*வெருவிய வெற்பரையன்பாவை — பெருமான்*

*அணியாகம் ஆரத்தழுவினாள் தான்முன்*

*தணியாத ஊடல் தணிந்து"*

இனி கபிலரின் கலிப்பாட்டை நோக்குவோம்.

*"இமையவில் வாங்கிய :ர்ஞ்சடை அந்தணன்*

*உமையமர்ந் துயர்மலை இருந்தனனாக*

*ஐயிரு தலையின் அரக்கர் கோமான்*

*தொடிப் பொலித் தடக்கையிற் கீழ்புகுந் தம்மலை*

*எடுக்கல் செல்லா துழப்பவன்போல*

*உறுபுலி உருவேய்ப்பப் பூத்த வேங்கையை*

*கறுவுகொண் டதன்முதற் குத்திய மதயானை*

*நீடிரு விடரகஞ் சிலம்பக் கூய்த்தன்*

*கோடுபுய்கல்லா துழக்கு நாடகேள்*

-(குறிஞ்சி -2 )

குறிஞ்சிக்கலி 7வது பாடலில் குறிஞ்சிக் கிழவனாகிய முருகனின் புகழ் பேசப் படுகிறது.

**மருதக்கலி:-**

மருதம் பாடிய மருதனிள நாகனாரோ குறுகுறு நடந்து சிறு தேரைப் பற்றியிழுத்து வரும் புதல்வனை ஆலமர் செல்வனின் அழகு மகனாகிய முருகனுக்கு உவமிக் கின்றார். மருதக்கலி 18வது பாடலில் "ஆலமர் செல்வன் அணிசால் மகன் விழா" என்றும் முருகனின் புகழைக் குறிப்பிடுகின்றார். மேலும் 28வது பாடலில்

"ஈரணிக் கேற்ற ஓடியாப் படிவத்துச்

சூர்கொன்ற செவ்வேலார் பாடிப் பலநாளும்

மாராக்க னை காமம் குன்றத்து நின்னொடு

மாரி யிறுத்த கடவுளைக் கண்டாயோ"

-(மருதம்-28)

எனறு சூர்தடிந்த செவ்வேள் உறையும் திருப்பரங் குன்றத்தைப் புகழ்கின்றார்.

**முல்லைக்கலி:-**

முல்லைக்கலியின் முதற்பாட்டில் உருத்திரனைப் பற்றிய செய்தி பேசப்படுகின்றது. 3ம் பாடலில் சிவந்த ஏற்றின் வளைந்த கொம்பிற்கு, இறைவன் சூடிய குழல்வித்திங்களையும், ஏற்றினங்கள் தங்கள் குருதி தோய்ந்த கொம்புகளிலே குடரைச் சுற்றியிருப்பதற்கு எரிதிகழ் கணிச்சியோன் சூடிய பிறைக் கண்ணுள்ள மாலைக்கு ஒப்பிடுகின்றார் சோழன் நல்லுருத்திரன்.

தொழுவத்திலே புகவிட்ட ஏறுகளைக் கூறும்போது வெள்ளை ஏற்றிற்கு பனைக்கொடி உயர்த்திய பலரா-மனையும் கரிய ஏற்றிற்கு கார்வண்ணச் செங்கண்மாலையும், குரால் நிறமுடைய ஏற்றிற்கு முக்கண்ணனையும் சிவந்த ஏற்றிற்கு முருகனையும் உவமையாக்கதல் உணர்ந்து இன்புறத் தக்கது.

*"வானுற வோங்கிய வயங்கொளிர் பனைகொடிப்*

*பானிற வண்ணன் போற் பழதீர்த்த வெள்ளையும்*

*பொருமுரண் மேம்பட்ட பொலம்புனை புகழ்தேமித்*

*திருமறு மார்பன்போல் திறல்சான்ற காரியும்*

*மிக்கொளிர் தாழ்சடை மேவரும் பிறைநுதல்*

*முக்கண்ணா னுருவேபோல் முரண் மிகு குராலும்*

*மார்கடல் கலக்குற மாகொன்ற மடங்காப்போர்*

*வேல் வல்லான் நிறனே போல் வெருசந்தா சேயும்"*

-(மல்லை-4)

என்கிறார் சோழர் பெருமான். முல்லைக்கலி 5வது பாடலிலும் திருமால், பலராமன். சிவன், இந்திரன், முருகன் முதலியோர் இடம்பெறுகின்றனர்.

**நெய்தற்கலி:-**

இனி நெய்தல் நிலம் செல்வோம். திருமால், தும்புரு நாரதரின் யாழிசையைச் செவிமடுத்துப் பாம்பணையில் அறிதுயில் கொள்ளும் செய்தியையும், மூவுலகும் ஈரடியால் முறை கொண்ட பெருமையையும்


*"...........................................பாடலோடு*

*அரும்பொருள் மரபின் மால் யாழ்*


*கேழாக் கிடந்தான் போல்*


-(நெய்தல்-6)

என்றும் "ஞாலமும் நடித்தாய முதல்வர்கு"



# தொன்மையான சைவமும் தமிழும்





(க.செல்வரத்தினம்)

தமிழ்மொழியும் சைவநெறியும் நம் இனத்தின் இரு கண்களாகும் அத்தகைய தொன்மைமிக்க தமிழ் இனத்துக்கென ஒரு காலக்கிரமம் இருந்திருக்க வேண்டும்

இக்காலக்கிரமத்தைக் கல்வெட்டுக்கள், அரச அறிக்கைகள், அருளாளர்களின் கூற்றுக்கள், தமிழ் புராதன இலக்கிய நூல்களிலிருந்து நாம் ஊகித்துக் கொள்ளலாம். கடைச் சங்ககால "இறையனார் காவியம்" எனும் நூலுக்கு உரை எழுதிய நக்கீரதேவனார் பல செய்திகளைத் தந்துள்ளார். அவற்றின்படி சங்ககாலங்களை வைத்து காலக்கிரமம் பார்க்கலாம்.

**முதற்சங்ககாலம்**:- இதன் காலம் 4440 ஆண்டுகள். இக்காலப் பகுதியில் 89 மன்னர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. சங்கப்பலகையின் இருக்கைகள் 549. இங்கு 4440 புலவர்கள் வாழ்ந்து வந்தனர். சிவபெருமானே சங்கப் புலவர்களில் ஒருவராக, தமிழ்மொழியையும், ஏனைய 64 கலைகளையும் போற்றி வளர்த்து தலைமை தாங்கி நடத்தி வந்தார்.

**திருஞானசம்பந்தர் புராணம் 667ம் பாடல் --**

"நீல மாமிடத்து திரு ஆலவாயன் என நிலவு
மூலம் ஆகிய திரு இருக்குக் குறள் மொழிந்து
சீலமாதவத் திருத்தொண்டர் தம்மொடும் திளைத்தார்
சாலும் மமேன்மையில் தலைச்சங்கப் புலவனார்
தம்முன்"

நக்கீரதேவனார், சேக்கிழார் பெருமான் ஆகியோர் அருளாளர்கள். அவர்களது கூற்றுகள் நம்பத் தகுந்தவை.

**இடைச்சங்கம் -**

3700 வருடங்கள் இடைச்சங்கம் செயற்பட்டது. 3700 புலவர்களும் வாழ்ந்தனர். 59 சங்க இருக்கைகள் சுழற்சிமுறையில் புலவர்கள் இயங்கி வந்தனர். அகத்தியர் வழிகாட்டியாக இருந்திருக்கக்கூடும். கபாடபுரம் இதன் தலைநகரம். தொன்மையான இலக்கண நூலான தொல்காப்பியம் அரங்கேறியது இக்காலத்தில்.

**கடைச்சங்கம் -**

1850 வருடங்கள் செயற்பட்ட இச்சங்கம் கிபி 100இல் முடிவுற்றது. சங்கத்தில் 49 இருக்கைகள் இருந்தன. 449 சங்கப் புலவர்கள் சங்கத்தை அலங்கரித்தனர். கடைசி மன்னன் உக்கிரப்பெருவழுதி உத்தர மதுரையைத் தலைப்பட்டினமாகக் கொண்டு ஆண்டுவந்தான். திருக்குறள் அரங்கேறிய ஆண்டு கி.மு. 31. 49 புலவர்களும், அரசனுமாக மொத்தம் 50 பேரும் போற்றி, சாற்றுக்கவி பாடி திருக்குறளின் சிறப்பை நிலைநாட்டி உள்ளனர்.

| | | |
|---|---|---|
| எனவே முதற்சங்கம் | 4440 | ஆண்டுகள் |
| இடைச்சங்கம் | 3700 | ஆண்டுகள் |
| கடைச்சங்கம் | 1850 | ஆண்டுகள் |
| கி.பி. 100வரை.......... | **9990** | ஆண்டுகள் |
| இன்றுவரை 2013-100 | 1913 | |
| | **11903** | கிட்டத்தட்ட 12000 |

ஆண்டுகள் எனக்கொள்ளலாம்.

எனினும் கிரகோரியன் பஞ்சாங்கப்படி அப்பர் பெருமான் கி.பி 576--656 என்றும் திருஞானசம்பந்தர் பெருமான் கி.பி. 638--654 என வரையறுக்கிறோம். இறைவனால் ஆட்கொள்ளப்பட்டவர்கள், தெய்வத்தால் பாலூட்டப்பட்டவர், அனல்வாதம், புனல்வாதங்களில் வென்ற அருளாளர்கள் என்று நாம் இப்படி அழைக்கவேண்டி இருக்கிறது.

**சங்கம் பருவிய காலத்தில்,** கி.பி 100-300 வரை தமிழ்மொழி, சைவசமயம், தமிழர் கலாசாரம் ஆகியவற்றிற்கு எந்தவித தாக்கமும் ஏற்படவில்லை.

**இருண்டகாலம்** - இக்காலத்தில் களப்பிரர் ஆட்சி தமிழரின் இருண்டகாலம் எனக் கூறப்படுகிறது. வேற்றுமொழி ஊடுருவல், வேற்று மதங்களான பௌத்தம், சமணம் ஆகியவை ஏற்படுத்திய தாக்கம், வேற்று இனத்தவரின் கலாசாரங்கள் என்பன எம்மைத் தாக்கின. சைவ அடையாளங்கள அழிக்கப்பட்டன. சிவாலயங்கள் இடிக்கப்பட்டன. சைவ, தமிழ் நூல்கள எரியூட்டப்பட்டன. வட இந்தியாவில் கி.மு. 500 அளவில் தோன்றிய பௌத்த, சமண மதங்கள் சுமார் 800 வருடங்களின் பின்புதான் கி.பி. 300 அளவில் தமிழகத்தில் பாதிப்பை ஏற்படுத்தின. களப்பிரர் காவிரிப்பூம் பட்டினத்தை தலைநகரமாக மாற்றி ஆட்சி செய்தனர். களப்பிரர் காலத்தில் கர்நாடக மன்னன் அக்காலத்தில் வாழ்ந்த மூர்த்திநாயனாருக்கு பெரும் தொல்லை கொடுத்தான். சந்தனக்காப்பு சாத்தி வந்த நாயனாரை அரசனாக்கி மன்னனின் கொடுங்கோன்மையை எம்பெருமான் நீக்கியருளினார்.

**சுந்தரமூர்த்தி நாயனார் புராணம் - 7ம் பாடல்**

" மும்மைப் புவனங்களின் மிக்கதன்றே அம்மூதூர்
மெய்மைப் பொருளாம் தமிழ் நூலின்
விளங்குவாய்மைச்
செம்மைப் பொருளாம் தருவார் திருஆலவாயில்
எம்மைப் பவம் தீர்ப்பவர் சங்கம் இருந்தது என்றால்"

மெய்மை, வாய்மை, செம்மைப்பொருள் என்று கூறியது தமிழின் உண்மை மாண்பை குறிப்பதுவே.

புலவராக இறைவன் செயற்பட்டார் என்பதை உணரலாம்.

திருஞானசம்பந்தருக்கு முன்பே சைவம் இருந்தது. 17 நாயனமார்கள் 63பேரில் இருந்திருக்கின்றனர். எனினும் நால்வரும் சைவத்தின் மறுமலர்ச்சியை உறுதிசெய்தனர்,

**தேவாரங்கள் எப்படிக் கிடைத்தன** -
அபயகுலசேகரன் (கி.பி. 870-890) தேவாரத்தில் திளைத்த மன்னன். தேவாரங்கள் செவிவழியாகவே வந்தது என அறிந்தான். முதன்மந்திரியின் ஆலோசனைப்படி நம்பியாண்டார்நம்பிகளை உதவுமாறு மன்னன் வேண்டினான். சிதம்பரத்தில் திருமுறைச்சுட்டி விநாயகரை வழிபட்டு, அழிந்தவைகள்போக மிகுதியைப் பெற்றுத் தந்தருளினார். சுமார் 10இலட்சம் பாடல்களில் குறைந்தளவு பாடல்களே கிடைக்கப்பெற்றன. பதினொரு திருமுறைகளாக அவைகளைத் தொகுத்தருளினார். அத்துடன் கிடைத்த பதிகங்களையும் இறைவன் துணையால் பெண் அடியார்கள் மூலம் பண்கள் தவறாது அமைக்கப்பட்டன.

**கலியுகம்** - தற்பொழுது நடைபெறுவது கலியுகமாகும். கிருஷ்ணர் சமாதி அடைந்தது கி.மு. 3101ல். அவரின் சமாதி குஜராத் மானிலத்தில் உள்ளது. தற்போது 5000 வருடங்களாக கலியுகம் நடந்து வருகிறது. கிருஷ்ணரும் சிவவழிபாடு செய்ததிலிருந்து சைவத்தின் மகிமை மேலும் விளங்குகிறது.

நாயன்மார் காலத்திற்கும் சந்தானகுரவர் காலத்திற்கும் இடைப்பட்ட காலப்பகுதி சுமார் 400 வருடங்களாகும். இடைப்பட்ட காலத்தில் ஆதிசங்கரர், ராமானுஜர், மாதுவாச்சாரியார், நீலகண்டசாத்திரியார் ஆகிய நால்வரும் சைவத்திற்கு ஒரு தடையை ஏற்படுத்தியுள்ளனர், தமிழராய்ப் பிறந்த ஆதிசங்கரரும் ஏனைய மூவரும் தென் இந்தியாவில் பிறந்து வடமொழியில் பிரம்மசூத்திரம், பகவத்கீதை, உபநிடதம் ஆகியவற்றைக் கொண்டு கருத்து வேறுபாடுகளைப் புகுத்த முனைந்தனர்.

களப்பிரரின் இருண்ட காலப்பகுதியை ஒளிமயமாக்க திருஞானசம்பந்தர் அவதாரம் செய்ய இறைவனார் அருளியது போன்று, சாத்திரங்கள் வாயிலாக சைவசமயத்தின முடிந்த முடிபை, மெய்கண்டார் அவதாரம் மூலம் இறைவன் அனுக்கிரகம் செய்தார். மெய்கண்டார் சிவஞானபோதத்தை இயற்றினார். இதே போன்று சந்தானகுரவர்களில் ஏனைய மூவர்களான அருள்நந்தி சிவாச்சாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதி சிவாச்சாரியார் ஆகிய நால்வரும் சந்தான குரவர். இவர்கள் புறச்சந்தான குரவர்கள் எனப்படுவர். சைவத்திற்கு புறம்பான கொள்கைகளைப் பரப்பி வந்த மாபாடியவாதிகளை மறுத்து, சைவ சித்தாந்தக் கொள்கையில் தெளிவு ஏற்பட குரவர்களை எம்பெருமான் அனுப்பி வைத்து காத்தருளினார்.

தடைகள் மத்தியில் எமது சைவநெறி சந்தானகுரவர்களின் சைவ சித்தாந்த நூல்கள் மூலம் சைவ சித்தாந்த கருத்துக்களை தொகுத்து முறைப்படுத்தி காட்டியுள்ளன.

## வேண்டத் தக்க பதினாறு பேறுகள்

1) நிறைந்த அறிவு-கல்வி
2) நீண்ட ஆயள்
3) நல்லவர்களின் நட்பு
4) குறையாத வளங்கள்
5) இளமையான தோற்றம்
6) நல்ல உடல் நலம்
7) திடமான மனம்
8) அன்பு அகலாத வாழ்க்கைத் துணை
9) குழந்தைப் பேறு
10) பெரும் புகழ்,
11) கொடுத்த வாக்கை நிறை வேற்றும் திறன்
12) வள்ளல் குணம்
13) நிறை நிதி
14) முறையான ஆட்சி
15) துன்பமில்லாத வாழ்க்கை
16) தெய்வத்திடம் அன்பும் அடியாருடன் உறவும்.


*நாயன்மார்கள் கடவுளை அனுபவித்தவர்கள். கற்பிக்கின்ற அறிவு படைத்தவர்கள். நாம் கற்கின்ற அறிவு படைத்தவர்கள்.

*இறைவன் ஞானிகளைப் பிறக்க வைப்பதே இறைவனைப்பற்றி ஞானி பிரச்சாரம் செய்யவே. அதுவும் அவன் எம் மேல் வைத்திருக்கும் அன்பினால்தான்.

*இறைவன் எட்டக் கூடிய இடத்தில்தான் இருக்கிறான்.

# அறம் செய்வோம்

வ.சி. செல்வர்



நாங்கள் மனிதனாகப் பிறந்து என்ன செய்தோம், வாழ்க்கையில் ஏதாவது உருப்படியாகச் செய்தோமா அல்லது நாலுபேருக்காவது உதவி செய்துள்ளோமா என்று யோசித்தோமானால் விடையென்று மிஞ்சுவது பூஜ்யம்தான்.

நாங்கள் பிறக்கும்போதும் எதுவும் கொண்டு வந்தோமா? இதற்கு இல்லையென்பதே விடை. அல்லது இறக்கும்போது எதையாவது எம்முடன் எடுத்துக்கொண்டு போகிறோமா?. அதற்கும் இல்லையென்பதே விடை.

இதைத்தான் -

*"பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லை பிறக்கும் மண்மேல்*
*இறக்கும் பொழுது கொடுபோவ தில்லை யிடைநடுவிற்*
*குறிக்குமிச் செல்வஞ் சிவன்தந்த தென்று கொடுக்கறியா*
*திறக்கும் குலாமருக் கென்சொல்லு வேன்கச்சி யேகம்பனே*

என்கிறார் பட்டினத்தார்.

இந்த பிறப்பு இறைவன் தந்தது. இந்த உலகம் இறைவன் படைத்தது. இறைவன் படைத்த இந்த உலகத்தில் ஏதோ ஒரு காரணம் நிமித்தமாகத்தான் அவன் மனித குலத்தைப் படைத்திருக்கிறான்.

இறைவனாற் படைக்கப்பட்ட இந்த உலகத்தில் தோன்றிய அத்தனை சீவராசிகளும் தன்னைப் படைத்த உலகத்திற்கு தன்னால் இயன்றதைச் செய்துவிட்டு சுழற்சி முறையில் மறைந்து விடுகின்றன. ஆனால் ஆறறிவுள்ள இந்த மனிதப் பிறவியில் இறைவனால் கொடுக்கப்பட்ட இந்த உலகத்தில் நாம் அறவழி நின்று வாழவேண்டு மல்லவா? மனிதப்பிறவியெடுத்த நாங்கள் மனித குலத்திற்கு ஏதாவது செய்ய வேண்டுமல்லவா?

அவரவர் செய்த பூர்வஜென்ம பலன்படிதான் நாம் பிறக்கின்றோம் என்பது எமது நம்பிக்கை. அவரவர் செய்த பலன்படிதான் அவரவர் வாழ்க்கை அமைகிறது என்றும் நம்புகின்றோம். அவரவர் தகுதி வைத்தும் ஒருவரையொருவர் மதிப்பிடுகின்றோம். பணக்காரன். ஏழை, ஏற்றம், தாழ்வு என்பனவும் அவரவர்க்கு அளந்தபடி என்றும் எண்ணுகின்றோம்.

எங்களைப் பிரசவித்த இந்த உலகம் செல்வம் நிறைந்தது. அந்தச் செல்வங்களை அற வழியில் நாம் அனுபவித்து நியாயமான வழியில் வாழ்ந்து இவ்வுலகைவிட்டு நீங்குவதல்லவா மனிதனுடைய நோக்கமாக இருக்கவேண்டும். அறம் அதாவது தர்மம் செய்து வாழ்வது பற்றி திருமூலர் என்ன சொல்கிறார்-

***"ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்***
***பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்***
***வேட்கை யுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்***
***காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே"***

பாகுபாடு பார்க்காமல், நான் பெரிது நீ பெரிது என்றெண்ணாமல் ஆறுதலாக உண்ணுங்கள். காகங்கள் கரையும் போது பகிர்ந்து சாப்பிட மற்றைய காகங்களை கா. கா என்று கரைந்து கூப்பிடுவது போல் மனிதர்களாகிய நாங்களும் பகிர்ந்து உண்ண வேண்டுமென்கிறார். திருமூலர்.

அறங்கள் செய்யாதவன் வாழ்வு எப்படி முடியும் என்றும் திருமூலர் சொல்கிறார்-

***"இருமலும் சோகையும் ஈளையும் வெப்பும்***
***தருமஞ்செய் யாதவர் தம்பால தாகும்***
***உருமிடி நாகம் உரோணி கழலை***
***தருமஞ்செய் வார்பக்கல் தாழகி லாவே"***

இருமல், சோகை, கோழை, சுரம் தருமம் செய்யாதவர்களைச் சென்றடையும். அகால மரணம் கொடுக்கும் மின்னல், விஷக்கடி, தொண்டை நோய், வயிற்றுக்கட்டி என்பன தருமஞ் செய்பவர்களை நெருங்குவதில்லை என்கிறார்.

நேர்மையான வழியில் உழைப்பின் மூலம் பெற்ற செல்வத்தின் ஒரு பகுதியை ஏழை எளியவர்க்கு அளிப்பதின்மூலம் இறைவனை இன்பமடையச் செய்கிறீர்கள். இறைவனுக்கு அதுவே இன்பம். அன்பே சிவமாம் அது.

ஆசைகளைக் குறைத்து அறங்களைச் செய்வோம். ஆசைகளைக் குறைக்க வேண்டுமாயின் பொருட்கள் மீதான பற்றுதலைக் குறைக்க வேண்டும். தனக்கும் தன் பிற்காலத்திற்குமான தேவைக்கேற்ற அளவு சேமித்துக் கொண்டு மிகுதியை அறச்செயல்களுக்கு செலவிடலாமல்லவா! மேலதிகமாக இருப்பவற்றை ஏழை எளியவர்களுக்கு அளிப்பதன் மூலம் புண்ணியம் தேடிக்கொள்ளலாமல்லவா! இப்படிச் செய்வதன் மூலம் நீங்களும் உங்களைச் சார்ந்தோரும் நற்பலன்களை அடைய இறைவன் ஆசி கிடைக்கும்.

பற்றுகளை ஒருவன் குறைக்கும்போது அவனுக்கு நல்ல குணங்களும் அவன் மனதில் அமைதியும் குடிகொள்கின்றன. அப்படி அமைதி குடி கொள்ளும்போது அவனுக்குச் சமதர்ம குணம்

தோன்றுகின்றது. அவனின் பார்வை தன் சுற்றத்தை, சமூகத்தை நோக்கிப் படுகின்றது. இவ்வளவு காலமும் இப்படி தன் சமூகத்திற்கு எதுவும் செய்யாமல் இருந்து விட்டோமே, பூமிக்கு பாரமாகி விட்டோமே என்ற எண்ணம் ஏற்பட நலிந்தவர்கள் பக்கம் திரும்புகிறான்.

இப்போது அவனது மனம் தூய்மையடைய ஆரம்பிக்க, தான் வாழ்ந்த, தன்னைப் பிரசவித்த மண்ணுக்கு, அங்கே வாடும் மக்களுக்காக ஏதாவது செய்ய வேண்டுமென எண்ணுகிறான். போரினால் அல்லல்பட்டு அகதி முகாம்களில் உள்ளவர்க்கு உதவ எண்ணுகிறான். இதுவே மிகப் பெரிய அறம்.

வெளிநாடுகளில் வசிக்கும் நாங்கள் அரசு எங்கட்கு தரும் பணத்தில் நாங்கள் சுக வாழ்வு நடத்துகிறோம் ஆனால் என்ன காரணத்தால் நாங்கள் இந்த நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டோமோ அதை நாங்கள் நினைத்துப் பார்க்கின்றோமா? எல்லோரும் ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள். உடன் பிறப்புக்களுக்கு என்ன செய்தோம் என்று பார்த்தால், யாராவது பண உதவி கேட்டுவந்தால் ஒரு 10 பவுணை ஒரு முறை அல்லது இரண்டு முறை கொடுத்துவிட்டு அத்துடன் நிறன்று விடுகிறோம்.. அங்கே வறுமைக் கோட்டு கீழே வாழும் மக்கள், போரினால் கணவனை இழந்த பெண்கள், தாய், தகப்பனை இழந்து பிள்ளைகள், கல்விக்காக ஏங்கித் திரியும் சிறார்கள், ஒரு நேரச் சாப்பாட்டிற்கே ஏங்கும் குடும்பங்கள் இவர்களை எண்ணுங்கள். தானாக தர்மம் செய்ய மனம் தூண்டும்.

இங்கே ஈழத்து மக்களுக்காக உதவி செய்ய தர்ம ஸ்தாபனங்கள் இருக்கின்றன. அவற்றில் நீங்கள் நம்பும் ஒன்றைத் தெரிவு செய்து அவர்கள் மூலம் உதவலாம். அல்லது அங்கே இருக்கும் உங்கள் உறவுகளின் மூலம் உதவி செய்யலாம். அறம் செய்ய பல வழிகள் உள்ளன. வன்னி மக்களுக்கு உதவி செய்யவதன் மூலம் புண்ணியம் தேடுங்கள்.

இந்த வாழ்வு நிலையற்றது. நிலைக்கும் எனறு நினைப்பவர் அறிவு குன்றியவராவர்.
வள்ளுவர் என்ன சொல்கிறார்.-

*"அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது*
*பொன்றுங்கால் பொன்றாத் துணை"*

இன்றைக்குப் பார்க்கலாம் நாளைக்குப் பார்க்கலாம் என்றிராமல், காலத்தைப் பாராமல், தள்ளிப்போடாமல் எப்போதும் அறஞ் செய்து இறைவனடி சேர முயற்சிப்போம்.

**"அறம் செய்வீர்.**
**அதை நன்றே செய்வீர்**
**அதுவும் இன்றே செய்வீர்"**



**முப்பத்து இரண்டு அறங்கள்**

1.ஆதரவற்றர்க்கு இடம்,

2.ஓதுவார்க்கு உணவு,

3.அறுசமயத்தோர்க்கு உண்டி,

4.பசுவிற்குப் புல்,

5.சிறைச் சோறு,

6.பிச்சை இடுதல்,

7.தின்பண்டம் நல்கல்,

8.அறவைச் சோறு,

9.மகப்பெறுவித்தல்,

10.மகவு வளர்த்தல்,

11.மகப் பால் வார்த்தல்,

12.அறவைப்பிணம் சுடுதல்,

13.அறவைத் தூரியம் (ஆடை),

14.சுண்ணம்,

15.நோய்க்கு மருந்து,

16.வண்ணார்,

17.நாவிதர்,

18.கண்ணாடி,

19.கூதோலை,

20.கண்மருந்து,

21.தலைக்கு எண்ணெய்,

22.பெண்ணின் நன்மை,

23.பிறர் துயர் நீக்கல்,

24.தண்ணீர்ப்பந்தல்,

25.மடம்,

26.தடாகம்,

27.பூஞ்சோலை,

28.ஆவுரஞ்சு கல் நாட்டல்,

29.விலங்குகளுக்கு உணவு,


30.ஏறுவித்தல்,

31.தியாகம்,

32.கன்னிகாதானம்

# பிடியரிசித் தொண்டு

ஆழ்கடலோன் முருகவேள்



*நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்*

*தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்*

*தங்கடனடி யேனையும் தாங்குதல்*

*என்கடன் பணி செய்து கிடப்பதே* - திருநாவுக்கரசர்

ஒரு கையினாலே விரல்களை வளைத்து அள்ளும்போது வருவதே பிடியரிசி பிடி+அரிசி: பிடியரிசி. அதே கையினால் நிறைய எடுப்பது சிறங்னை. நமக்கு மூன்று தலைமுறையின் முன்னே வாழ்ந்த சைவப் பெருங்குடியினர் ஒரு காணிக்கை மேற் கொண்டனர். அதுவே பிடியரிசிச் (சேமிப்பு) இயக்கம். பனையோலையில் பிடியரிசி கொள்ளும்படி இழைப்பது குட்டான் எனப்படும். இதைப் பனை நாரினால் பொருத்தி மட்டை கட்டிக் கொடுப்பர். இதையே பிடியரிசிக் குட்டான் என்பர். இதை ஒவ்வொரு .இல்லங்களிலும் சமையற்கட்டிற் தொங்கவிடுவர்.

அன்றைய அன்னைமார்களும் பாட்டன் மார்களும் சமையற் பாத்திரங்களில் அரிசிபோடுகையில் ஒரு பிடி அரிசியை அள்ளி இக்குட்டானில் போடுவார்கள். காரணம் சமையல் அரிசி முடிந்தால் இதைப் பாவிக்கலாம். தெண்டலுக்கு வருபவர்களுக்கும் கொடுக்கலாம். தெண்டல் காணிக்கை ஒரே பொருளென "நாய்க்குண்டு" தெண்டு எனப் பட்டினத்தார் பாடியுள்ளர். அறுபது எழுபது ஆண்டுகளுக்கு முன்பு கதிர்காமத்தில் இருந்து வந்து "கதிர்காமம் கதிரமலை உச்சி தண்ணீர்ப் பந்தலுக்காகத் தெண்டலுக்கு வந்திருக்கிறேன் என உரக்கக் கத்துவார்கள். இக் காரியம் காலப்போக்கிற் கோயிலைக் கொண்டு நடத்தவும் திருப்பணி வேலைகளை முன்வைத்தும் இந்தப் பிடியரிசிக்குட்டான் ஊர்தோறும் வழங்கப் பட்டது,

நாவலர் பெருந்தகை இதை முன்னிறுத்தி வேண்டுதற் பத்திரம் ஒன்று வெளியிட்டிருக்கிறார், கீரிமலையில் அமைந்த திருத்தம்பலேசுவரம் (நகுலேசுவரம்) சிதைவுற்றபோது இதற்கோர் துண்டுப்பிரசுரம் 1878-வெளியிட்டிருக்கிறார். அதன் முக்கிய பகுதி இது –

கீரிமலைக்கு சமீபத்தில் உள்ள ஊர்களில் வசிக்கிற சைவசமய சனங்கள் இந்தச் சிவதர்மத்தின் பொருட்டுத் தங்கள் தங்கள் வீடுகளிலே போடப்படுகின்ற குட்டான் களிலே நாள் ஒன்றுக்கு ஒரு படி அரிசி போட்டு அந்த அரிசியை மாதமுடிவில் வரும் தெண்டல் ஆளரிடம் (சேகரிப்பவர்) ஒப்பித்தல்.

நகுலேசுவரம் -.பக்கம் 59

இம் முன்னோடியான செயற்பாடு ஆலய நிர்மாணத்திற்கும் அந்த ஆலயத்தை நிர்வகிப்பதற்கும் பேருதவியாய் அமைந்தது.

கொக்குவிற் பகுதியிலமைந்த சில ஆலயங் களை நடத்துவதில் ஏற்பட்ட நெருக் கடியைத் தீர்க்க, கோவில் ஆலய நிர்வாகிகள் அங்கேயும் இதே பிடியரிசிக் குட்டானை அறிமுகம் செய்து வெற்றியும் கண்டனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற் பகுதியில் (1879) சமய மறுமலர்ச்சியும், அடியார் பணியும் தலைசிறந்து



விளங்கியது. "அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தலே மண்ணிற் பிறந்தர் பெறும் பயன் என்ற கொள்கை யாம்பாணக் குடாநாட்டின் நாலா பக்கங்களிலும் பரவியிருந்தது. எந்த ஏழை வீட்டிலும் "பிடியரிசி" போட்டு வைக்கும் வழக்கம் இருந்தது. ஒரு குறிப்பிட்ட அளவு அரிசிவந்து சேர்ந்ததும், கோவில்களிலோ மடங்களிலோ கொண்டு சென்று சோறு ஆக்கி, அன்னதானம் அடியார்க்கு அளிக்கும் வழக்கம் இருந்தது. அதன் உயர்ந்த பயனை சைவ மக்கள் நன்கறிவர்.

இந்த நடைமுறையைக் கிறீத்தவப் பாதிரி மாரும் மேற்கொண்டதாக நூல்கள் கூறு கின்றன. கொழும்பிலுள்ள காலிமுக கிறீஸ்துநாதர் ஆலயத்தில் அன்று பாதிரி யாக இருந்தவர் "மில்

றோலண்ட் (Pope Mill Rowland). இவர் காலத்தில் இவரின் மனைவியால் பிடியரிசிக் காணிக்கை முதன் முதலாக தேவாலயத்தில் அறிமுகப் படுத்தப்பட்டது.



சமையலுக்கு முன்பாக பெண்கள் சமைக்கும் அரிசியில் ஒரு பிடியை வேறாக எடுத்து வைத்துக்கொள் வர். ஒவ்வொரு மாதத்தின் முதல் ஞாயிறு மாலை சேகரிக்கப்பட்ட அரிசி தேவாலயத்திற்கு கொண்டு வரப்பட்டு அங்கு வரும் வறியவர்களுக்கு கொடுக்கப்பட்டது. 1971ம் ஆண்டு ஐப்பசி மாதம் "றோலண்ட." பாதிரியார் இலங்கையில் இருந்து மாற்றம் பெற்றுப்போக "வூர்" பாதிரியார் (Pope Wood) இலங்கை வந்து பாரமேற்றார்.. இவர் காலத்தில்தான் கிறீத்துவ ஆலயங்களில் தமிழிலும் ஆராதனை செய்து வழிபட வேண்டிய ஒழுங்குகள் ஆரம்பிக்கப்பட்டது. இப்பழக்கம் எல்லா ஊர்களிலும் அறிமுகப் படுத்தப்பட்டு தேவாலயங்களில் பூசைக் காரியங்கள் தவறாது செய்யப்பட்டன. ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற முறையில் வழிபாடுகளில் பங்குபற்றும் வாய்ப்பை இப்பழக்கம் மக்களுக்கு அளித்தது அதன் சிறப்பம்சமாகும்.

யாழ்ப்பாணப் பகுதிகளிலும் இந்தச் சிறந்த முறை மக்கள் எல்லோரையும் கோயிற் பணிகளில் ஈடுபட வைத்தது. கொக்குவிலிலும் கோயிற் பூசைக் கிரமங்கள் நடைபெறச் சங்கடங்கள் ஏற்பட்ட போது அடியார்கள் பிடியரிசி முறை மூலம் அதைப் பணமாக்கி பூசைகள் தவறாது நடைபெற வைத்தனர் என்பதில் வியப்பில்லை.

– கொக்குவில் கிருபாகரசிவசுப்பிரமணிய சுவாமி கோவில் - பக்கம் 29

பாலும் பழமும் தேனும் மோரும் அன்னமும் நிறைந்த வன்னி இன்று வெறிச்சோடிக்கிடக்கின்றது.

பல ஆலயங்கள் அழிந்துபோயின. ஒரு பிடியரிசி போட ஆளுமில்லை. அரிசியு மில்லை. இறைவா! வழிகாட்டு ஒளிவிளக்வே!

## 2004ல் மறைந்த எமது சங்கத் தமிழ்ப் பாடசாலை ஆசிரியர் கவிஞர் செல்லையா நாகேந்திரனின் சில பதிவுகள்:

**மனித இனத்திற்காக கவிஞரின் வேண்டுதல்:**

மக்களின் அமைதிக்கு முதன்மை பூண்டு
அனைவர் மனத்திலும் அன்புள்ளம் கண்டு
அழிவுப் பாதைகளை அகற்றித் தாண்டி
ஆறறிவு அனைவர்க்கும் செயற்பட வேண்டும்
ஆதிக்க வெறித்தனம் அனைத்தும் மாண்டு
அனைவர் மனத்திலும் அன்புள்ளம் நீண்டு
அனைவரும் நாட்டில் வயிறார உண்டு
அமைதி பெருக நெஞ்சே நீ வேண்டு!


**காகத்திடம் கவிஞர் கண்ட உண்மைகள்:**

பார்த்த சிறு உணவையும் தானுண்ணும் முன்
சேர்ந்த இனத்தையும் கூவியழைத்துப் பகிர்ந்துண்டு
இனத்தில் ஒன்றுக்கு ஒரு கெடுதல் நேர்ந்திட்டால்
மனங் கொதித்து வருந்திக் கரையும் பறவை.
கட்டிடக் கலைஞர் மின்தாங்கி அமைப்பது போல் தன்
முட்டைக் குஞ்சுகளை இடிமின்னல் தாக்காது காக்கத்
தேடிப் பொருத்தமான சிறுலோகத்தை கூட்டிலிணைக்கும்
ஈடில்லா விஞ்ஞானத்தைப் பரம்பரையாய் கொண்ட பறவை.

**கவிஞர் பார்வையில் சில மனிதரின் ஆசைகள்:**

வங்கிகளை ஏமாற்றி கடன் பெற்றுச்சிலர்
வேறிடம் சென்று வாழ்ந்து கொள்ள ஆசை
பங்கு முறைகளில் தொழில் நடத்திச் சிலர் பின்
பங்காளிகளை உதைத்துத் தள்ளிவிட ஆசை
எங்கு சென்றாலும் உழைத்து உண்ணாதுசிலர்
ஏமாற்றித் தந்திரமாய் பிழைத்திட ஆசை
அங்கங்களை அசைத்து நாட்டுக் குழைக்காத சிலர்
அங்கங்களை காட்டி பணஞ்சேர்க்க ஆசை.

# பிள்ளையாரும் செவ்விளநீரும்



பல ஆண்டுகளுக்கு முன்பு அளவெட்டி என்ற கிராமத்தில் ஒரு ஏழைக் குடியானவன் தன் மனைவியுடனும் இரண்டு பிள்ளைகளுடனும் வாழ்ந்து வந்தான். அவனது தொழிலோ அன்றாடம் கூலி வேலை செய்வது. யார் அவனைக் கூப்பிட்டாலும் மறுப்புக் கூறாமல் அவர்கள் தரும் கூலியைப் பெற்றுக்கொண்டு, அவர்கள் தரும் பணத்தில் தன் சீவியத்தை நடத்தி வந்தான் அவனது மனைவியோ வருமானத்திற்கேற்ப கஞ்சியோ கூழோ காய்ச்சி அவனுடனும் பிள்ளைகளுடனும் அவனுக்கேற்ற மனைவியாக வாழ்க்கையை ஓட்டி வந்தாள்.

அவர்களின் குடிசை வீட்டிற்கு அரைகாத தூரத்தில் ஒரு வேப்ப மரத்தின் கீழ் ஒரு கல்லை வைத்து பிள்ளையாராக அந்த கிராம மக்கள் வழிபட்டு வந்தார்கள். அந்த பிள்ளையாருக்கு ஒரு அர்ச்சகரும் இருந்தார். அந்த அர்ச்சகரும் கோயிலுக்கருகாமையில் வசித்து அன்றாடம் பூசை முதலிய காரியங்களை பிள்ளையாருக்குத் தவறாமல் செய்து வந்தார்.

இந்த ஏழைக் குடியானவனுக்கு அந்த பிள்ளையாரிடம் மிகவும் பக்தி. அந்த வறிய நிலையிலும் அவன் காலையும் மாலையும் பிள்ளையாரைத் தவறாது வழிபட்டு வருவான். ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் அவன் தனது குடும்பத்துடன் கோவில் செல்வது வழக்கம்.

அந்தக் குடும்பத்திற்கு, எல்லோரும் கடவுளிற்கு அபிசேகம் செய்வது போல தாங்களும் செய்ய வேண்டும் என்றொரு விருப்பம் தோன்றியது. ஆகவே அர்ச்சகரிடம் தங்களது வேண்டுகோளைக் கூற, அர்ச்சகரும் பால், பழங்கள், பூக்கள், தேங்காய், இளநீர், கற்பூரம், பொங்கலுக்கு அரிசி இவைகளுடன் ஒரு நாளும் குறித்து அவனை அனுப்பி வைத்தார்.

அதுவும் ஒரு வெள்ளிக்கிழமை. பகல் நேரப் பூசை. அவனுடைய நிலையோ அன்றாடம் வரும் வரு-மானத்தில் வாழும் நிலை. இரண்டு நாளைக்கு முன்பேஅவனுடைய மனைவியை அனுப்பி ஒவ்வொரு வீடாய்ப்போய் அரிசியை மடிப்பிச்சையாக வாங்கியரச் சொன்னான். அவளும் சில வீடுகளுக்குப்போய் வேலைசெய்து வருவதால், கணவனுக்கு மறுப்புச் சொல்லாமல் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று ஒரு பிடி அரிசி வாங்கி, கிட்டத்தட்ட இரண்டு கொத்தரிசி சேர்த்துவிட்டாள். அவர்கள் வீட்டில் பசு கன்றுடன் இருந்தபடியால் பால் வாங்க வேண்டிய தேவை யிருக்கவில்லை. அவனுடைய கொட்டில் வீட்டின் முற்றத்தில் பூ மரங்கள் இருந்தபடியால் பூக்கள் குறைவாக இருந்தாலும் அயல் வீடுகளிலும் பூக்களை பிடுங்கிக் கொள்ளலாம். தேங்காய் முதலிய பிற சாமான்களையும் பெறுவதில் சிரமம் இருக்கவில்லை. ஆனால் செவ்விளநீருக்கு எங்கே போவது?

தனக்குத் தெரிந்த வீடுகளிலும் தான் வேலை செய்து வரும் வீடுகளிலும் போய்க் கேட்டான். இளநீர் இருந்தும் சிலர் 'உனக்கெல்லாம் இளநீர் தேவையாய்க் கிடக்குதோ' என்று ஏசிக் கலைத்தும் விட்டனர். இன்னும் சிலரோ 'அன்றாடம் காய்ச்சிக்கெல்லாம் கோயில் பூசையெல்லாம் தேவை-யோ?,' என்றும் ஏசினர். அவன் மிகவும் மனம் வருந்தி வீடு திரும்பி தன் மனைவியிடம் நடந்ததை கூறினான்.

நான் ஒரு ஏழை. அன்றாடம் காய்ச்சியாய் இருந்தால் அபிஷேகம் செய்ய நினைக்கக் கூடாதோ? அவனுக்கு அழுகை, அழுகையாய் வந்தது. 'நீங்கள் ஏன் கவலைப்படறியள். நாங்கள் குடுத்து வைத்தது அவ்வளவுதான். என்ன செய்வது, இருக்கிற சாமான்களைக் கொண்டுபோய் அர்ச்சகரிடம் கொடுப்போம்' என்று அவனுடைய மனைவி சொன்னாள்.

அவளும்தான் என்ன செய்வது? "சரி, நான் ஒருக்கா அர்ச்சகர் வீட்டிற்கு அருகாமையில் ஒரு தோட்டம் இருக்கிறது, அங்கேபோய் இளநீர் கிடைக்குமா என்று விசாரித்துக்கொண்டு வருகிறேன் என்று தன் மனைவியிடம் கூறிவிட்டு அந்த ஏழை போய்விட்டான். ஏழைக்கோ அங்கும் இளநீர்க் குலை கிடைக்கவில்லை. " என்ன செய்வது நாங்கள் குடுத்து வைத்தது அவ்வளவுதான் " என எண்ணி இருப்பதைப் கொண்டு போய் அர்ச்சகரிடம் கொடுப்போம் என் முடிவெடுத்தான்


அடுத்த நாளும் வந்தது. காலையில் எழும்பிக் குளித்துக் கடவுளை வணங்கிவிட்டு மனைவி, பிள்ளையுடன் தான் சேகரித்த அரிசி, தேங்காய்,பால். பழங்கள் ஆகியவற்றுடன் கோவிலுக்குச் சென்று கடவுளை வணங்கி பின் அர்ச்சகரிடம் தான் கொண்டு

வந்தனவற்றை அபிசேகத்திற்கு கொடுத்தான்.

அர்ச்சகர் எல்லாவற்றையும் சரிபார்த்துவிட்டு, “ஏன் இளநீ கொண்டு வரவில்லை” எனக் கேட்டார், அவனும் தனக்கு நடந்ததை விலாவாரியாக சொன்னான். அர்ச்சகரும் இப்படியும் மனிதர்கள் இருக்கிறார்கள்தானே என தனக்குள் நினைத்துக் கொண்டு, “நீ கவலைப்படாதே! பிள்ளையாரின் அருள் இருந்தால் இளநீர் கிடைக்கும்” என்று சொல்லிவிட்டு அருகில் இருந்த தென்னந்தோப்பிற்கு சென்று பார்த்தார்.

நேற்று அந்த ஏழைக்கு இளநீர் கிடைக்காத அந்தத் தோட்டத்தில் ஒரு தென்னையில் பச்சை இளநீர்க் குலையும் இன்னொரு தென்னையில் செவ்விள நீர்க்குலையும் இருப்பதைக் கண்டுகோவிலுக்கு வந்து செய்தியைச் சொன்னார். இந்த அதிசயித்தைக்கேட்ட அந்த ஏழையும்அங்கு வந்தோரும் அங்கே கூடிக் கதைக்க அந்த கிராமமே அங்கு கூடிவிட்டது.

அர்ச்சகரும் அந்த ஏழைகளைக் கூட்டிக் கொண்டுபோய் இளநீர்க் குலைகளைப் பறித்து வந்து அன்றைய அபிடேகத்தை விமரிசையாகச் செய்து முடித்தார். பின்பு அங்குள்ளோருக்கு அர்ச்சகர் பின்வருமாறு கூறினார். “ கடவுள் மீது நம்பிக்கை வைக்கிறவர்களுக்கு கடவுளின் அனுக்கிரகம் கிடைக்கும். கடவுள் அவன் ஏழை, இவன் பணக்காரன் என்று பார்க்கிறவரல்லை. அவன் தன்மீது அளவற்றபிரியம், பக்தி, எல்லாம் அவன் செயல் என்று பலனை எதிர்பார்க்காமல் தன்னை அணுகுபவர்களை கடவுள் வஞ்சித்தது இல்லை”.



இன்றும் அளவெட்டிக் கும்பிளாவளை பிள்ளையார் கோவிலிலுள்ள கோபுரத்தின் ஒரு சிற்பத்தில் பச்சைத் தென்னோலையும், ஒரு பச்சை இளநீர் குலையும் ஒரு செவ்விளநீர்க் குலையும் இருப்பதைக் காணலாம்.



## வாசித்துக் கிழித்து வைத்தவை

### திதி

தாத்தாவிற்கு திதி

செத்துப் போனவங்க காக்கைளாக
வருவாங்களாம்!

வீட்டு முற்றத்தில் இலை போட்டு
காக்கைகளுக்கு படையலிட்டார் அப்பா!

வயிறு நிரம்ப சாப்பிட்டன எல்லா
காக்கைகளுமே!

ஆரம்பித்திலிருந்தே கவனித்து விட்டேன்

ஒரேயொரு காக்கை மட்டும்

சாப்பிடலாமா... வேண்டாமா ---

என்கிற யோசனையிலேயே தனியே ஒதுங்கி
நின்றது!

ஒரு வேளை வாழ்ந்த காலத்தில் சோறு போட
வக்கில்லாமல் அப்பாவால்
முதியோர் இல்லத்துக்கு துரத்தப்பட்ட...

தாத்தாவாகக்கூட இருக்கலாம் அந்தக் காக்கை!

### பசி

ஒரு பிடி சோறின்றி

பசியோடு செத்துப் போனான்

ஊர் கூடித் தூவியது நிறையவே வாய்க்கரிசி.

### தங்கம் தந்தும் திருப்தி இல்லையா?

பரம ஏழை ஒருவன் தெய்வ வரம் பெற்ற நண்பன் ஒருவனைச் சந்தித்தான். இவனது ஏழ்மையை உணர்ந்த நண்பன் அருகில் கிடந்த கல்லென்றை நோக்கித் தன் சுட்டு விரலை நீட்டினான். உடனே கல் தங்கமாயிற்று. அதை ஏழை நண்பனுக்குக் கொடுத்தான்.

ஆனாலும் அந்த ஏழை நண்பனுக்குத் திருப்தியில்லை. அருகில் இருந்த உருவ பொம்மையை நோக்கித் தன் சுட்டு விரலை நீட்டினான். உடனே பொம்மை தங்கமாயிற்று. ஏழை நண்பனுக்குக் கொடுத்தான். இப்போது திருப்தியா? என்று கேட்டான். ஏழை நண்பன் அதற்கும் முகம் சுளித்தான். அவன்

திருப்தியடையவில்லை என்பதை முகம் காட்டிக் கொடுத்தது. வேறு என்னதான் வேண்டும் என்று நண்பன் கேட்டான்.

சட்டென்று பதில் சொன்னான் ஏழை நண்பன்:
“ உன் சுட்டு விரல்”

# நினைப்பதை நினைத்தேன்

-(க. ஐயம்பிள்ளை. SLAS)

மனம் எதையாவது எப்போதும் நினைத்துக் கொண்டிருக்கிறது. நினையாத நேரமே இல்லையெனலாம்.அன்றாடம் எத்தனையோ மனிதர்களைச் சந்தித்து உரையாடுகின்றோம், எத்தனையோ மனிதர்களைக் காண்கின்றோம். ஆனால் உரையாடுவதில்லை. பல்வேறு விதமான காட்சிகள் கண்கள் ஊடாக கருத்திலே பதிகின்றன. இனிமையான நாதம் செவிவழிச்சென்று மனதிலே ஒலிப்பதிவு செய்யப்படுகின்றது. அழகான மழலைமொழிக் குழந்தையின் ஸ்பரிசம் மனதுக்கு இதமளிக்கின்றது. அறுசுவை உணவை வாய்மூலம் உட்கொள்ளும்போது அதன் சுவையை நாவானது அறிந்து, உணர்ந்து, மனதில் பதித்துவிடுகின்றது. இறைவன் சன்னிதியிலே எழுகின்ற நறும்புகை வாசமும் எமது சமையலறையிலிருந்து வரும் தாளித வாசனையும் மூக்கிலே நுளைந்து மனதிலே பதிகின்றன. இவ்வாறே ஐம்பொறிகள் ஊடாகவும் பெற்ற அனுபவங்கள் மனதிலே பதிவு செய்யப்படுகின்றன. இப்பதிவுகள் மாறிமாறி மனதிலே இடைவிடாது மேலெழுந்து அலைமோதிக் கொண்டேயிருக்கின்றன. இந்த நினைவலைகளிலே நல்லனவும் தீயனவும் கலந்திருக்கின்றன.

இராசத, தாமஸ, சாத்வீக குணங்களுள் சாத்வீக குணம் தலையெடுக்குமளவிற்கு மனதிலே சாந்தியும் நல்ல நினைவுகளுமே மேலெழுகின்றன. தாமஸ , இராசத குணங்கள் மேலோங்குமிடத்து அவற்றுக்குரிய மனநிலையையே ஒருவன் அடைகின்றான். அதற்கேற்ற மனப்பதிவுகளே மீண்டும் மீண்டும் மனத்திரையில் தோன்றி அத்தோற்றத்தின் தாக்கத்துக்கமைய மனதைத்திருப்பி உடலையும் செயற்படுத்துகின்றன. எனவேதான் நல்ல நூல்களைக் கற்க வேண்டும், நல்லோரிணக்கம் ஏற்படவேண்டும், அறச்சிந்தனை உள்ளத்திலே நிறையப்பெற வேண்டுமெனப் பெரியோர்கள், அறிவோடிணைந்த அனுபவச் சான்றோர்கள் அடிக்கடி மொழிந்தனர், தமது வாழ்விலே படியவைத்து வாழ்ந்து காட்டினர், வையத்தோர் வாழ்வாங்கு வாழவேண்டும் என்ற நற்கருணையினால்! எதையொருவன் மீண்டும் மீண்டும் நினைத்துக் கொண்டிருக்கின்றானோ அவன் அவ்வெண்ணத்திலே திண்ணியனாகின்றான். எணணத்திலே திண்ணியனாகிச் செயலிலே காட்ட இடைவிடாது முயன்றுகொண்டிருப்பவன் அதனையடைந்தே தீருவான். உலகத்திலேயுள்ள சாதனையாளர்களின் வாழ்வியற் சிந்தனைகளும் செயற்பாட்டின் வரலாற்றுச் தகவல்களும் இவ்வுண்மையை வலுப்படுத்துவன. இதனாலன்றோ சான்றோர் "எண்ணமே வாழ்வு"என்று இயம்பிப் போந்தனர் மூதறிஞர் வள்ளுவப் பெருந்தகையும்,

***"வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர்தம்***
***உள்ளத்தனையது உயர்வு",***

என்று எடுத்துரைத்தது உளங்கொள்ளத்தக்கது. எனவேதான், நினைப்பதெல்லாம் நல்லனவாக இருக்கவேண்டும், உயர்ந்த இலட்சியத்தை அடைவதற்கு இட்டுச்செல்வனவாக இருக்கவேண்டும். இதையே,

***"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்".***

என வள்ளுவர் முன்பே மொழிந்தருவியுள்ளார்.

ஆகவே, ஆன்மிக வளர்ச்சிக்காக முயல்பவன் நல்ல சிந்தனையுள்ளவனாக, உயர்ந்த சிந்தனையுள்ளவனாக மாறவேண்டும். இறைநம்பிக்கையிலே தளராத இறுக்கமான பிடியில் உள்ளனவாக மிளிரவேண்டும், தொடர்ச்சியான பிடிப்பு இருக்கவேண்டும்.

*"யானுனைத்தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்*
*எங்கெழுந்தருளுவ தினியே"*

என்று பக்தி வைராக்கியத்துடன் மாணிக்கவாசக சுவாமிகள் கூறுவார்.

இறைவனைப்பற்றிய பிடிதளராதவனுக்கு வாழ்க்கையிலே தளர்ச்சியில்லை. என்றுமே இறைவனின் நாமத்தைச் சொல்லிக் கொண்டிருக்கவேண்டும். வெளியே உரத்துச் சொல்லக்கூடிய சூழல் அமையாதவிடத்து மனதிலே நினைத்துக் கொண்டிருக்கவேண்டும். இவ்வாறு நினைத்துக்கொண்டு செயலாற்றிக் கொண்டிருக்கும் போது செயலின் பழு தெரிவதில்லை. செயல்முற்ற எடுத்துக் கொண்ட நேரம் தெரிவதில்லை. அயலில் உள்ளவர்கள் சிரிப்பார்களே என்ற வெட்கம் வந்து சேர்வதில்லை. மனம் சதா நினைந்து கொண்டேயிருக்கும்.

***"நற்றவாவுனை நான்மறக்கினுஞ் சொல்லுநா***
***நமச்சிவாயவே",***

என்று இடைவிடாது மனம் சொல்லிக்கொண்டிருக்கும் நிலையைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் எய்தியவர்கள், வையகம் வாழவேண்டுமென்ற திருவருள் நோக்கால் தேவாரப்பாடல் மூலமாக இவ்வரிய கருத்தை மக்கள் மத்தியிலே சென்று சேர வழிசமைக்கின்றார்.

பாரதப்போரின் போது போர்க்களஞ் சென்ற அருச்சுனன், தனது குருவை, சகோதரரை, மாமன்மாரை, பாட்டனாரை மற்றும் உறவினரை எதிர்தரப்பிலே காண்கின்றான். இவர்களையெல்லாம் கொன்றா நாம் இந்த ஆட்சியுரிமை பெற வேண்டும்? இத்தகைய கொடிய யுத்தம் தேவையில்லை. தாம் போரிடப் போவதுமில்லையென நினைக்கிறான். அம்பையும் வில்லையும் ஏந்திய கைகள் சோர்வடைகின்றன.. தேரிலிருந்து இறங்கி போர்க்களத்தைவிட்டு நீங்க எண்ணிய பார்த்தனைத் தடுத்து நிறுத்தி கண்ணன் சத்திரிய குலத்தவர்களது பண்புகளை எடுத்துக்கூறி, "துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனஞ் செய்தல் வேந்தர்களது கடமை.

எனவே கடமையைச் செய். பலனை எதிர்பாராதே. செயலின் பலனைக் கண்ணனிடமே ஒப்படைத்துவிடு என்று இறைவனின் சித்தமின்றி ஒருவராலும் அசையமுடியாது. துரியோதனன் ஆகியோரின் விதி முடிவடைகின்றது. அதை முடித்துவைப்பவன் இறைவன். அர்ச்சுனன் வெறும் கருவி மட்டுமே. அர்ச்சுனன் போர் செய்யவிட்டாலும் இறக்க வேண்டிய காலம் வந்தவர்கள் இறந்தே தீருவர்.

எனவே "அரச குலத்துக்குரிய கடமைகளைச் செய், இறைவனை நினைத்துக்கொண்டே செய், பலனெல்லாம் கண்ணனுக்கே அர்ப்பணமாகச்செய். நீ விரும்பியதை அடைவாய்", எனத் தெளிவூட்டியவர் மேலும் கூறுவார், அர்ச்சுனா, இறுதிக் காலத்தில் எந்தப் பொருளை நினைத்துக்கொண்டு ஒருவன் உடம்பை விடுகிறானோ எப்போதும் அந்தப் பொருளையே நினைக்கின்ற அவன் அந்தப் பொருளை அடைகின்றான்.

*"யம் யம் வாபி ஸ்மரன் பாவம் த்யஜத்யந்தே கலே-வரம்!*
*தம் தமேவைதி கௌந்தேய ஸதா தத்பாவபாவித",*

இது பகவத்கீதையிலே ஸ்ரீகிருஸ்ணர் அர்ச்சுனனுக்கு உபதேசித்த அருள்வாக்கு,

கௌந்தேய-குந்தியின் மைந்தனே, அந்தேயம்யம் வா அபிபாவம் - இறுதிக்காலத்தில் எந்த எந்தப்பொருளை, ஸ்மரன் கலேவரம் த்யஜதி - நினைத்துக்கொண்டு உடம்பை விடுகிறானோ, ஸதா தத்பாவ பாவித - எப்போதும் அந்தப்பொருளையே பாவிப்பவனாகிய அவன், தம் தம் ஏவ ஏதி – அந்தப்பொருளையே அடைகிறான்.

குந்தியின் மகனே, இறுதிக்காலத்திலே எந்த எந்தப் பொருளை நினைத்துக்கொண்டு உடம்பை ஒருவன் விடுகின்றானோ அந்த அந்தப் பொருளையே எப்பொழுதும் பாவிப்பவனாகிய அவன் அந்தப் பொருளை அடைகின்றான். (பகவத்கீதை. அத்.8)

வாழ்நாள் முழுவதும் எந்த எண்ணம் எம்மை வெகுவாகப் பாதித்திருந்ததோ அது மரணவேளையில் நம்முன் வரும். மரணத்தின் பின் அந்த எண்ணத்திற்கு ஏற்றவாறு அடுத்த பிறவி அமையும். மரணமில்லாப் பெருநிலையின் தலைவனான இறைவனை நினைத்தவாறு மரணத்தை அடைபவன், பிறவிகள் அற்று அவரை அடைகின்றான். எனவே, மரணத்தின்போது அவனைப்பற்றிய சிந்தனை ஓயாமல் எம் மனத்திலே தோன்ற வேண்டும்.எமது முயற்சி இன்றியே இச்சிந்தனை எழ வேண்டும். எண்ணத்திலே நிறைந்திருக்க வேண்டும். எவ்வளவுக்கு எவ்வளவு இறை சிந்தனை வருகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு ஏனைய பற்றுக்கள் கழன்று விடுகின்றன.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவனோடு தோழமை உணர்வோடு பழகி, நினைந்து வாழ்ந்த பெருநிலையாளர். அவர் கூறுவார்,

***"மற்றுப்பற்றெனக் கின்றி நின்றிருப் பாதமே மனம் பாவித்தேன***
***பெற்றலும் பிறந்தேன் இனிப் பிறவாத தன்மை வந்தெய்தினேன்***
***கற்றவர் தொழுதேத்தும் சீர்க்கறையூரிற் பாண்டிக் கொடுமுடி***
***நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே",***

என்று இறைவனுடைய பஞ்சாட்சர மந்திரத்தை நாள்தோறும் சொல்லிக்கொண்டே வர இறுதியில் எமது முயற்சி இன்றியே மனமானது "நமசிவாய" என்று சொல்லப் பழகிவிடுகின்றது. அவ்வெண்ணம் வாய்வழி வெளிவருகின்றது. இதற்கு அவர் செய்தது வேறு பற்றுக்கள் இன்றி இறைவன் திருவடிகளையே சதா நினைந்து நினைந்து அவர் மந்திரத்தைக் கூறிக்கூறிப் பயின்று வந்ததே ஆகும். இதன் காரணமாகவே, நாம் மறந்தபோதும் எமது நா "நமசிவாய" என்று சொல்லிக்கொண்டிருக்கும். இந்நிலை சுந்தரருக்கு வாய்த்தது. எனவே இவ்வாறு உயிர்மூச்சாகப் பிணைந்துவிட்ட இந்நினைப்பு மரணத்தின்போது மேலோங்கி இருக்கும். அதனால் மரணமிலாப் பேரின்பப் பெருவாழ்வு சித்திக்கும். பகவான் ஸ்ரீகிருஸ்ணர் பகவத்கீதையில் பகர்கின்றார்,

*"அப்யாஸ யோகயுக்தேன சேதஸா நான்யகாமினா!*
*பரமம் புருஷம் திவ்யம் யாதி பார்த்தானுசிந்தயன்",*

பார்த்தா - அர்ச்சுனா, சேதஸா ந அன்யாமினா- மனத்தால் வேறு எதையும் நாடாமல், அப்யாஸ யோகயுக்தேன- இடைவிடாத பயிற்சியில் ஈடுபடுகின்ற, பரமம், திவ்யம், புருஷம் - மேலான ஒளிமயமான இறைவனை, அனுசிந்தயன் யாதி – தியானிப்பவன் அடைகின்றான்.

"அர்ச்சுனா, மனத்தால் வேறு எதையும் நாடாமல் மேலான ஒளிமயமான இறைவனை இடைவிடாமல் தியானிப்பவன் அவனை அடைகின்றான்". என்பது இதன் திரண்ட பொருள்.

ஒரு விடயத்தைப்பற்றி உரையாடுகின்றோம், மனதிலே சிந்திக்கின்றோம், பின்னர் பல்வேறு செயற்பாடுகள் காரணமாக மறந்து விடுகின்றோம். சில காலத்தின் பின்னர் மீண்டும் அந்த நினைப்பு வருகின்றது. மனம் களிக்கின்றது. சில காலம் செல்ல மீண்டும் மறந்து விடுகின்றோம். இவ்வாறு மறந்து போகின்ற விடயங்கள் மீண்டும் மனதில் தோன்றுவதனை "நினைப்பு" என்கின்றோம். எனவே, நினைப்பு வந்தால் மறதி வந்திருக்கின்றதென்பது தெளிவாகின்றது. இருட்டு இருந்தால்தான் ஒளி வரும்போது ஒளி தெரிகின்றது. துன்பம் இருந்தால்தான் இனபம் வரும் போது உணரப்படுகின்றது. இரவு இருந்தால்தான் பகலின் தன்மை புலப்படுகின்றது. இவை போன்று மறந்திருந்தால்தான் நினைப்பு இடம்பெற வாய்ப்பு உண்டாகின்றது.

சிலசந்தர்ப்பங்களில் நினைப்பற்ற நினைவு இடம் பெறுகின்றது. முன்பு கூறியது போன்று மறந்த ஒன்றைத்தான் நினைக்க வேண்டிவரும். இங்கோ மறக்கவில்லை. எனவே நினைப்புக்கு இடமில்லை.

நினைப்பு அற்றுவிடுகின்றது. ஆனால் இறைவனது திருவடிபற்றிய நினைவிலேயே மனம் நனைந்து கொண்டிருக்கிறது. அவனது பரங்கருணைக்கடலில் அமிழ்ந்து கொண்டிருக்கின்றது. நாம் அந்த அருள் வெள்ளத்திலே ஆழ்ந்திருக்கின்றோம் என்ற உணர்வு தொடர்ந்து இருக்கின்றது: இடையீடில்லாமல் இருக்கின்றது. மறக்காமல் இருக்கின்றது: இந்த இடையீடற்ற தியானம், சிந்தனை, நினைப்பு வேறு எவ்வித பற்றுக்களும் இல்லாத நிலையில் வேறு எதுவித தெய்வத்தையும் ஏற்றுக்கொள்ளாத நிலையில், ஒன்றையே தியானிக்கின்றபோது சதா அதையே நினைக்கின்ற நிலை வருகின்றது. இதனையே மணிவாசகப்பெருமான், "நினைப்பற நினைந்தேன் நீ அல்லால் பிறிது மற்றின்மை" என்றார்.

இறைவனை நினைக்கவேண்டும் என்ற நினைப்பு அற்ற நிலையில், என்றும் இடையீடில்லாமல் வேறு பற்றுக்கள் அற்ற, ஒரே ஒரு பற்றான இறைவன் திருவடியை நினைந்துகொண்டே இருக்கின்ற நிலை நினைப்பற நினையும் நிலை அதுவும் பரமாச்சாரி வடிவத்தில் வந்த இறைவனின் திருவருள் பெற்ற காரணத்தினாலேயே அவனையே நினைந்து கொண்டிருக்கும்பேறு கிடைத்தது. ஆக " அவனருளாலே அவன் தாள் வணங்கி" அவனையே நினைத்துக் கொண்டிருக்கக்கூடிய சந்தர்ப்பம் மணிவாசகருக்கு கிடைத்தது.

***"இனறெனக் கருளிஇருள் கடிந்துள்ளத் தெழுகின்ற***
***ஞாயிறே போன்று***
***நின்றநின் தன்மைநினைப்பற நினைந்தேன் நீயலால்***
***பிறிதுமற் றின்மை***
***சென்றுசென் றணுவாய்த் தேய்ந்து தேய்ந் தொன்றாய்***
***திருப்பெருந் துறை யுறை சிவனே***
***ஒன்றும்நீ யல்லை யன்றியொன் றில்லை யாருன்னை***
***அறியகிற் பாரே"***

என்னும் திருவாசகம் மணிவாசகப் பெருமானது நிலையை உணர்த்தி நிற்கின்றது. "இறைவா அன்று குருந்த மரநிழலிலே பரமாச்சாரிய வேடங்கொண்டு எனக்கு அருள் செய்தாயே, அந்தப் பேரருளால் எனது உள்ளத்திலே நிறைந்திருந்த இருளினை விரட்டி, உதிக்கின்ற சூரியனைப் போன்று என்னகத்திலே நிறைந்தாயே. நீயலல்லால் வேறு எவருமே எனக்குத் தஞ்சமில்லை என்பதை உணர்ந்தேன். உன்னைத் தவிர வெறெவரும் சர்வ வல்லமை படைத்த இறைவனாக இல்லை என்பதையும் உணர்ந்தேன். ஆகவே, உன்னையே நினைந்தேன். இடையீடில்லாமல் நினைந்தேன்.

உன்னை நினைக்க வேண்டும் என்ற நினைப்பே இல்லாமல் உள்ளத்திலே பிரகாசித்துக் கொண்டிருந்த உதயசூரியனான உன் ஒளியிலே தொடர்ந்து திளைத்திருந்தேன் : உன்னை மறக்கவில்லை. மறக்காதபடியால் நினைக்கவேண்டிய நிலை எழவில்லை. எனவே, நினைப்பற நினைந்தேன். உனது அருளாய அமுதக்கடலில் அமிழ்ந்து கொண்டிருக்கின்ற எனக்கு உன்னைப்பற்றிய நினைவு தவிர வேறொன்றுமில்லை.

திருப்பெருந்துறையின் கண்ணே எழுந்தருளி இருக்கும் பெருமானே! இந்த அண்ட சராசரங்களில் காணப்படும் எந்தப்பொருளும் நீயல்ல. பல்வேறு தரப்பட்ட மதங்களில் கூறப்படும் தெய்வங்களும் நீயல்ல, உன்னையென்றெண்ணி வேதங்களும் ஆகமங்களும் எத்தனையோ பெயர்களும், வடிவங்களும் கூறுகின்றனவே. அவை ஒன்றுமே நீயல்ல, அனைத்தையும் கடந்து அப்பாலுக்கப்பாலாய் விளங்குகின்றாய், நீயில்லாமல் எந்தப் பொருளுமே இல்லை, நீயில்லாமல் எந்தத் தேவனும் இல்லை, எந்த மதத்து இறைவனும் இல்லை. எல்லாமாகத் தோற்றமளித்து நின் திருவளினாலே ஆட்டி வைக்கின்றாயே! நீயில்லால் எந்தப்பொருளுமில்லை. எவருமில்லை என்றால் என்னிடத்தும் உள்ளாய்தானே. என்னகத்திலே எழுஞாயிறாக உதிக்கின்றாயே. அத்தகைய உன்னை மறப்பேனா. மறந்தால் அல்லவா நினைப்பதற்கு! உன்னை நினையாது எனக்கு வாழ்வில்லை, எனது உயிர்மூச்சாக விளங்குகின்றாயே, யாரும் மூச்சு விடுவதற்கு நினைப்பதில்லையே. சுயமாக மூச்சுவிடும் இயக்கம் நிகழ்கின்றதே, இடையீடில்லாமல் நிகழ்கிறதே. உந்தன் நினைவும் எந்தன் உயிர்மூச்சோடு கலந்துவிட்டதே, இனி நான் நினைக்வேண்டும் என்று நினைக்காமலே நினைந்து கொண்டிருக்கச் செய்துவிட்டாயே, அதுவும் உனதருளாலேயே நினைப்பற நினைக்கின்ற நிலையை எனக்குத் தந்தாய்.

உனது திருவிளையாடலை யார்தான் அறியவல்லார்?

[மேற்படி கட்டுரை இலங்கை வவுனியாவைச் சேர்ந்த க. ஐயம்பிள்ளை SLAS அவர்களால் எழுதி வெளியிடப்பெற்ற **ஜோதியும் சுடரும்** என்ற நூலில் இருந்து எடுக்கப்பெற்றது. இந் நூலாசிரியர் இலண்டன் வந்திருந்தபோது இலண்டன் சைவ முன்னேற்ற சங்க மண்டபத்தில் 09-12-2013 அன்று வெளியிடப்பெற்றது. இந் நூலில் சைவ சித்தந்தம் பற்றிய 15 கட்டுரைகள் மிக எளிய நடையில் விளங்கத்தக்கதாக இடம் பெற்றுள்ளன.]

## உருத்திரன்

உருத்திரன் என்பதற்கு பல கருத்துக்கள் விளங்குகின்றன.


உருத்திரன் என்பது துன்பத்தை ஓட்டுபவன் என்று பொருள் கூறுவர். இதனைக் கந்த புராணம்

" இன்னலங் கடலுள் பட்டோர் யாரையும்
எடுக்கும் நீரால் உன்னரும் பரமமூர்த்தி
உருத்திரன் எனும் பெயர் பெற்றான்"

என்று கூறுகின்றது. இதன் பொருள் துன்பமாகிய கடலுள் வீழ்ந்துள்ள யாவரையும் தன் அருளினால் கரையேற்றிக் காப்பாற்றும் பரம மூர்த்தியாகிய சிவபெருமான் உருத்திரன் எனப் பெயர் பெற்றான் என்பதாகும்.

உருத்திரன் என்ற சொல் அழிக்கும் பொருளில் வரும் போது அக்கினியைக் குறிக்கிறது.

# அறத்தால் வருவதே இன்பம்



20.03.1938 - 29.12.2013

## சிவபதமடைந்த

# திரு பொன்னம்பலம் தெய்வேந்திரம்

இந் நாட்டில் 25 ஆண்டுகள் அறம் வளத்த பொன்மனம். துன்பப்பட்ட பலருடைய வாழ்க்கையில் ஒளி ஏற்றி வைத்தவர்.

ஈழத்தில் ஆயிரக்கணக்கான குழந்தைகளுக்கு மறு வாழ்வளித்தவர்.

பசி போக்கி, நோய்க்கு மருந்தளித்து, கல்வியறிவித்து, மனத்துயர் அகற்றியவர்.

அல்லல்பட்ட ஈழத் தமிழ் மக்களின் துயர் துடைக்க நல் வாழ்வுத் திட்டங்கள் உருவாக்கி நிதி திரட்டி பலரையும் நற் பணிகளில் ஈடுபடுத்தியவர்.

செயற்கரிய செய்த இப் பெரியார் பொன் தெய்வேந்திரத்தின் சேவையை அவர் வாழும் போது 16 ஆண்டுகளுக்கு முன் எங்களின் 20வது ஆண்டு விழாவில் நாம் வாழ்த்திப் பாராட்டினோம். தொடாந்தும் பாராட்டினோம்.


இன்று அவர் மறைவுக்கு அமைதியாகத் தலை வணங்கி
எமது மரியாதையைத் தெரிவித்து அவரின்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்


## - சைவ முன்னேற்றச் சங்கம்.

## சங்க யோக நிலைய அங்கத்தவர்கள் இப் புத்தாண்டில் (2014) கிளிநொச்சியில் ஆற்றிய சமூக சேவையின் ஆவணங்கள்

Case History:
AV, Pump-2. 2014. .
Beneficiary: Jeganathan Sarojinidevy, a widow, 47yrs. Her husband was announced lost during "Subjaya" operation in 1994. Police and forces informed that he was not with them.
Sarojinidevy lost both of her parents. She and her only child Miss Thamilarasi are being looked after by her mother's sister. Thamilarasi,18 yrs, school going.
Sarojinidevy, daughter, mother's sister and her old husband are working as a team in Sarojinidevy's land and growing manioc, coconuts, plantains and peanuts. They hire water pump for their efforts and desperately in need of a pump.
Ad: 149, 8th Veethy, Ambalnagar, Thiruvaiyaru.
Awaiting GS recommendation letter.







கீழே: ஈழத்தில் இடம்பெற்ற துயரச் சம்பவங்களால் பாதிக்கப்பட்ட மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தண்ணீர் வழங்கும் பணியிலும் மற்றைய சேவைகளிளும் 2013ம் ஆண்டு சங்க யோக நிலைய ஈடுபாட்டின் விவரமும் காட்சிகளும்.

**இப் பணியில் இணைய விரும்புவர்கள் 07770470527, அல்லது சங்க விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.**

| Date | Items | Details | Location | Amount |
|---|---|---|---|---|
| 10/02/13 | Water Pump | Widow Mrs | Klinochi | 200 |
| 10/02/13 | Water Pump | Widow Mrs | Mankulam | 200 |
| 18/02/13 | Water Pump | Widow Mrs | Klinochi | 200 |
| 10/03/13 | Water Pump | Widow Mrs | Klinochi | 200 |
| 10/03/13 | Water Pump | Widow Mrs | Mullithevu | 200 |
| 09/05/13 | Meal | 100 Mentally challenged children & Careers | Jaffna | 150 |
| 02/08/13 | School Library | Akkarayan Maha Vidlayam. 1000 O/L & A/C students benefit | Akkarayan Ku-lam | 965 |
| 06/10/13 | Tube Wells | 4 Tube wells in the war zone. 300 families benefits from each well. | Vannei | 750 |
| | | | Total | 2865 |





சங்க 36வது ஆண்டு விழாவின் போது திரு திருமதி செல்லத்துரை தம்பதிகளை வரவேற்றல்



சங்க 36வது ஆண்டு விழாவின் போது திரு செல்லத்துரை அவர்களை கௌரவித்த போது



சங்க 36வது ஆண்டு விழாவின் போது வருகை தந்திருந்த திரு. திருமதி பசுபதி தம்பதிகளுடன் Dr பாலசேகரம்



சங்க ஆலயத்தில் பிள்ளையார் பெருங்கதைப் படிப்பு பூர்த்தியன்று ஸ்ரீஞானவிநாயகப் பெருமானுக்கு வழிபாடு.





சங்க ஆலயத்தில் மார்கழித் திருவாதிரைத் திருவிழாவின்போது ஸ்ரீநடராஜப் பெருமானுக்கு அபிஷேகமும் அதன் பின் சிறப்பு அலங்காரமும்.

சங்கத்தில் மூத்தோர் நிலையத்தில் இப்போது தமிழில் தட்டச்சுப் பயிற்சியும் (word processing) அழகுக் கலை சம்பந்தமான பயிற்சியும் நடைபெறுகிறன.

தமிழ் தட்டச்சுப் பயிற்ச்சி ஆசிரியராக திருமதி. செல்வி சிவபாலன் அவர்களும் அழகுக் கலை பயிற்சி ஆசிரியராக திருமதி. ஜெனோவா பிரான்சிஸ் அவர்களும் பண்ணிசை ஆசிரியராக திருமதி. தயாளினி இஸ்கந்தமூர்த்தி அவர்களும் பயிற்சிவிக்கிறார்கள்.

















# your choice is CLEAR!




**Come to Bluebell for..**

INVISIBLE TOOTH STRAIGHTENING
GUM DISEASE TREATMENT
COSMETIC DENTISTRY
SMILE MAKEOVERS
GENERAL DENTISTRY
ORAL SURGERY & IMPLANTS
ENDODONTICS
CHILDREN'S ORAL HEALTH
EMERGENCY APPOINTMENTS
FACIAL REJUVENATION

**Book your FREE consultation today!**

## Bluebell is an Invisalign® Platinum Elite Provider.

**If you have teeth that stick out, are crooked, have gaps or overlap then Invisalign is the best choice for you with clear, almost invisible braces.**



***Dr Suki Kanagasabai-Shakthi*** *is one of the leading Invisalign® dentists in the UK. With her unique approach to an ethical and non-evasive path of treatment she has become an Invisalign® Platinum Elite Dentist, a title which is only held by a privileged few dentists in the UK.*




Bluebell®
dental practice & clinic
*Making a Difference*

CHIGWELL
**020 8500 6789**

STRATFORD
**020 8555 1144**

**www.bluebelldp.co.uk**

You Tube


GOSHIN ISSHINRYU KARATE ASSOCIATION
GOSHIN · ISSHINRYU KARATE
SENSEI M. RAMATHAS
TRAINED BY MICHAEL CALANDRA
THE SOLE AUTHORISED INSTRUCTOR IN THE UNITED KINGDOM OF
ISSHINRYU WORLD KARATE ASSOCIATION
OKINAWA - JAPAN
Instructor
Sensei E Sanjiv
3rd Dan
President
Sensei M Ramathas
4th Dan
GOSHIN ISSHINRYU KARATE ASSOCIATION - BRANCHES
Contact: Incharge & Instructor, Sensei M Ramathas
Gants Hill • Newbury Park • Ilford Lane • Chadwell Heath • Sutton • East Ham
New Branch in Catford - 07958 010 139 - goshinisshinryukarate@gmail.com


SHARON
Importers, Wholesalers, Distributor & Retailers
Specialist in: Srilankan and Indian Products
Fresh Fruits
Vegetables
Fish
Groceries
Off Licence
Food Products
311-313 Mitcham Road, Tooting, London SW17 9JQ
T: 020 8672 9353
F: 020 8672 6353
E: sharonsfood@aol.com

skillsforcare Accolades

community care at HOME

INVESTORS IN PEOPLE | Gold

# SATASH COMMUNITY CARE

Providing Specific & Unique Individualised Person Centred Care for
People with Learning Disabilities
and associated mental health needs (Autism/Aspergers)

Adult Residential Care Services

Children Residential Care Services

Domiciliary Care

Short Break / Respite

Outreach

உடல் வலிமை குறை அல்லது மன நோய் காரணமாக
உங்களுக்கோ அல்லது உங்கள் உறவினருக்கோ உதவி தேவைப்படின்
பல ஆண்டுகள் அனுபவமும் அங்கீகாரமும் பெற்ற எங்கள் சேவையை நாடுங்கள்.
அவரவர் தேவைகளுக்கேற்ற பராமரிப்பைத் திட்டமிட்டு வகுத்து அதற்கொப்ப
செயற்படுத்துவதில் எமது நிறுவனம் பல ஆண்டுகளாகப் பாராட்டப்பட்டு வருகின்றது.
மேலதிக விவரம் அறிய எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

Contact Us

01708 856592 (Adult's services)
01708 851189 (Children's services)
0203 200 1047 (Domiciliary care services)
07966 377298 (Logan)
07957 869620 (Letchmi)
logan@satashcommunitycare.com
letchmi@satashcommunitycare.com


S I Builders & DIY Ltd
Central Heating, Plumbing, Sanitary Ware,
Bathroom Suites, Electrical goods and paints
90-96 Katherine Road, London E6 12EN
Tel: 020 8471 1677
Open 7 days a week
Web: www.siplumbingandheating.co.uk
E-mail: si.buildres@hahoo.co.uk

# நடராஜரின் வடிவம்

சிவபெருமானுக்குரிய பல்வேறு மூர்த்தங்களில் சிறப்புக்குரிய மூர்த்தமாக விளங்குவது நடராஜர் வடிவமாகும். இவ் வடிவத்தினது மகா லட்சணங்களையும், தத்துவங்களையும் எடுத்து நோக்கும் போது இத்திருவுருவமானது சைவ சித்தாந்தம் கூறும் இயல்புகளையும், தொழில்களையும், இருவினையொப்பு, மலபரிபாகம், சத்தினிபாதம் ஆகிய அம்சங்களையும் ஒருங்கே விளக்குவதாகக் காணப்படுகிறது. சைவர்களிடையே நடராஜப் பெருமானை சிறப்பாக வழிபட அமைந்த ஆலயமாக சிதம்பரம் திகழ்கிறது. பெரும்பாலும் சிவாலயங்களில் நடராஜர் திருவுருவம் நிருத்த மண்டபத்தில் அமைந்திருக்கும்.

நாட்டிய சாஸ்த்திரத்திலும், சைவ ஆகமங்களிலும் 108 வகையான நாட்டிய கரணங்கள் பற்றிய குறிப்புகள் உண்டு. சிதம்பர ஆலய கோபுரம் ஒன்றின் இரு பக்கங்களிலும் நடராஜரின் 108 கரணங்களும் சித்தரிக்கப்பட்டுள்ளன. ஆகம விதிப்படியும், தியான மந்திரங்களுக்கு ஏற்ற வகையிலும் நடராஜப் பெருமானின் வடிவம் அமைக்கப்பட்டுள்ளது.

இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் ஏராளமான நடராஜர் வடிவங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. அவ்வாறே பல்லவ, சோழ காலப் பகுதிகளிலும் பல்வேறுபட்ட நடராஜர் திருவுருவங்கள் கிடைக்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இந்நடராஜர் திருவுருவம் கொண்டிருக்கும் இலட்சணங்களைப் பின்வருமாறு விளக்கலாம். அதாவது மூன்று கண்களையும், நான்கு தோள்களையும், நான்கு கரங்களையும் உடையதாக அமைக்கப்பட வேண்டும். மேலும் சாந்தமான குணமும் சிவப்பு நிறமும் புன்முறுவல் செய்யும் திருமுகம் உடையதாக அமைந்திருத்தல் வேண்டும். சிரசிலே கொக்கின் இறகு, கங்கை, பிறைச் சந்திரன், ஊமத்தை முதலானவை இருத்தல் வேண்டும்.

நான்கு கரங்களில் வலது புற முன்கரம் (அபய கரமாகவும்) பின் கரம் (டமர கரம்) உடுக்கினைத் தாங்கியதாகவும் இடது கரங்களின் முன் கரம் வீசித் தொங்கிய படி நிற்க பின் கரம் அக்கினியினை ஏந்தியதாக அமைகிறது. மேலும் இத்திருவுருவமானது இடது செவியில் திருத்தோடும் வலது செவியில் மகர குண்டலமும் அணிந்ததாகவும் உடல் முழுவதும் சுடலைப் பொடி பூசியதாகவும் இரத்தல் வேண்டுமென சிற்ப நூல்கள் கூறுகின்றன.

காமிக ஆகமத்தின்படி இத்திருவுருமானது கழுத்திலே கழுத்தணி, முத்தாரம், பாம்பு மாலை, சங்கு மாலை, பன்றிப்பல், புலி நகம், மணிகள், ஆமை ஓடு என்பவற்றை அணிந்ததாக அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

மேலும் இத்திருவுருவத்தின் வலது பாதமானது அபஸ்மார புருஷன் (முயலகன்) மீது ஊன்றி நிற்பதாகவும், இடது பாதம் தூக்கிய நிலையில் இருத்தல் வேண்டும். இத்திருவுவத்தைச் சுற்றி திருவாசி (பிரபா மண்டலம்) விளங்க வேண்டும். நடராஜரின் இடது பக்கத்தில் பார்வதியின் உருவம் இடம்பெறுதல் வேண்டும். நடராஜர் வடிவத்தைச் சுற்றி அமையும் திருவாசியானது பிரபஞ்சத்தைக் குறிப்பதாக அமைகிறது. அதனுள் அமிழ்ந்தும் சுற்று அடங்காதும் வெளிப்பட்டு நிற்கும். இவ்வடிவமானது இறைவன் பிரபஞ்சத்தில் உட்பட்டும் அப்பாற்பட்டும் நிற்கும் நிலையைச் சுட்டிக் காட்டுகிறது.

இவ்வடிவத்தின் வலது கரத்தின் பின்னுள்ள டமாருகம் தாங்கிய கரம் படைத்தல் தொழிலையும், முன்னுள்ள அபய கரம் காத்தல் தொழிலையும், இடது கரத்தில் அக்கினியைத் தாங்கி நிற்கும் கரம் அழித்தல் தொழிலையும், வீசித் தொங்கிய நிலையிலுள்ள இடது புற முன் கரமானது உலக அசைவுச் சுழற்சிக்கு நடராஜரே காரணம் என்பதையும், நடராஜப் பெருமானின் திருப்பாதத்தைச் சுட்டிக் காட்டிக் கொண்டும் இருக்கிறது.

அபஸ்மார புருஷனின் (முயலகன்) மீதுள்ள திருப்பாதம் மறைத்தல் தொழிலையும் தூக்கிய திருவடி அருளல் தொழிலையும் ஆற்று பவன் இறைவனே என சித்தாந்தம் கூறும் ஐந்தொழில் தத்துவத்தினை உணர்த்துகின்றது.

மேலும் நடராஜர் உடுக்கினை அசைப்பதன் ஊடாக மாயையினை ஆன்மாக்களிலிருந்து உதரி விலக்குகிறார் என்றும் அல்லது படைப்பினைக் குறிப்பது என்றும், கரத்திலே ஏந்தியுள்ள அக்கினியின் மூலம் ஆன்மாக்களின் வினைகளை எரிக்கின்றார் என்றும், ஊன்றிய திருவடி மூலம் ஆன்மாக்களை மறைக்கும அறியாமையை உலகப் பற்றுக்களில் இருக்கும் வேட்கையைப் போக்குகின்றார் என்றும் தூக்கிய திருப்பாதம் மூலம் பிறவாப் பேரின்பத்தை வழங்குகின்றார் என்றும் கூறப்படுகின்றது.

நடராஜரது திருநீலகண்டத்தை சுற்றியிருக்கும் நஞ்சானது திருவருள் சக்தியிலிருந்து இறைவன் விலகாத தன்மையைக் காட்டி நிற்கிறது.

இதனையே திருவருட்பயன்

தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தரும் சக்தி —
பின்னமிலான் எய்கள் பிரான்

என விளக்கி நிற்கிறது. சடா முடியில் காணப்படும் கங்கையானது உலகிற்கு உணவினையும் நீரினையும் வழங்குபவன் இறைவனே ஆவான் எனக் காட்டுகிறது. மேலும் புராணக் குறிப்பின் படி ஆகாயத்திலிருந்து கங்கை நீரானது மிக வேகமாக வந்து கொண்டிருக்க அதைத் தடுத்து சிரசில் தாங்கியவன் இறைவன் என்பதால் "வேகம் தடுத்தாண்ட வேந்தன்" என அழைக்கப்படுகின்றான். தலையினை அலங்கரிக்கும்

பிறைச் சந்திரன் "சாபம்" பெற்றுத் தனது கலைகளை ஒவ்வொன்றாக இழந்த போது அவருக்கு அபயமளித்தவர் இறைவனே ஆவான்.

இறைவன் திருமேனி எங்கும் பூசப்பட்டிருக்கும் சுடலைப் பொடியானது நாம் அனைவரும் இறுதியில் "ஒரு பிடி சாம்பலாவோம்" என்னும் தத்துவத்தைக் காட்டி நிற்கிறது. யானை உரி, புலித்தோலாடை முதலியவை தீயவர்களை அழித்து நல்லவர்களைக் காப்பாற்றுபவன் இறைவன் என்பதைக் காட்டுகிறது. இறைவனின் வலது பாதத்தின் கீழ் மிதிபட்ட வண்ணம் உள்ள அபஸ்மார புருஷன் ஆணவத்தின் அடையாளமாக விளங்குகின்றான். இது நாம் ஆணவத்தினை விலக்க வேண்டும் எனும் தத்துவத்தைக் காட்டுகிறது.

நன்றி – சைவ சமய விளக்கங்களும் ஆய்வுகளும்

# பொங்கல் வாழ்த்துக்கள்




எங்களைனைவருக்கும்
நல்லெண்ணங்களும் அவற்றை
நிறைவேற்றும் மனவுறுதியும் பிறந்து
மனித குலம் பயனடைக்கூடிய
அறங்களில் ஈடுபட்டு எல்லோருக்கும்
மனவமைதியுள்ள வாழ்க்கை அமைய
நாம் அனைவரும் இறைவனை
வணங்குவோமாக!

இதுவே எங்களின் தைத் திருநாள்
வாழ்த்துமாகும்!!



கலசம்
**KALASAM**

கலசம் உங்கள் வீடு தேடி வர வேண்டுமா? இப்படிவத்தை நிரப்பி அனுப்புங்கள்

If you would like your KALASAM to be posted, please fill in the form below and send it to us with your payment—payable to SMS UK. Postage and admin for two years: £10.00 (UK/Europe); £20.00 (Rest of the world).

பெயர் : ........................................................................ Donation: £ ......

முகவரி : ...................................................................... Postage: £ ......

........................................................................ Total: £ .....

........................................................................

**SMS Kalasam** 2 Salisbury Road ,Manor Park, London E12 6AB lalasam@hotmail.com

# தண்டியடிகள் நாயனார்

தமிழ்நாட்டில் திருவாரூர் என்ற நகரில் தண்டி அடிகள் என்ற ஒரு சிவனடியார் வாழ்ந்து வந்தார். அவர் எம்பெருமானாகி சிவபெருமானிடம் அதீத பக்தி கொண்டவர். அடியாராகிய தண்டி அடிகளார் எந்நேரமும் ஓம் நமசிவய என்ற ஐந்தெழுத்து மந்திரத்தை உள்ளன்புடன் ஓதி ஒருமனத்திருத்தி எம்பெருமானை அருகிலுள்ள கோயிலுக்கு சென்று வழிபாடு செய்து வந்தார்.

அப்படியிருக்கையில் அடியாருக்கு அக்கோவிலின் மேற்குக் கரையில் இருக்கும் குளத்தை விசாலிக்க வேண்டும் என்றதொரு எண்ணம் ஏற்பட்டது. அந்தக் குளத்தின் சுற்று வட்டத்தில் சமணருடைய குடியிருப்புகளும் சமணப் பள்ளிகளும் இருந்தன.

தண்டியடியாருக்கு தான் விரும்பியபடி அக்குளத்தை விசாலப்படுத்த முடியாதிருந்தது. காரணம் அவருக்கு பிறவியிலேயே இரண்டு கண்களும் பார்வை யற்றிருந்தன. அவரால் எப்படி அந்த மிகவும் கடினமான குளத்தை அகழ்விக்கும் வேலையைச் செய்ய முடியும்.?

ஆனால் அடிகளாருக்கோ தன்னம்பிக்கை அதிகம். அத்துடன் கடவுள் மீதும் அதிக பற்றுதலும் உள்ளபடியால் எம்பெருமானின் ஆசியுடன், முனைப்புடன் வேலையை ஆரம்பிக்கத் துணிந்தார். ஒரு மண்வெட்டியையும் மண் அள்ளுவதற்கு ஒரு கடகத்தையும் அத்துடன் ஒரு கயிறையும் எடுத்துக் கொண்டு அக் குளத்திற்குச் சென்றார். கயிற்றின் ஒரு முனையைக் குளத்தின் உட்கரையில் மண் அகழவேண்டிய இடத்தில் ஒரு தடியை நிறுத்தி அதில் கட்டினார். பின்பு தான் அகழ்ந்து எடுக்கும் மண்ணைக் கொட்டிக் கரையை உயர்த்துவதற்கு உரிய இடத்திற்கு கயிற்றின் மறுமுனையை ஒரு தடியை நிறுவிக் கட்டினார். இப்போது உள்ளே வெட்டப்படும் மண்ணை கயிற்றின் உதவியுடன் மேலே கொண்டு வரலாமல்லவா! அடியார்கள் இறைவனைத் தொழுது பஞ்சாடசர மந்திரத்தை ஓதிக்கொண்டே மண்வெட்டியினால் மண்ணை அகழ்ந்து, அதைக் கடகம் மூலம் தலையில் சுமந்து கொண்டு கயிற்றின் உதவியுடன் மேலே கொண்டு வந்து கொட்டும் வேலையைத் தொடங்கினார். தொடர்ந்து ஒவ்வொரு நாளும் இப் பணியை தண்டியடிகளார் செய்து வந்தார்.

இரண்டு கண்களும் தெரியாத தண்டியடிகள் குளத்தை அகலமாக்குவதை கண்டு பொறுக்காத மேற்குக் கரையில் குடியிருந்த சமணர்கள் அடிகளாரை ஏளனம் செய்யத் தொடங்கினார்கள். அவரின் நம்பிக்கையை குலைக்கவும் திட்டம் தீட்டினார்கள்.

அவர்கள் அடிகளின் முன்னே வந்து " நீர் இரு கண்களும் தெரியாத ஒரு குருடன். நீர் செய்வதையே உம்மால் பார்க்க இயலாது. அத்துடன் நீர் மண்ணை அகழ்வதால் பல ஆயிரம் உயிர்கள் கொல்லப் படுகின்றன. இதன் மூலம் நீர் பாவத்தைத் தேடுகிறீர் அல்லவா? ஆகையால் இவ்வாறான மூட்டாள்தனமான வேலையை நிறுத்திவிடும்" என்று கூறினர்கள்.

தண்டியடிகளோ, "இது ஒரு புனிதமான பணி. குளத்தை ஆழமாக்குவதால் இந்த நிலம் குளிர்மை அடைகிறதல்லவா? இதனால் இந்த நீர் இக்கிராம மக்களுக்கும் பயன் படுகிறதல்லவா? இதைச் செய்வதற்கு கடவுளின் அங்கீகாரம் எனக்குக் கிடைக்கும். நான் வணங்கும் எம்பெருமான் எவ்வுயிர்களையும் கொல்ல மாட்டார் என்ற நம்பிக்கை எனக்குண்டு" என்று கூறிவிட்டு தம் பணியைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தார்.

சமணர்களோ மீண்டும், "நீர் பிறவியிலேயே ஒரு குருடன். நாங்கள் சொல்வதைக் கேட்காதபடியால் இப்போது நீர் ஒரு செவிடனும் கூட. நாங்கள் கூறும் நல்ல அறிவுரைளைக்கூட கேட்கிறீரில்லை" என்று சொல்லி அவர் கட்டியிருந்த கயிற்றை அறுத்து தண்டியடிகளாரின் பணிக்கு இடையூறு செய்தார்கள்.

தண்டியடிகள் சமணர்களின் தொல்லைகளைத் தாங்க முடியாமல் மனம் வருந்தினார். கோயிலிற்குச் சென்று தான் வணங்கும் சிவபெருமானிடம் தளர்ந்த மனதுடன் முறையிடலானார்.

அன்றிரவு தண்டியடிகளின் கனவில் இறைவன் தோன்றி " தண்டியடிகளே! என்னுடைய ஆசியும் உதவியும் உமக்குப் பரிபூரணமாக உண்டு. நீர் உமது பணியைத் தொடர்ந்து செய்யவும்" என்று கூறி மறைந்தார்.

அதே போல் இறைவன் அந்த நாட்டின் அரச-னுடைய கனவில் தோன்றி " என்னுடைய அடியாருள் ஒருவனாகிய தண்டியடிகளின் மனத்துயரைப் போக்கிடு" என்று கூறி மறைந்தார்.

மறுநாள் அரசன் தண்டியடிகள் இருக்கும் ஊருக்குச் சென்று தண்யடிகளையும் அவருக்கு தொந்தரவு கொடுக்கும் சமணர்களளையும் அக்குளத்தருகே வரச்சொல்லி அவர்களின் பிரச்சனையைப் பற்றி விசாரித்து தெளிந்து " தண்டியடியாரே " நீர் சொன்னபடி இறைவனின் கடாட்சத்தால் உமது கண்கள் பார்வை பெறும், சமணர்களின் கண்கள் பார்வை இழப்பர்களென்பதை நிரூபித்துக்காட்டும்"

எனச் சொன்னான்.

தண்டியடிகளோ, “ஆம், எம்பெருமானே உலகின் முழுமுதற் கடவுள். அவனே தன்னை வழிபடும் அடியார்களின் துயர்துடைப்பவன். அவனே உண்மையானவன். நான் அவனிடம் அடைக்கலம் புகுந்தவன். அது உண்மையாயின் எனது பார்வையை நான் பெறுவதும் சமணர்கள் தங்களின் பார்வையை இழப்பதும் நடைபெற வேண்டும்” என்று பஞ்சாட்சர மந்திரத்தை உச்சரித்துக் கொண்டே அக்குளத்தினுள் மூழ்கலானார். என்னே அதிசயம். மூழ்கி எழுந்தவர் பார்வை பெறவும் அவரை சொற்களால் வருத்தியவர்கள் பார்வை இழப்பதும் சமகாலத்தில் நடந்தன. அரசனும் அங்கு கூடியிருந்தவர்களும் அதிசயித்துப் போனார்கள்.

அரசன் உடனேயே தன் நாட்டிலுள்ள அனைத்து சமணர்களையும் நாட்டைவிட்டு வெளியேறும்படி கட்டளையிட்டான். அத்துடன் தண்டியடிகளாருக்கு வேண்டிய உதவிகள் யாவற்றையும் செய்து கொடுத்து சைவசமயம் தழைத்தோங்க வழிவகுத்தான்.

*“குழி வாயதனிற் குழி நட்டுக் கட்டுங் கயிறு குளக்குலையின்*

*இழிவாய்ப் புறத்து நடுத்தறியோ டிசையக் கட்டி இடைதடவி*

*வழியால் வந்து மண்கல்லி எடுத்து மறித்துந் தடவிப் போய்*

*ஒழியா முயற்சி யாலுயர்த்தார் ஓதும் எழுத்தைஞ் சுடனுப்பார்* - பெரியபுராணம்



# THANDIYADIGAL

Thandi Adigal lived in Thiruvaroor. He was born blind. He desired to deepen the tank at Thiruvaroor. Hence he planted a wooden post on the bank, set up another stake at the bottom of the tank and connected them with a rope. With the help of the rope, he stepped down into the tank, dug out the earth, filled it in a basket, went up the tank and threw the earth on the bank.

The Jains disliked him and obstructed him from performing this divine service! The Saint did not pay heed to the talk of the Jains. So they mocked him by saying, “O blind one! Have you become deaf also?” They snatched his basket and threw it away. Thandiadigal became angry and exclaimed, “What will you do if I get back my sight?” “We will vacate Thiruvaroor”, they replied.

The following day, in the presences of the ruling king, Dandiadigal dipped himself in the water and rose up with complete vision. All the Jains became blind and left Thiruvaroor. The Saint performed selfless

# திருவாசகம் காட்டும் முக்திநெறி

## எஸ்.கருணானந்தராஜா

திருவாசகம் பக்திச் சுவையைப் பிழிந்து கொடுக்கும் திவ்யநூல். திருவாசகத்துக்கு உருகாதவர் ஒரு வாசகத்துக்கும் உருகார் என்பது பழமொழி.

வான் கலந்த மாணிக்க வாசக! நின் வாசகத்தை நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பம் சாற்றினிலே தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதுவே!

என்கிறார் வள்ளலார் பெருமான். கறந்த பால்கன்னலோடு நெய்கலந்தாற்போல சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நிற்கும் பெருமானாக இறைவனைத் தன் உள்ளத்தே கண்டு இன்புறும் மணிவாசகரின் அத்வைத அனுபவக் கருத்துக்கள் நிறைந்துள்ளதால், இறைவன் நமக்கு அண்மையிலும் அண்மையானவன் என்னும் நம்பிகையை திருவாசகம் படிப்போர் உணர்கின்றனர்.

இதே கருத்தை "விறகில் தீயினன் பாலிற்படு நெய்போல் மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்...." என்று அப்பரும், "உள்ளம்பெருங் கோயில் ஊனுடம்பு ஆலயம்.....தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்" என்று திருமூலரும், "உள்ளத்திலுள்ளானடி அதை நீ உணர வேண்டுமடி..", "நட்டகல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்.." என்ற வகையான விரிகள் வாயிலாகச் சித்த பரம்பரையினரும், "உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது" என்று சுவாமி விபுலானந்தரும் வலியுறுத்தியுள்ளனர்.

ரிக் வேதம் – 'பிரக்ஞானம் பிரம்மம்' அதாவது தூய அறிவே பிரம்மம் என்றும், யஜுர் வேதம் – 'அகம் பிரம்மாஸ்மி' நானே அந்த பிரம்மம் என்றும், சாம வேதம் - 'தத்வமஸி' - நான் பிரம்மம் ஆனால் என் எதிரில் நிற்கும் நீயும் அதுவே என்றும். அதர்வண வேதம் – 'அயம் ஆத்மா பிரம்மம்' – இந்த ஆத்மாவே பிரம்மம் என்றும். இந்தக் கருத்தை வலியுறுத்திக் கூறுகின்றன. கடவுள் ஒவ்வொரு ஜீவனிலும் குடிகொண்டிருக்கிறார். இதைத் தவிர தனியாக வேறு ஒரு கடவுள் இல்லை. இந்த உண்மையை எவ்வளவோ தவங்களுக்குப் பிறகு நான் புரிந்து கொண்டிருக்கிறேன்' என்கிறார் சுவாமி விவேகானந்தர். (http://vivekanandam150.com/?tag=தத்வமஸி) மணிவாசகர் தனது திருவாசகத்தின் மூலம் மேற்கண்ட கருத்துக்களை வலியுறுத்தினாலும் ஒரு சகுணோபாசகராகவே தனது ஆத்மீக வாழ்வை ஆரம்பித்திருக்கிறாரென்பதற்கு திருவெம்பாவையுட்படப் பல திருவாசகப் பாடல்களும் திருக்கோவையாரும் நமக்குச் சான்று பகருகின்றன.

சகுணோபாசகம் என்பது இறைவனை நம்மிலிருந்து பிரித்துப் பார்க்கும் நிலை. விக்கிரக வழிபாடுகளில் இறைவன் சகுணநிலையில் வைத்து வணங்கப்படுகிறார். அதாவது அவருக்கு உருவம், நிறம், குணம்போன்ற இயல்புகளுண்டு என்னும் நம்பிகையில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் வழிமுறைகளினூடாக இறைவனையடைய முயற்சிப்பதாகும். முறையே சாலோக, சாரூப, சாமீப சாயுச்ய முக்தி நிலைகளுக்கு இவ்வழிமுறைகள் பக்தனை இட்டுச்செல்கின்றன என்கிறது சித்தாந்தம்.

இவையெல்லாவற்றிற்கும் மேலாக உயர்ந்த பிறப்பற்ற முக்தியைக் கைவல்ய முக்தி காட்டுகிறது என்று வேதாந்திகள் கூறுவர். அதாவது: மிகச் சமீபமாக கையிலேயிருக்கும் வெண்ணெய்க்கு நிகரான பிரம்மத்தில் ஐக்கியப்பட்டுப் பிறப்பறுக்கும் நிலை. (http://www.kaumaram.com/anuboothi/na_028u.ht) இந்தக் கைவல்ய நிலையை அடைய இயமம், நியமம், ஆசனம், பிராணாயமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்னும் எட்டு யோகப் படி நிலைகளைக் கடக்க வேண்டுமென்கின்றனர். தற்காலத்தில் முதல் நான்கு படி நிலைகளும் தேவையற்றவை, வாழ்ந்து கொண்டிருக்கும் சற்குருவின் உதவியோடு ஐந்தாவது படிநிலையாகிய பிரத்தியாகாரத்திலிருந்து தொடங்கி முயற்சியிருந்தால் சமாதிநிலையை அடைந்துவிட முடியுமென்றும், கலியுகத்தில் இது மக்களுக்குக் கிடைத்தவோர் வரப்பிரசாதமென்றும் கூறி பல குருமார்கள் மக்களுக்கு வழிகாட்டுகின்றனர். எது எவ்வாறிருந்த போதும் பக்தியின்றேல் முக்தியில்லையென்பதே விதியாகும். யோகசாதனைகளைக் கற்று நிர்க்குணோபாசகனாகப் பரிணமிக்கும் ஒரு பக்தனின் ஆரம்பம் சகுண பக்தியிலேயே தொடங்குகிறது. இறைவனாயிருந்தாலும் அல்லது குருவாயிருந்தாலும் வழிகாட்டுபவர் மீது பிரேமபக்தி கொள்ளாது ஞானம் சித்திக்காது என்பது நம்பிக்கை. அந்த வகையில் எமது சமய குரவர்கள் இறைவன்மீதோ அன்றித் தாம்சார்ந்த குருவின்மீதோ வெவ்வேறுபட்ட பாவ நிலைகளில் பக்திசெய்து முக்தியைப் பெற்றார்களென்பது ஐதீகம்.

சிதம்பர நடராஜரைத் தம் முழுமுதற் கடவுளாய் ஏற்ற நால்வரில் சம்பந்தர் வாத்ஸல்ய பாவம் அல்லது சத்புத்திர மார்க்கத்தைக் கடைப்பிடித்துச் சிவனைத் தையாக வழிபட்டாரென்பர். சில சந்தர்ப்பங்களில்- உதாரணமாக திருத்தோணிபுரப் பதிகத்தில் "சிறையாரும் மடக்கிழியே இங்கேவா...இளம் பிறையாளன் திருநாமம் எனக்கொருகாற் பேசாயோ" என்கின்றவாறாக தான் கூறாமல் கிளியிடம் சிவனின் பெயரைக் கேட்டு இன்புறுவது "பெயரைச் சொல்லலாமா கணவன் பெயரைச் சொல்லலாமா.." என்பது போன்றிருக்கின்றது. அந்தவகையில் அது நாயகன் நாயகி பாவமாகும். இங்கே சம்பந்தர் உமையின் திருமுலைப்பாலையருந்தி சிவனாருக்குச் சத்புத்திரரானார் என்கின்ற கோட்பாடு சறுக்கலுக்குள்ளாகின்றது.

நாவுக்கரசர் ஆண்டான் அடிமைப் பாணியில் சிவனின் அடியாளாகச் சரிகைத் தொண்டு புரிந்து தாசமார்க்கத்தைக் கடைப்பிடித்தவர் என்பர். சுந்தரரோ வன்றொண்டர். இறைவனைத் தன் தோழனாக வழிபட்டவர். மணிவாசகர் குருசீட உறவினைப் பின்பற்றியவர் (http://enthamizh.blogspot.co.uk/2013/10/natarajar-chidambaram.html) ஆயினும், இறைவனைத் தலைவனாக்கித் தான் தலைவியாகும் காந்தா பாவனை-

யயும் (நாயகன் நாயகி பாவம்) கைக்கொண்டவர். இதனை அவரது திருக்கோவையாரிலும், திருவாசகத்தில் திருவெம்பாவை போன்ற பதிகங்களிலும் நாம் காணலாம். திருக்கோவையார் தலைவன் தலைவி உறவை முன்வைத்து எழுதப்பட்டதாகும்.

"குருப் பரம்மா குருவிஷ்ணு குருதேவா மகேஸ்வரா, குரு ஷாட்ஷாத் பரப்ரம்ம தஸ்மை ஸ்ரீ குரவே நமக" என்கிறது குரு ஸ்தோத்திரம். மணிவாசகர் தன் குருவையே இறைவனாய்க் கொண்டார் என்பதற்கு அவரது போற்றித் திரு அகவல் சான்று பகர்கின்றது.

............ "புல்வரம்பு ஆய பலதுறை பிழைத்தும்
தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி
முனிவு இலாதது ஓர் பொருள் அது கருதலும்
ஆறு கோடி மாயா சக்திகள்
வேறு வேறு தம் மாயைகள் தொடங்கின
ஆத்தம் ஆனார் அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும்பு ஏறினர்
சுற்றம் என்னும் தொல்பசுக் குழாங்கள்
பற்றி அழைத்துப் பதறினர் பெருகவும்
விரதமே பரம் ஆக வேதியரும்
சரதம் ஆகவே சாத்திரம் காட்டினர்
சமய வாதிகள் தம்தம் தங்களே
அமைவது ஆக அரற்றி மலைந்தனர்
மிண்டிய மாயா வாதம் என்னும்
சண்ட மாருதம் சுழிந்து அடித்துத் தாஅர்த்து
உலோகாய தமெனும் ஒள் திறப்பாம்பின்
கலா பேதத்த கடுவிடம் எய்தி
அதில் பெருமாயை எனைப்பல சூழவும்
தப்பாமே தாம் பிடித்தது சலியாத்
தழலது கண்ட மெழுகு அது போல......
மற்று ஓர் தெய்வம் கனவிலும் நினையாது
அருபரத்து ஒருவன் அவனியில் வந்து
குருபரன் ஆகி அருளிய பெருமையைச்
சிறுமை என்று இகழாதே.... என்கிறார்.

இங்கே நான் இறைவனை என் துணையாக் கொண்டபோது சிலர் நாத்திகமான நிரீசுவர வாதத்தைப் பேசினார்கள். சுற்றத்தவர்கள் என்னைப் பரமார்த்திகப் பாதையிலிருந்து லௌகீகத்துக்குத் திரும்ப வற்புறுத்தினர். வேதியர்கள் விரத உபாசனைகளைக் காட்டி என்னை ஆத்ம சாதனைகளிருந்து திருப்ப முயற்சித்தனர். சமய வாதிகள் தம்தம் மதங்களைக் காட்டி என்னைத் தம் பக்கம் இழுத்தனர். மாயாவாதம் என்னும் புயல் என்னை அலைக்கழித்தது. இயங்கியல் பொருள்முதல் வாதமென்னும் பாம்பின் கொடிய விடம் என்னைப் பாதித்தது. அதனால் மாயை சூழ்ந்து சரியெது தப்பெது என்றறியாமல் மயங்கினேன். அதனால் நெருப்புத் தழலைக் கண்ட மெழுகைப் போல உருக வேண்டியதாயிற்று. அப்படியிருந்தும் வேறொரு தெய்வத்தைக் கனவிலும் நினையாது அருபரனான பிரபஞ்சத்துக்கு அதிபதியானவன் இப்பூமிக்கு வந்து குருபரனாகி என்னை ஆட்கொண்ட பெருமையைச் சிறுமையென்றிகழாது அவனையே பற்றிக்கொண்டேன் என்கிறார். அந்தப் பிடிவாத பக்தியின்பலனாய்:

தந்ததுன் தன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்
திருப்பெருந்துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யானிதற்கிலன் ஓர் கைம்மாறே.
என்கிறார்

**கோயில் திருப்பதிகம் -10ம் பாடல்**

அற்பனான என்னை நான் உனக்குத் தந்தேன் ஆனால் பேரருளாளனான உன்னை நான்பெற்றுக் கொண்டேன். இதிலே யார் வெற்றிபெற்றவர்? நான் முடிவிலாத ஆனந்தத்தைப் பெற்றேன் நீ எதனைப் பெற்றாய். திருப்பெருந்துறையுறையும் ஈசா என் உடலிலே இடம் பிடித்தாய் இதற்கு நான் என்ன கைம்மாறு செய்வேன்? என்கிறார்.

வடநாட்டில் கிட்டத்தட்ட நாநூறு வருடங்களுக்கு முன் மகா பிரபு ஸ்ரீ கிருஷ்ண சைத்தன்யர் என்னும் ஓர் மகான் கிருஷ்ண பக்தியிலூறித் தன்னை மறந்து பாடி ஆடியபடி வாழ்ந்தார். அவருக்குப் பார்த்ததெல்லாம் ஸ்ரீகிருஷ்ண வடிவமாகவே தோன்றியதாம். காடுகளினூடாக அவர் சென்றபோது அவரது பாடலையும் நடனத்தையும் கேட்ட கொடிய காட்டு விலங்குகள் அவருடன் சேர்ந்து ஆடின என்பது ஐதீகம். அவரடைந்த அந்த அந்தப் பரிபக்குவ நிலையை மகாபாவநிலையென்றும் அந்த நிலை இலகுவில் யாருக்கும் வாய்ப்பதில்லையென்றும் அந்நிலையை அடைந்தோர் இறைவனது சன்னிதானத்தைத் தமது பூதவுடலோடு அடைந்து விட்டவர்களென்றும் கூறுவர்.

மணிவாசகப் பெருமானும் இந்த மாபாவ நிலையை அடைந்து விட்டவராகவே கருதப்படுகிறார். ஏறக்குறைய முப்பததிரண்டு வயதிற்குள் வாதவூரர் இந்த நிலையை அடைந்து முக்தி பெற்றுவிட்டதாகக் கூறப்படுகிறது. முத்திநெறியை அறியாத மூர்க்கருடன் சேர்ந்து பல்வேறு சாதனை முயற்சிகளில் ஈடுபட்டுத் திசையறியாது திரிந்த என்னைத் தடுத்தாட்கொண்டருளி தூய பக்தி நெறியைக்காட்டி எனது பழைய வினைகளெல்லாம் அற்றுப் போகும்படி செய்து, எனது சித்தத்தை மறைத்திருந்த ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் அகற்றி நானேசிவம் என்று என்னை உணரும்படி செய்த அத்தனான எனது சற்குருவானவர் எனக்கு திருவருள் கூட்டியது போல வேறு யாருக்குக் கிடைக்கும்? என்று மணிவாசகர் தனது அச்சோப்பதிகத்தில் திருப்தியடைகிறார்.

தித்திக்கும் பக்தித் துதிகளடங்கிய திருவாசகத்தைத் தம் வித்துவம் காட்டப் படித்து விளக்கும் மகாபண்டிதர்களைவிட இறைவனையுணர வேண்டுமென்னும் நோக்கோடு கற்பவர்களே பெரும் பயனடைகிறார்கள். அந்த வகையில் அந்தத் திவ்ய நூலை பக்தியோடு கற்று இன்புறுவோமாக.

***(இனிவரும் காலங்களில் தமிழில் கட்டுரை புனைவோரும் ஓர் உசாத்துணைப் பாரம்பரியத்தைக் கடைப்பிடித்துத் தமது கருத்துக்களுக்கு வலுச்சேர்க்க வேண்டுமென்பதை வலியுறுத்த சில தகவல்களுக்கு கணனிவழி உசாத்துணையும் தரப்பட்டுள்ளது.)***

# ஐந்தும் எட்டும்

-முனைவர் சீர்காழி
வி.இராமதாஸ்

"A rational man cannot live without a religion, precisely because reason is characteristic of his nature. Without religious roots there can be no real sincere morality just as without roots there can be no real flower."

-Count Leo Tolstoy(Essays and letters)

## சமயமின்றி வாழ்க்கையில்லை.

இன்றைக்கு ஏறத்தாழ 20.000 ஆண்டுகட்கு, முற்பட்டதாய், இன்றுவரை உயிர்ப்பு ஆற்றல் உடையதாய், நிலவி வரும் பழம் பெரும் சமயம் சைவ சமயமே என்று சர் ஜோன் மார்சல் என்ற அறிஞர் கூறியுள்ளார்.

திருவள்ளுவர் எல்லாச் சமயங்களும், மக்களும் உடன்படத்தக்கவகையில் திருக்குறளை இயற்றியுள்ளார் எனப் பலரும் பொதுவாகக் குறிப்பிடுவதுண்டு. இதனால் அது பொதுமறை என்றும் கூறப்படுகின்றது. என்பதனைப் பேரறிஞர் டாக்டர் எஸ் இராதாகிருஷ்ணன் குறிப்பிடுகின்றார். (Religion and culture.P.27)

திருவள்ளுவர் காலத்தில் சைவம், வைணவம், சமணம், பௌத்தம் எனும் சமயங்கள் மட்டுமே தமிழகத்தில் பரவி யிருந்தன என்பது தெளிவாகிறது. மனிதன் சமய உணர்வின்ற வாழ இயலாது என்பதை டால்ஸ்டாய் உறுதியாகக் கூறுகிறார்.

## தொன்மையானது

திராவிட இனத்தின் உன்னதமான தத்துவ உருவாக்கமே தென்னிந்திய, தமிழ்ச் சமயமான சைவசித்தாந்தமாகும் என்பது ரெவரண்ட டாக்டர் ஜி.யூ.போப் அவர்களின் முடிவாகும். சைவத்தின் முழுமுதற் கடவுள் சிவன். சிவன் என்றால் செம்பொருள், சிறந்தது என்றெல்லாம் பொருள் கொள்ளலாம். சைவம் தொன்மையானது.

## சைவமும் திருக்குறளும்

திருக்குறள் சைவசமய நூலாகும். 133 அதிகாரங்கள் கொண்ட திருக்குறளில் முதல் அதிகாரமே கடவுள் வாழ்த்தாக அமைந்துள்ளது. அதில் முதல் எட்டுக் குறட்பாக்களில் சிவனை, ஆதி பகவன், வாலறிவன், மலர்மிசை ஏகினான். வேண்டுதல் வேண்டாமை இலான், இறைவன், ஐந்தவித்தான், தனக்குவமை இல்லாதான், அறவாழி அந்தணன் என்று எண் பண்புகளை விளக்கி, ஒன்பதாவது குறட்பாவில் அவற்றைத் தொகுத்து எண்குணத்தான் என்றும் குறிப்பிடுகிறார். எட்டு என்ற எண் பயின்று வந்துள்ள ஒரே குறள் இதுவாகும்.

*"கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை."*(9)

## எண் பண்புகள்

அன்பு, அறிவு, பணிவு, ஒழுக்கம், இன்சொல், வீரம், அறம், புகழ் எனும் எட்டுக் குணங்களைக் கொண்டவன் என்று குறிப்பிடுகின்றனர். பரிமேலழகர் தமது உரையில் எண் குணங்களை விளக்குகையில் , 1. தன் வயத்தினனாதல். 2 தூய உடம்பினனாதல், 3. இயற்கை உணர்வினனாதல், 4. முற்று முணர்தல், 5. இயல்பாகவே பாசங்களி னின்று நீங்குதல், 6. பேரருளுடமை, 7.முடிவில்லாத ஆற்றலுடமை, 8. வரம்பில்லாத இன்பமுடைமை என்று குறிப்பிடுகின்றார்.

பரிதியார் தமது விளக்கத்தில் எட்டைக் கூறுகிறார். அவை அனந்த ஞானம், அனந்த வீரியம், அனந்த குணம். அனந்த தரிசனம், நாமமின்மை, கோத்திரமின்மை, அவாவின்மை, அழியாவியல்பு என்பனவாம்.

## எட்டின் சிறப்பு

பொதுவாக எண்களில் எட்டு என்பதை சிக்கலானதாகக் கருதிடும் வழக்கம் நடைமுறையில் உள்ளது. எனினும் அஷ்டலட்சுமி, அஷ்டதிக்குகள், அஷ்டமா சித்திகள், அஷ்டதிக்கு கஜங்கள், அஷ்டமங்கலம், அஷ்டாங்கயோகம், அஷ்டவசுக்கள், அஷ்டதாளம், அஷ்ட வாரணம், அஷ்ட தாதுக்கள் மற்றும் இவை போன்றவை உள்ளன. அஷ்டலோகம் எனப்படும் அஷ்டதாதுவில் தங்கம், வெள்ளி, இரும்பு, தகரம், காரீயம், தாமிரம், துத்தநாகம் மற்றும் பாதரசம் கொண்ட உலேகக்கலவை வழிபடு மூர்த்திகள் (சிலைகள்) உருவாக்கிட உதவுகிறது.

## எட்டானவன்

எண்ணத்தகுந்த குணங்களைக் கொண்ட வன், எளிமையாகிய குணம் வாய்ந்தவன் என்று கூறப்படும் இறைவனை எட்டுப் பொருள்களின் வடிவமாக சைவம் காணுகிறது. நிலம், நீர், காற்று , நெருப்பு, வான், கதிரவன், நிலவு, உயிர்(ஆன்மா) ஆகிய எட்டுப் பொருள்களின் வடிவமாக இறைவன் நீக்கமற நிறைந் திருக்கின்றான். இதனை அஷ்டமூர்த்தம் என்று சைவ சமய நூல்கள் கூறுகின்றன.

*"நிலம் நீர் நெருப்பு உயிர்
நீள் விசும்பு நிலாப் பகலோன்
புலனாய மைந்த னோடு எண்வகையாய்ப்
புணர்ந்து நின்றானே......"*

என்று திருவாசகமும்

*"இரு நிலனாய்த் தீயாகி நீரும் ஆகி
இயமானனாய் எறியுங் காற்றும் ஆகி
அருநிலைய திங்களாய் ஞாயிறு ஆகி*

*ஆகாயமாய் அட்டமூர்த்தி ஆகி.....”*

என்று திருத்தாண்டகமும் போற்றுகின்றன.

## ஐந்தவித்தான்

பொறிகள் ஐந்தாகும். மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து பொறிகளை வழியாகவுடைய ஐந்து அவாவினையும் அறுத்தானது மெய்யான ஒழுக்க நெறியின்கண் வழுவாது நின்றார். பிறப்பின்றி எக்காலத்துக்கும் ஒரு தன்மையராய் வாழ்வர் என்று பரிமேலழகர் விளக்கம் தருகின்றார்.

பொறியென்பது மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐந்து பொறிகளாம். ஐம்பொறிகளையும் அகத்தடக்கி இறைவனது உபதேச முறைமையாகின்ற நல்லொழுக்கத்தின்கண் வழிபட்டு நின்றவர் முத்தராவர்.

## திருமுகங்கள்

சதாசிவப் பெருமானின் திருமுகங்கள் ஐந்து எனவும் ஆகமங்கள் கூறுகின்றன. உச்சிமுகம், கிழக்குமுகம், தெற்குமுகம், வடக்குமுகம், மேற்குமுகம் ஆகிய இவ்வைந்து முகங்களிலிருந்தும் ஐந்து ஐந்து வடிவங்களாகத் தோன்றிய இருபத்தைந்து வடிவங்களும் போற்றப்படுகின்றன. அப்பர் *பெருமானும் ஆரூர் பெருமானைப் பாடும்பொழுது,*

***“ஐயைந்தின் அப்புறத்தானும் ஆரூர் அமர்ந்த அம்மானே”*** என்கிறார்.

திருஅங்கமாலையில் அப்பர் பெருமான்,

*“ தலையே நீ வணங்காய், கண்காள் காண்மின்களோ, செவிகாள் கேண் மின்களோ, மூக்கே முரலாய், வாயே வாழ்த்து கண்டாய், நெஞ்சே நீ நினையாய் நிமிர் புன்சடை நிர்மலனை''*
என்றும் பாடுகின்றார்.

## மலர்கள்

நம் முன்னோர்கள் சில மரபுகளைப் பின்பற்றியே மலர்கொண்டு பூசைனை செய்து வந்துள்ளனர். அவற்றுள் எட்டு (எண்) மலர்கள் கொண்டு வழிபடுவதும் ஒன்றாகும்.

அப்பர் பெருமானின் அருள் வாழ்வில் அரிய ஒரு திருப்பத்தை அளித்த திருத்தலம் திருவதிகை வீரட்டானம். இத்தலத்து இறைவனை எண் மலர்கள் கொண்டு வழிபாடு செய்ய வினைகள் விலகிப் போகும் என்பதனைப் பதிகம் முழுமையிலும் பாடியுள்ளார். ஆகம விதிகளின் படியும் வழிபாட்டின் இறுதியில் கிரியையாக எட்டு மலர்கள் கொண்டு பூசிப்பது சிறப்பாகும்.

*“எட;டு நாண்மலர் கொண்டவன் சேவடி*
*மட்டலர் இடுவார் வினை மாயுமால்*
*கட்டித் தேன் கலந்தன்ன கெடில்*
*வீரட்டனார் அடி சேரும் அவருக்கே ”*

*-(திருமுறை 5-5-41)*

எட்டு மலர்களின் பெயர்களைக் கூறிடும் புட்பவிதி பாடலைக் காண்போம்.

*“இலகிய புன்னை வெள்ளெருக்குச் சண்பகம்*
*நிலவிய வலம்புரி நீலம் பாதிரி அலரி*
*செந்தாமரை அஷ்ட புஷ்பமாம் புலரி அம்போதொடு*
*எப்பொழுதும் சாத்தலாம்”*

என்று எண்குணத்தானை எண்மலர் கொண்டு வழிபட வேண்டியதை வலியுறுத்துகிறது.

## எண் குண மலர்கள்

புன்னை – கொல்லாமை

வெள்ளெருக்கு – அடக்கம்

சண்பகம் - பொறுமை

பாதிரிப்பூ - தவம்

நந்தியவர்த்தம்(வலம்புரி) – அன்பு

அலரி – சத்தியம்

நீலோற்பவம் - தியானம்

தாமரை – அறிவு

எட்டு மலர்களைக் கொண்டு இறைவனை வழிபாடு செய்வதால் எல்லா நலன்களும் பெறமுடிகிறது. எண்ணிக்கையில் குறைவு ஏற்படல் கூடாது. அப்படி ஏற்படின் பொன்னாலான மலர்களால் பூசித்து சரி செய்ய வேண்டும். என்று புட்பவிதி (25) கூறுகிறது. திருமால் தாமரை மலர்களால் சிவனைப் பூசித்தபோது எண்ணிக்கையில் ஒரு மலர் குறைந்தது. தனது கண்மலரை எடுத்து ஈடு செய்து சிவனருள் பெற்று கமலக்கண்ணன் ஆனார்.

## ஐந்தும் எட்டும்

கோள்களாகிய நவக்கிரகங்களும், புலன்களாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்புலன்களும் இருந்தாலும் பயனில்லை, எட்டுக் குணங்களையுடைய சிவனது சிவந்த தாளை வணங்காத தலை சித்திரத்தில் எழுதிய மரப்பாவைக்கு நிகராகும் என்பது பரிதியாரின் வாக்காகும்.

*“ஆக்கையால் பயன் என்? அரன் கோயில் வலம் வந்து பூக்கையால் அட்டிப் போற்றி என்னாத இவ் யாக்கையால் பயன் என்?”*

தன்னைத்தானே இறைவனுக்கு அர்ப்பணம் செய்தலே நிவேதனமாகும்.

உடலுறுப்புக்கள் எல்லாம் இறை வழிபாட்டிற்கே என்று வாழ்வோம்.



# உபநிடதம் காட்டும் வழி

-தேதியூர் பாலு

**நான் யார்?**

எது பரப்பிரம்மமோ, அனைத்திற்கும் ஆன்மாவோ, உலகிற்குப் பெரிய இருப்பிடமோ, நுட்பத்திற்கும் அதிக நுட்பமானதோ, என்றும் உள்ளதோ, அது நீயே, நீயே அது –
நான், நீ, அது, இது எல்லாம் பரம்பொருள்தான்.

**பரம்பொருளின் தன்மை யாது?**

அது சிந்தனைக்கு அப்பாற்பட்டது. மாறுபாடுகளையெல்லாம் கடந்தது. அதற்கு ஏது நான். நீ, அவன், அவள், அது, இது என்ற வேறுபாடுகளெல்லாம்.?
அது அவ்யக்தம் - வெளிப்படையாகத் தோன்றாது. எனினும் எண்ணற்ற வடிவங்களின் அடிப்படையாக விளங்குகிறது. மங்களமும் சாந்தமும் நிறைந்தது. அழிவற்றது. பிரமாண்டங்களின் பிறப்பிடம்:-

அது துவக்கம், நடு, முடிவு என்ற நிலைகளற்றது. ஒன்றேயாகியதும், எங்கும் நிறைந்ததும், அறிவும், ஆனந்தமுமே வடிவானது அது.

இவைகளெல்லாம் மனித சிந்தனைக்கு அப்பாற்பட்டது. தன் சிந்தனைகளுக்குள் "அது"வாகிய பரம்பொருளைக் கொணர்ந்து, அதனை சிந்தனைக்குள் உட்படுத்தி உணர்ந்து சுவைக்கும் வண்ணம் கற்பனை செய்து கொள்ளலாம் அல்லவா? அதற்கு ஒரு உருவம் தரலாம். பெயரைச் சூட்டலாம். உறவை ஏற்படுத்திக் கொள்ளலாம் அல்லவா?

ஒரு மீராவாக, ஒரு ஆண்டாளாக, ஒரு சுந்தரராக, ஒரு திருஞானசம்பந்தராக நீ மாறலாமல்லவா? பரமசாந்தனும், நீலகண்டனும், முக்கண்ணனும் உமாதேவியுடன் கூடியவனும பிரபுவுமாகிய பரமேசுவரனாக நினைத்து தியானித்து இதயத்தில் வைத்துக் கொள்ளலாமல்லவா?

அம்மாதிரி தியானிக்கும் முனிவன் அஞ்ஞான இருளைக் கடந்து ஞான ஒளியில் நிற்பான் என்கிறது உபநிடதம்.

அவனே பிரும்மா, அவனே சிவன், அவனே இந்திரன். அது அழிவற்றது. உயர்வர நின்று தன்னைத்தானே மற்ற உதவியின்றி நிலைபெறச் செய்வது.

நேற்றுத் தோன்றியது. இன்று இருப்பது, நாளை உண்டாகப் போவது, இவை அனைத்தும் அதுவே. நேற்று, இன்று, நாளை என்ற காலவரையைக் கடந்தது அது. எதனை உணர்ந்தால் சாவை வெல்ல முடியுமோ, அதனை அந்தப் பரம்பொருளை, உன்னுடைய சிந்தனையில் "சிக்"கெனப் பிடித்து நிறுத்திவிட்டால், முக்திக்குச் செல்லும் பாதையை நீ அடைந்துவிட்டாய்!

எல்லா உயிர்களிலும் உன்னையே பார். உன்னிடமே எல்லா உயிர்களும் இருப்பதை கண்டு கொள். இந்த ஸர்வாத்ம பாவத்தால் ப்ரஹ்மத்தை அடையலாம். வேறு எக்காரணத்தினாலும் அடையமுடியாது.

மாயையால் கட்டுண்டவன் திரும்பத் திரும்ப பாவச் செயல்களில் ஈடுபடுகிறான். இதன் விளைவாக பிறப்பு - இறப்பு என்னும் சுழலில் சிக்கத் தவிக்கின்றான்.

ஆகவே –
உன்னை நீ அரணிக்கட்டையாக மாற்றிக் கொள். ப்ரணவ மந்திரமான ஓம்காரம் மேல் அரணிக்கட்டையாக இருக்கட்டும். திரும்பத் திரும்பக் கடைந்து ஞானாக்கினியை எழுப்பிவிடு. அந்த ஞானத் தீயில் உன்னுடைய பாவங்கள் பொசுங்கிவிடும். நீ தூய்மை பெறுவாய்,

"ப்ரம்மமே நான்" என்று அறிந்து எல்லாக் கட்டுகளிலிருந்தும் விடுதலை பெற்று "தான் தானாக" நிற்கும் கைவல்யமுக்தி இன்பத்தை அனுபவிப்பாய். இவ்வாறு முக்தி பெற எளிய வழியைக் காட்டுகிறது கைவல்ய உபநிஷத்.

ஓம் தத் ஸத்

**THE UPANISHADS**

THE ancient Vedic literature, the foundation of the whole literature of India, which has been handed down in that country in an unbroken succession from the earliest times within the recollection of man to the present day, became known for the first time beyond the frontiers of India through the Upanishads. The Upanishads were translated from Sanskrit into Persian by, or, it may be, for Dârâ Shukoh, the eldest son of Shâh Jehân, an enlightened prince, who openly professed the liberal religious tenets of the great Emperor Akbar, and even wrote a book intended to reconcile the religious doctrines of Hindus and Mohammedans. He seems first to have heard of the Upanishads during his stay in Kashmir in 1640. He afterwards invited several Pandits from Benares to Delhi, who were to assist him in the work of translation. The translation was finished in 1657. Three years after the accomplishment of this work, in 1659, the prince was put to death by his brother Aurangzib 1, in reality, no doubt, because he was the eldest son and legitimate successor of Shâh Jehân, but under the pretext that he was an infidel, and dangerous to the established religion of the empire.

When the Upanishads had once been translated from Sanskrit into Persian, at that time the most widely read language of the East and understood likewise by many European scholars, they became generally accessible to all who took an interest in the religious literature of India.

--Hinduism in search of answers...

**HINDU SCRIPTURES – AGAMAS** (contd):

Shaiva agamas 28 in numbers as follows:

KAMIKAM, YOGAJAM, CHINTYAM, KARANAM, AJITHAM, DEEPTHAM, SUKSKMAM, SAHASRAM, ASHUMAN, SUPRABEDHAM, VIJAYAM, NISHWASAM, SWAYAMBHUVAM, ANALAM, VEERAM, ROURAVAM, MAKUTAM, VIMALAM, CHANDRAGNANAM, BIMBAM, PRODGEETHAM, LALITHAM, SIDHAM, SANTHANAM, SARVOKTHAM, PARAMESHWARAM KIRANAM, VATHULAM.

Further, the 28 Agamas are classified into four classes: Kapala, Kalamukha, Pasupata, Saiva. The last kind (Saiva) is further classified into two subclasses – Kasmira Saiva and Siddhanta Saiva. Kashmira Saiva is in vogue in the North and Siddhanta Saiva in South India and Sri Lanka. Each Saiva Agama has supplements/additional fragments called Upa-Agamas, of which there are 207 in total. Unfortunately, unlike the Vedas, not all Agamas are available in print.


Parts of Kamika Agama in Tamil is available for everyone to study at the following website: http://www.himalayanacademy.com/resources/books/agamas/

Agamas have four parts or Paathas: Chariya, Kriya, Yoga and Jnana.

**The Four Paathas**

**Jnana Paatha**

Jnana Paatha deals with worldview and spiritual philosophy. It explains the nature of universe, cause of phenomenal world, creation and dissolution, eternal and transient principles of nature, the nature of Self, the philosophy of binding and liberation.



**Yoga Paatha**

Yoga Paatha specifies methods for getting into experience the knowledge that Jnana Paatha expounds. It contains the procedures to be followed, through which the individual consciousness can be united with the eternal consciousness whose nature is infinite bliss.

Yogic sadhana is of two forms, Antaranga (inner) and Bahiranga (external). Their purpose is to purify one's mind, words and deeds. One can bring about the evolution of the entire being through these two kinds of practices, through which the divine principle that pervades existence is realised. The purpose of Agamas is not to simply realize the divine, but to make life an instrument of the divine, to make every action follow the divine will. That is effected when the individual consciousness is united in the eternal consciousness. Yoga Paatha expounds the methods for achieving that, based on Yoga Sastra.



**Kriya Paatha**

Kriya Paatha deals with the religious aspect such as temple construction, domestic and temple rituals, pilgrimage. It also gives procedures for worship, ritual codes and the ingredients of worship. The Kriya part is generally the largest part in all the available agamas.

Other allied subjects dealt with here are sculpture, iconography, construction of temple car or Theer, geology, horticulture, astronomy, town planning, home science, water supply, health and hygiene, food and many others.

**Chariya Paatha**

Chariya Paatha contains the austerity, code of conduct, regulations to be followed by devotees.

It lays down rules for daily worship (puja), observances of religious rites, rituals, festivals and prayaschittas. The Sariya part deals with the personal discipline of the worshippers. The purificatory ceremonies for the individual from the time of his birth, the deekshas (initiation), the ultimate funeral rites and similar other ceremonies are described here.


**Agamas quoted by Saiva Saints:**

The Thevaram hyms of Saint Sambanthar, Appar and Sundarar make several references to the Agamas.

Examples: Saint Sambanthar says " Lord Siva revealed the Veda, the Vedanta and the Agama" (– 3;23;6).

தொகுத்தவன் அருமறை அங்கம் ஆகமம்

வகுத்தவன் வளர்பொழிற் கூக மேவினான்



மிகுத்தவன் மிகுத்தவர் புரங்கள்
வெந்தறச்
செகுத்தவன் உறைவிடம் திருவிற்
கோலமே

Saint Manikkavasagar says

"Blessed are the feet of God who turning into the Aagamas, comes closer!"

"ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க"

" Lord Siva disclosed the agamas from the Mahendra Hill out of his five faces" (-2;20)

Saint Sekkilar makes many references to the agama in Periyapuranam:

"The agamas were revealed by Lord Siva, temples are built according to the rules laid down in the agamas. Siva puja is performed according to the agamas and he is pleased with such worship"

Saint Pusalar built the temple mentally and laid the foundation according to the agamic rules (– 4181)

Narrating the greatness of the city of Kanchipuram, Sekkilar says that Umadevi worshipped Siva in this place; in this context he specifically mentions several times that Umadevi performed Sivapuja as laid down in the agamas. (– 1132, 1133, 1134, 1136, 1141, 1142)

**Current Practice:**

Most temples follow the Kamika or the Karana agama for practices of day to day worship, while the Nataraja temple in Chidambaram follows Makutagama; the Thiruvengadu temple follows three agamas, Kamika, Makuta and Karana agamas. Thirunallar temple follows Makudagama.

**Paddhati :**

Paddhatis are manuals written by scholars who studied the wide and vast Agamas and from that made quick start manuals bringing out the application parts that would be quite useful for the rituals. These paddhatis focus on the Chariya and Kriya Paatha of the Agama.

HINDU SCRIPTURES – DARSANAS

These are the intellectual section of the Hindu writings. Darsanas are schools of philosophy based on Vedhas. There are six main traditional darsanas. Agamas are theological. Darsanas are philosophical, meant for erudite scholars who are endowed with acute acumen, good understanding, and power of reasoning and subtle intellect.

These can be summarised as basic ways of looking at life. These six philosophies are known as *shaddarshana*. Their essence philosophies have been captured in aphorisms or *Sutras*.

**Sankhya**-*Sutra* by *Kapila* – it is a dualist theoretical exposition of consciousness and matter.

**Yoga**-Sutra by *Patanjali* - a school emphasising meditation, contemplation and liberation **Mimamsa**-*Sutra* by *Jamini* - an anti-ascetic and anti-mysticist school of philosophy.**Vedanta**-*Sutra* by *Badarayana* - the last segment of knowledge in the Vedas. Vedanta came to be the dominant current of Hinduism in the post-medieval period

**Nyaya**-*Sutra* by *Gautama* - logic, explores sources of knowledge. *Nyāya Sūtras*

**Vaisheshkha**-*Sutra* by *Kanada* - an empiricist school of atomism

*Sutras* can easily be memorized and helped in the transmission of knowledge. They reached their final form between 400 B.C. and 500 A.D. These philosophies are the answers from ancient Rishis for many questions posed regarding the life and the universe.

The Ithihasa, Puranas and Agamas are meant for the masses, and appeal to the heart. The Darsanas appeal to the intellect.

Darsanas hold that Atman/Self is distinct from manas (mind), buddhi (intellect) and prakriti (nature). Atman is eternal and free, and liberation is to realize this clearly and not to mistake it for something else. They all lay emphasis on dharmic life, devotion, turning mind inwards and meditation on the ultimate reality.

What makes the Hindu knowledge system unique is the study of consciousness. We have the most comprehensive theory of consciousness. The study of consciousness is an advanced stage in man's pursuit of Truth. Many of the darsanas have developed along with spiritual philosophy, elaborate methods and practices that help the individual's liberation based on the theory of consciousness.


All the scriptures constitute the entirety of Sanskrit literature – Sacred and Secular. The SRUTHI is the Root; SMRUTHI, ITHIHASA, and PURANA are Trunk. AGAMAS and DARSANAS are the branches. Subhashita, Kavya, Nataka and Alankara are the flowers of the TREE of India's Culture.

# திருக்குறள்

கற்றக கசடறக் கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக – (40)

**Thirukkural Story**



## Explanation:

*Let a man learn thoroughly whatever he may learn, and let his conduct be worthy of his learning.*

## *Story:*

One day at a school, a class teacher was teaching about good conduct. He said "Whenever anyone comes to us hungry, we should always give them some food. Share what we have. It is our duty. Hospitality to guests is one of the greatest traits of the Tamil tradition". He then spoke about many great philanthropists who lived in Tamil Nadu and went on to relate the story of Paari, who gave his chariot to Mullai, the creeper plant.

During lunch time, one of the students, Kumar, sat down to eat. He finished all the food he brought from home, but he was not satisfied. He went out to the shop and bought more food and continued munching on the food. At this point, he noticed a boy standing next to him watching his food. The boy looked gaunt and hungry and appeared not to have eaten for days. When Kumar turned to him, the boy asked whether Kumar had any food to spare. Kumar ignored him, turned the other way and continued with his eating.

At that time, the teacher who was teaching the class earlier, came that way and saw the behaviour of Kumar. He called Kumar and said, "This morning, what did you learn? If anyone comes to you hungry, it is your duty to give or share your food. Can you imagine how hurt that boy would have been, when you turned the other way? It is not enough to study and learn moral codes at school. You should practice what you learnt."

Kumar realised what he had done and felt ashamed. He decided to rectify the error he made. He called that boy and bought him some food at the shop. He felt very happy when the boy thankfully accepted the food and ate it. Kumar was very pleased he was able to put into practice what he learnt that day.

## Positive Thoughts for

**Daily Meditation**

Do your own work. I am not master of anyone. I am only my own master. Each is his own master. You must discover the master in you from within. This is the secret.

All are my master. I am learning from everyone . I pick from everyone what I want and pass on . and they too. Experience this and you will know the truth.

You don't want power. You want to find out the truth.

Don't care for the effect.

Difficulties come. They are blessing.

Be like the bee which sucks honey from the flowers and then is silent.

Desire is the greatest danger. You are sprit. You don't desire anything.

Examine yourself everyday-examine yourself in heart, body, and mind.

Too much sleeping is bad. Too much walking< too much work is bad. Too much anything is bad.

You must fight inside. Fight the whole inside.

You must look after the body. Body is important.

Do your work. Through work you can realize God. Work for work's sake.

Philosophy and religion are one. Rituals and ceremonies express philosophical truth.

# கண்ணனும் தாத்தாவும்



(முத்து)

அன்று ஞாயிற்றுக்கிழமை காலை, கார்த்திகை மாதமாதலால் இலண்டனில் குளிர்காலம் ஆரம்பித்துவிட்டது. குளிருக்குப் பயந்தோ, என்னவோ சூரியனும் மறைந்துவிட்டான். மிகவும் குளிராகவும் இருந்தது. இந்த நாட்களில் மாலை வேளையில் வீட்டிற்குள் இருந்து தொலைக்காட்சியில் நல்ல திரைப்படங்களையோ அல்லது நல்ல நி-கழ்ச்சிகளையோ பார்க்கத்தான் எல்லோரும் விரும்புவார்கள். கண்ணனும் தத்தாவும் துணைவன் என்னும் பக்திப் படத்தை பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஐந்து மணியளவில் படம் முடிவடைந்துவிட்டது. இருவர் கண்களிலும் கண்ணீர்த்துளிகள். கண்களைத் துடைத்துக் கொண்டே இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தனர்.

**கண்ணன்** - அழுகிறீர்களா? தாத்தா?

**தாத்தா** - இல்லை, கண்ணா. ஆண்டவன் தனது பக்தர்களுக்குத் துன்பம் வரும் போதெல்லாம் எப்படியெல்லாம் அருள்புரிகிறார் என்று எண்ணினேன். அதனால் கண்ணீர் வந்தது. உனக்கு ஏன் கண்ணீர் வந்தது. சொல் பார்க்கலாம்?

**கண்ணன்** - முருகன்மீது அளவு கடந்த பக்தியுடைய வேலாயுதம் என்பவருக்கு கடவுள் ஒரு ஊமையான குழந்தையைக் கொடுத்துவிட்டாரே என்பதைப் பார்த்ததும் எனக்கு அழுகை வந்துவிட்டது.

**தாத்தா** – கடவுள் நம்பிக்கை கொஞ்சமுமே இல்லாத அவன் மனைவிக்கு கடவுள் மீது நம்பிக்கை வரச்செய்வதற்காகவே கடவுள் அப்படி ஒரு சோதனை செய்தார்.

**கண்ணன்** – ஆமாம் தாத்தா! அவளே முருகா என் பிள்ளையைக் காப்பாற்று என்று வேண்டுகிறாள். குழந்தையைக் கடிக்க இருந்த பாம்பை எங்கிருந்தோ மயில் பறந்து வந்து பாம்பைக் கொத்திக் கொல்வது அற்புதமான காட்சி.

**தாத்தா** – அது மட்டுமா கண்ணா! வைத்தியர்களால் காப்பாற்ற முடியாத குழந்தையைக் கடவுள் காப்பாற்றுகிறார். கடவுளின் சக்தி அளவிட முடியாதது என்பதை இதிலிருந்து அறியலாம்.

**கண்ணன்** – ஆமாம் தாத்தா! அது உண்மைதான். அந்தப் பெண்ணும் கடவுளின் அளப்பரிய சக்தியை கடைசியில் உணர்கிறாள். ஆனால் கோயில் மணியடித்துக் கொண்டு கடவுளைப்பற்றியன்றி வேறு எதையுமே நினையாதிருந்த வேலாயுதத்திற்கு ஏன் திருட்டுப்பட்டம் வந்தது? ஊரைவிட்டு துரத்தப்படும் போது அவன் எவ்வளவு வேதனைப்பட்டான். கடவுள் ஏன் அவனை அப்படிச் சோதித்தார். தாத்தா?

**தாத்தா** – கடவுள் சோதிப்பது (துன்பம் கொடுப்பது) கூட மனிதனுக் நல்ல வழிகாட்டத்தான் கண்ணா! அப்படி வேலாயுதம் அந்தக் கோயிலைவிட்டு போகாதிருந்தால் அவன் தன் வாழ்க்கை முழுவதுமே கோயிலில் மணியடித்துக் கொண்டிருப்பான்.

**கண்ணன்** - ஆமாம் தாத்தா! அவன் ஊரைவிட்டுப் போனபடியால் அவன் வாழ்க்கையில் உயர்வடைகிறான்.

**தாத்தா** - கடவுள் அவனைச் சரியான நேரத்தில் சரியான மனிதர்களைச் சந்திக்க வைத்துக் கொஞ்சம் கொஞ்சமாக உயர்வடையச் செய்கிறார். முதன்முதலாக அவன் யாரைச் சந்திக்கிறான் கண்ணா? சொல் பார்ப்போம்.

**கண்ணன்** - தான் நம்பிக் கும்பிட்ட முருகன் தன்னைக் கைவிட்டுவிட்டானோ என்று கவலைப்பட்டுக் கொண்டு போகும்போது திருமுருகக-ிருபானந்தவாரியாரின் சொற்பொழிவு அவன் காதில் விழுகிறது. "முருகனை உள்ளம் உருகிக் கும்பிடும் அடியாருக்கு கேட்பது கிடைக்கும். நினைப்பது நடக்கும்" என்று கேட்டபோது வேலாயுதத்திற்குக் கோபம் வருகிறது. அவன் அவரிடம் போய் அப்படி நடக்கமாட்டாது என்று சத்தம் போடுகிறான்.

**தாத்தா** - நல்லது கண்ணா! நான் மிச்சத்தைச் சொல்லுகிறேன். அவர் திரும்பவும், முருகன் தன் பக்தர்களுக்கு அள்ளிக் கொடுக்கும் வள்ளல். அவன் நீ கேட்டதைத் தருவான். நீ அவனை நம்பு. அப்படி நடக்காவிட்டால் நான் நெற்றியில் இருக்கும் திருநீற்றை அழித்துவிடுகிறேன் என்கிறார். பக்தியின் வடிவமான கிருபானந்தவாரியாரை வணங்கிவிட்டு அவன் செல்கிறான்.

**கண்ணன்** - முருகன்தான் கிருபானந்தவாரியாரைச் சந்திக்க வைக்கிறான், என்ன தாத்தா?

**கண்ணன்** - ஆமாம் கண்ணா! எல்லாம் முருகனின் திருவிளையாடல்தான். மீண்டும் அவன் தன்னை வணங்கச் செய்கிறான். வேலாயுதத்தின் உண்மையும் நேர்மையும் நிறைந்த பக்தியும் கண்டு இறைவன் அவன் கேளாமலே அவனுக்கு நிறைந்த செல்வத்தைக் கொடுக்கிறான்.

**கண்ணன்** - ஆமாம் தாத்தா! வேலாயுதம் எவரும் நம்ப முடியாத அளவுக்குப் பெரும் செல்வந்தனாக வந்துவிடுகிறான்.

**தாத்தா** – கிருபானந்தவாரியார் சொன்னதுபோல அருள் வள்ளலான முருகன் தன் அடியவனன வேலாயுதத்திற்கு அள்ளிக் கொடுத்ததை இங்கு காணமுடிகிறது. ஆண்டவன் கருணையே கருணை.

**கண்ணன்** - இப்படியான பக்திப் படங்களைப் பார்த்தால் எவருக்குமே பக்தி வரும் தாத்தா!

**தாத்தா** — நான் சிறுவனாக இருந்தபோது எத்தனையோ பக்திப் படங்களைப் பார்த்திருக்கிறேன். அந்தப் படங்களில் வரும் பாடல்களைக் கேட்டாலே மனம் உருகும். மனதில் பக்தி பொங்கும்.

**கண்ணன்** - தேவார திருவாசகங்களைப்போல் அல்லாது பக்திப் பாடல்கள் கேட்டுப் புரிந்து கொள்ள இலகுவாக இருக்கின்றது தாத்தா!

**தாத்தா** — கெட்டிக்காரன்! நீ சொன்னது சரியானதே. தமிழை நன்றாக படித்தவர்களுக்கே தேவார திருவாசகங்களின் அர்த்தம் நன்றாக புரியும். அந்தக் காலத்தில் படிக்காதவர் மத்தியிலும் இந்தப் பக்திப் பாடல்களே பக்தியை வளக்கப்ர்க்கப்ர்க்க உதவின என்று சொல்லலர்க்க உதவின என்று சொல்லலாம். அது மட்டுமன்றி சில தேவார திருவாசகங்களில் புராணக் கதைகளும் சொல்லப்படடிருக்கும்

**கண்ணன்** - புராணங்களில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது தாத்தா?

**தாத்தா** - நமது முன்னோர்கள் இந்துசமய தத்துவங்களை எல்லாம் வைத்துக் கதைவடிவமாக எழுதித் தந்திருக்கிறார்கள். ஏனென்றால் கதையாகச் சொன்னால் எல்லோரும் அலுப்புத்தட்டாமல் விரும்பிக் கேட்பார்கள். புரிந்து கொள்வார்கள்.



**கண்ணன்** - ஓ..! நம் முன்னோர் மிகவும் புத்திசாலித்தனமாக வழிகாட்டியிருக்கிறார்கள். கந்தசஷ்டி விரதம் நடந்து கொண்டிருப்பதால் கோயிலில் கந்தபுராணம் படிக்கிறார்கள் என்று சொன்னீர்களே தாத்தா. அதில் என்ன தத்துவம் சொல்லப்பபட்டிருக்கிறது!

**தாத்தா** - கெட்டிக்காரன்! சரியான நேரத்தில் சரியான கேள்வி கேட்கிறாய்! கந்தபுராணம் என்றாலே கந்தனைப்(முருகனை) பற்றிய கதை என்று எல்லோருக்கும் தெரியும். நீ இதைப்பற்றி என்ன என்ன தெரிந்து வைத்திருக்கிறாய். சொல் பார்ப்போம்?

**கண்ணன்** - தேவர்களைத் துன்புறுத்தினான் சூரபத்மன் என்னும் அரக்கன். தங்களைக் காக்கும்படி சிவபெருமானைத் தேவர்கள் வேண்டினர். சிவன் முருகனைத் தோற்றுவித்துத் தேவர்களைக் காக்கும் வண்ணம் சூரபத்மனோடு போருக்கு அனுப்பினார். முருகப்பெருமான் சூரனைக் கொன்று தேவர்களின் துன்பத்தைத் தீர்த்தார். சூரன் சிவனிடம் சாகாவரம் பெற்றிருந்ததினால் மரமாகி நின்ற அவனை முருகனின் வேல் இரண்டாகப் பிளந்தபோது அவன் சேவலாகவும் மயிலாகவும் மாறுகிறான். அவனது ஆணவம் போய்விடுகிறது. மயில் முருகனின் வாகனமாகவும் சேவல் கொடியாகவும் வந்து விடுகிறது. இவ்வளவும் எனக்குத் தெரியும் தாத்தா!

**தாத்தா** - இதில் கூறப்படும் தத்துவம் என்னவென்று பார்த்தால் சூரனும் அவனுடன் கூடிய அரக்கர்களும் கொடியவர்கள். தேவர்கள் நல்லவர்கள். மனிதர்களிடம் நல்ல குணங்களும் இருக்கின்றன. கெட்ட குணங்களும் இருக்கின்றன. மனிதர்களிடமுள்ள கெட்ட குணங்களான கோபம், பொறாமை, ஆசை ஆகியவைதான் அரக்கர்களாகக் காட்டப்பட்டன. மனிதனிடம் எது சரி, எது பிழை என்று அறியக்கூடிய பகுத்தறிவும் உள்ளது. இந்தப் பகுத்தறிவுதான் முருகனாகக் காட்டப்படுகிறது. மனிதனிடம் உள்ள கெட்ட குணங்களை அழிப்பதற்கு பகுத்தறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதற்குப் பக்தி அவசியமாகிறது. மனதில் பக்தியை வளர்ப்பதற்கு நாங்கள் முயற்சி செய்ய வேண்டும். இதற்கு முதற்படியாக இருப்பது கோயில் வழிபாடு.

**கண்ணன்** - எல்லோர்க்கும் கடவுள் பக்தி அவசியம் என்று நீங்கள் அடிக்கடி சொல்வது எனக்கு நன்றாக விளங்குகிறது தாத்தா!

**தாத்தா** — கோயிலுக்குப் போவதுடன் நினறுவிடாது சமயப் புத்தகங்களைப் படித்தல், பெரியோர்களிடம் சமய நெறிகளைக் கேட்டறிதல், அதன்படி வாழப்பழகுதலும் அவசியம். கற்றபடி நடத்தல் வேண்டும் என்பதனைக்கூறும் திருக்குறள் ஒன்று இருக்கிறது. சொல் பார்ப்போம்

**கண்ணன்** - *"கற்க கசடறக் கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக."*
சரிதானே தாத்தா?

**தாத்தா** — சரியாகச் சொல்லிவிட்டாய். கெட்டிக்காரன். கந்தபுராணத்தின் தத்துவம் உனக்குப் புரிந்ததா? கண்ணா!

**கண்ணன்** - ஓம்....தாத்தா! அதுதான் எனக்கு விளங்குகிறமாதிரித் தெளிவாகச் சொல்லி விடடீர்களே!. மனிதர்களிடம் உள்ள தீய குணங்களை இல்லாது ஒழித்து நல்லவர்களாக வாழ பக்தி அவசியம். பக்தியை எப்படிப் பெறலாம் என்றும் சொல்லியிருக்கிறீர்கள். எமது மனதில் தீய குணங்களை வளரவிட்டால் நாங்களும் சூரனைப் போலச் சுற்றி இருப்பவர்களுக்குத் தீமை செய்வோம். அது கடைசியில் எங்களையே அழித்துவிடும்.

**தாத்தா** - இந்த உண்மையை எல்லோரும் அறிந்து கடைப்பிடித்து வாழ்ந்தால் உலகில் எல்லோரும் நிம்மதியாகச் சந்தோசமாக வாழலாம்.

**கண்ணன்** - கேட்கவே சந்தோசமாக இருக்கிறது தாத்தா. இந்த கந்தஷ்டிவிரத நாளில் எல்லோரும் நல்லவர்களாக வாழவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திப்போம் தாத்தா!

**தாத்தா** — நல்லது கண்ணா! அப்படியே செய்வோம். நாளைக்குத் திங்கட்கிழமை. நீ பள்ளிக்கூட வீட்டுப்பாடங்களைச் செய். நான் கொஞ்சம் ஓய்வாக இருந்து தொலைக்காட்சியில் செய்திகள் பார்க்கப் போகிறேன்.

**கண்ணன்** - சரி தாத்தா! நான் எனது பாடங்களைப் படிக்கப் போகிறேன்.

## மாணவர்களுக்கு:



# சுவாமி விவேகானந்தர்

(கடந்த இரண்டு இதழ்களின் தொடர்ச்சி)

11 செப்டம்பர் 1893 'ஹால் ஆப் கொலம்பஸ்' (Hall of Columbus) என்னும் மண்டபத்தில் சர்வமதமகாசபை தொடங்கியது. வித விதமான ஆடைகளுடன் பல்வேறு மதத் தலைவர்கள் அமர்ந்திருந்தனர். சுவாமிஜி முதல் வரியில் அமர்ந்திருந்தார். கூட்டத்தில் பண்பாளர்களும் அறிஞர்களுமாக ஏழாயிரம் அமெரிக்கர்கள் கூடியிருந்தனர். இதவே உலக வரலாற்றில் நடைபெற்ற முதல் மகாசபை.

பேச்சாளர்கள் பேசி முடிய, தனது நேரம் வந்தபோது, தயக்கத்துடன் சுவாமிஜி பேச ஆரம்பித்தார். காவி உடை, கம்பீரத்தோற்றம் அவையினரை அப்படியே சுண்டியிழுத்தது. கலைமகளை வணங்கி பேசத் தொடங்கினார். 'அமெரிக்க நாட்டு சகோதரிகளே, சகோதரர்களே என்று அவர் கூறியதுதான் தாமதம், அவையினர் உணர்ச்சி பெருக்கெடுத்தோடு கைதட்டி ஆரவாரம் செய்தனர். சகோதர, சகோதரிகளே என்று பத்தாயிரம் மைல்களுக்கப்பால் இருந்து வந்த ஒருவர் கூறுகிறாரே, எவ்வளவு பரந்த மனம். சபையோரின் மனம் உணர்ச்சியில் கரைந்தது. எளிய ஆங்கில உரைநடையில் அவரது சொற்கள், அவரது கருத்துக்கள் அவையினரின் இதயத்தை தொட்டன. இறைவனின் ஆசிபெற்ற ஒருவரின் சொற்கள் பேராற்றலுடன் அவையினர் ஒவ்வோரினதும் உள்ளத்தையும் தொட்டது.

சுவாமிஜியின் இந்த சொற்பொழிவு அவரை அமெரிக்காவில் பிரபலமாக்கிவிட்டது. சொற்பொழிவின் சில வரிகள் -

' பிறமதக் கொள்கைகளை வெறுக்காமல் மதித்தல், அவற்றை எதிர்ப்பின்றி ஏற்றுக் கொள்ளுதல் ஆகிய இரு பண்புகளை உலகத்திற்கு, புகட்டிய மதத்தைச் சார்ந்தவன் நான் என்பதில் பெருமை கொள்கிறேன். கொள்கைகளை நம்புவதோடு, எல்லா மதங்களும் உண்மை என்றும் நாம் ஏற்றுக் கொள்கிறோம் எப்படி நதிகள் எல்லாம் கடைசியாக கடலை அடைகிறதோ அதேபோல எல்லா மதங்களும் மனிதனை ஒரே இறைவனிடம் கொண்டு போய்ச் சேர்க்கின்றன'. எல்லாப் பத்திரிகைகளும் சுவாமிஜியின் படத்தையும் அவரது உரையையும் மறுநாளே முதற் பக்கத்தில் வெளியிட்டன. அவரே சிறந்த சொற்பொழிவாளர் என்றும் கூறப்பட்டார்.

பின்பு அமெரிக்காவில் பல இடங்களில் சொற்பொழிவாற்றி இந்தியாவைப் பற்றிய பல தவறான கருத்துக்களை நீக்கினார். மக்கள் அவரை சிறந்த ஆன்மீகத் தலைவராக மட்டுமல்ல, சிறந்த தேசபக்தராகவும் போற்றினர். பலர் அவருக்கு நண்பர்களும் சீடர்களும் ஆயினர். பெரியவர்கள் மட்டுமல்லாமல் சிறுவர்களுக்கும் குழந்தைகளுக்கும் பிரியமானவர் அவர்.

ஒருமுறை சில இளைஞர்கள் ஆற்றில் ஓடுகின்ற முட்டை ஓடுகளை சுட முயன்று முடியாமல் இருப்பதைக் கண்டு 'ஓடுகளை சுடுவது மிக இலகுவான காரியமல்ல' என்று கூறி அவர்களிடமிருந்து துப்பாக்கியை வாங்கி குறிபார்த்து அமைதியாக சில நிமிடம் நின்று, ஒவ்வொன்றாக பன்னிரண்டு முறை பன்னிரண்டு ஓடுகளைச் சுட்டார். ஒரு முறை கூட குறி தவறவில்லை. எவ்வாறு என்று இளைஞர்கள் கேட்டபோது "நான் முதல் தடவை துப்பாக்கியை எடுத்துள்ளேன். எதைச் செய்தாலும் மனத்தை ஒருமுகப்படுத்தி செய்ய வேண்டும் அப்படிச் செய்தால் எதையும் சாதிக்கலாம், ஒன்றை செய்யும்போது மற்றதைச் நினைக்கக்கூடாது' என்றார்.

பின்பு அமெரிக்காவில் இருந்து இங்கிலாந்து சென்றார். பத்திரிகைகள் புத்தரையும் ஏசுவையும் போன்ற மகான்களுடன் அவரை ஒப்பிட்டு எழுதினர். அங்கேயும் அவருக்கு பலர் சீடர்களாயினர். இந்தியாவில் மிகப் பிரபலமான மாகரெட் நோபில் என்ற இயற்பெயர் கொண்ட சகோதரி ஒருவருக்கு சகோதரி நிவேதிதை என்று பெயர் கொடுத்தார். நிவேதிதை என்றால் (சமர்ப்பிக்கப்பட்டவள்) என்று பொருள். சகோதரி நிவேதிதை சுவாமிஜியின் போதனைகளை ஏற்று இந்தியா வந்து இறுதி நாள்வரை இந்தியாவில் தொண்டாற்றினார். கல்கத்தாவில் ஒரு பள்ளியையும் பெண்களுக்காக ஆரம்பித்து நடத்தினார் நிவேதிதை.

தாயகம் திரும்பிய அவரை வசதிமிக்க மேலை நாடுகளையும் வறுமை மிக்க இந்தியாவையும் எவ்வாறு நோக்குகிறீர்கள் எனக் கேட்ட போது இந்தியாவின் மண்துகள்கள் ஒவ்வொன்றும் புனிதமானவையாகவும் பாரத நாடு புண்ணிய பூமியாகப் பொலிவதையும் காண்கிறேன் என்றார்.

15ஜனவரி1897, சுவாமிஜி இலங்கை சென்றார். இலங்கையில் சென்ற இடமெல்லாம் ஆயிரக் கணக்கான மக்கள் அவரை மாவிலைத் தோரணங்களுடன் வரவேற்று, பூமாரி பொழிந்தனர். அவரை பக்தர்கள் 'ஜெய் மகாதேவா' எனப்போற்றினர். அங்கிருந்து யாழ்ப்பாணம் போய் அங்கும் வரவேற்பையும் பெற்று சொற்பொழிவுகளையும் ஆற்றிக்கொண்டு இராமனாதபுரம் சென்றார். அங்கு மன்னரான சேதுபதியையும் சந்தித்து இராமேஸ்வரக் கோயில் சென்று சிவபெருமானை தரிசித்தார். அங்கு ஆற்றிய உரையில் புனித வாழ்க்கையும், பிறருக்கு தொண்டு செய்வதுமே வழிபாட்டின் சாரம் என்றார். யார் ஏழை எளியோரை சிவனாக பாவித்து சேவை செய்கிறானோ, அவனே சரியான சிவபூசை செய்கிறான் என்றார். அங்கிருந்து சென்னை புறப்படும் வழியிலெல்லாம் அவருக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

சென்னையில் இளைஞர்களால் அவருக்கு அமோகமான வரவேற்பளிக்கப்பட்டது. சென்னை வரும் வழியில் ஓர் இடத்தில் மக்கள் இரயிலை மறித்து அவரை இறங்கும்படி கேட்டுக் கொண்டனர். அவரும் இறங்கி மக்களுக்கு நல்லாசி கூறி பின்பு புறப்பட்டார். சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் 'ஸ்ரீ இராமகிருஷ்ணரின் உத்தம சீடரே வருக வருக! எனக்கூறி கோசமிட்டனர் மக்கள். அவர் பயணம் செய்த குதிரை வண்டியின் குதிரையை அவிழ்த்து விட்டுவிட்டு வண்டியை பக்தர்கள் தங்கள் கையாலேயே இழுத்தனர். சென்னைக் கடற்கரையில் அவர் உரையாற்றினார். சென்னையில் ஒன்பது நாட்கள் தங்கினார். அவருடைய சொற்பொழிவைக் கேட்டு மக்கள் உற்சாகமடைந்தனர். இந்த உற்சாகத்தை நிரந்தரமாக்கும்படி சுவாமிஜி கேட்டுக் கொண்டார். 'எனது போர்முறை' என்ற தலைப்பில் ஆற்றிய உரை –

உங்கள் உடலையும் நாடி நரம்புகளையும் பலம் பொருந்தியதாக்குங்கள். நமக்கு இரும்பு போன்ற தசைகளும், எஃகைப் போன்ற நரம்புகளும் தேவை. நாம் ஒவ்வொருவரும் தன்னம்பிக்கையுடன் உண்மையான மனிதத்தன்மை படைத்தவர்களாக ஆகவேண்டும். பாரத நாட்டின் பிரச்சனைகள் தீர மூன்று வழிகள் அவசியம் அவை முதலாவதாக, ஏழை எளியவர்களிடம் அன்பு காட்டவேண்டும். அவர்களின் துயரத்தை துடைக்க ஆர்வம் வேண்டும். இரண்டாவதாக, அன்பும் ஆர்வமும் நடைமுறையில் செயல்படாவிட்டால் பயனில்லை. ஆகவே ஆர்வம் செயல் வடிவம் பெற வேண்டும். மூன்றாவதாக ஆண்மை வேண்டும். எல்லோரும் எதிர்த்து நின்றாலும் நல்லதை செயல்படுத்த தயங்காத வலிமை வேண்டும். இந்த மூன்று பண்புகள் இருந்தால் ஒரு குகையில் இருந்தாலும், உன் எண்ணங்கள் மக்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தும். ஆகவே அச்சமின்றி முன்னேறுங்கள்.



கல்கத்தாவில் பிறந்த சுவாமி அவர்கள் 1897 பிப்ரவரி 20ஆம் நாள் சுவாமி விவேகானந்தராக மீண்டும் திரும்பினார். கல்கத்தாவில் அவர் நிகழ்த்திய சொற்பொழிவுகள் மிகவும் பிரசித்திபெற்றவை. அச்சத்தை ஒழியுங்கள் தன்னம்பிக்கையுடன் வாழுங்கள். பாரத நாடு உலகநாடுகளின் ஆன்மீக வழிகாட்டியாக திகழட்டும்.

சுவாமியினுடைய போதனைகள் மாறாத மதிப்புப் பெற்றவை. இனறும் அவை எமக்கு வழிகாட்டியாக உள்ளன. நான்கு வருடங்கள் கடுமையாக உழைத்தபின் இமையத்தில் டார்ஜிலிங் என்னும் மலைவாசற் தலத்தில் சில நாட்கள் ஓய்வெடுத்துக் கொண்டார். கல்கத்தாவில் பிளேக் எனும் தொற்றுநோய் பரவியிருந்த காலம். மக்கள் பலர் அந்நோயினால் இறந்தனர். அவர்கட்கு, சேவை செய்ய எவரும் முன்வரவில்லை. இதைக் கேள்விப்பட்ட உடனேயே தன் சீடர்களுடன் தனது மடம் இருக்கும் காணியை விற்றாவது உதவி செய்வேனென்று கூறி 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்பதை உணர்த்தி அம் மக்களுக்கு உதவினார்.

பின்பு இந்தியாவின் எல்லா மாநிலங்களிலும் மடங்களை நிறுவி ஏழை எளியோருக்கும் சமுதாயத்தில் பிற்பட்டோருக்கும் அருந் தொண்டாற்றினார். எல்லோரும் எமது சதோதரரே என்பதை செய்கைகள் மூலம் காட்டினார்.

1898 டிசம்பர் 9ஆம் நாள் பேலூரில் புதிய மடத்தை துவக்கி வைத்தார். கங்கையின் அழகிய தோற்றம் தட்சணேஸ்வரத்தின் அழகிய காட்சியும் அங்கிருந்து கிடைக்கும். குருதேவரின் அஸ்தியை தலையில் சுமந்தவாறு சுவாமிஜி சீடர்கள் புடைசூழ மடத்தினுள் நுழைந்தார். அஸ்திக் கலசத்தை கட்டிடத்தின் இருக்கைமீது வைத்துவிட்ட சுவாமிஜி ஸ்ரீராமகிருஷ்ணரிடம் 'குருதேவா. நீங்கள் இங்கு தங்க வேண்டும். உங்கள் அருள் எல்லோருக்கும் கிடைக்க வெண்டும். இங்கு எழுந்தருளியிருந்து எல்லோருக்கும் ஆகி வழங்குங்கள்' என்று மனதா பிரார்த்தித்தார்.

எதிர்காலத்தில் பல இளைஞர்கள் இம் மடத்தில் சேர்வார்கள் என்றும் பெண்களுக்கு ஒரு தனி மடம் ஏற்படும் என்று சுவாமிஜி கூறியதெல்லாம் இன்று உண்மையாக உள்ளது. இந்த மடம் எல்லா மதங்களையும் ஒற்றுமைப்படுத்தும். ஸ்ரீ இராமகிருஷ்ணர் எவ்வாறு பரந்த மனப்பான்மை கொண்டவரோ அப்படியே இந்த மடத்தில் பரந்த மனப்பான்மை கொண்ட கொள்கைகள் போதிக்கப்படும். உலகம் முழுவதும் ஒரே குடும்பம் என்ற கொள்கை இங்கிருந்து எங்கும் பரவும்.

'உன்னிடம் எல்லையற்ற சக்தி இருக்கிறது என்பதை வெட்ட வெளிச்சமாக நான் காண்கிறேன். அந்த சக்தியை எழுப்பு! எழுந்திரு! துருப்பிடித்து அழிவதைவிட மக்களுக்கு தொண்டு செய்து அழிவது சிறந்தது.'

நமக்குத் தன்னம்பிக்கைதான் முக்கியமாகத் தேவை. பலம்தான் வாழ்க்கை; பலவீனம் சாவு.'

சுவாமிஜி அமெரிக்கப் பக்தர்களின் அழைப்புக்கிணங்க அங்கு மீண்டும் சென்றார். அமெரிக்கா சென்று வந்தால் உடல் நலம் சிறப்பாக இருக்கும் என்று பலரும் கூறியதால் அங்கு சென்றார். அங்கே ஒன்றரை வருடங்கள் தங்கியிருந்து வேதாந்த சொற்பொழிவுகளை நிகழ்த்தி வந்தார். தாயகம் திரும்பும் வழியில், ஐரோப்பிய நாடுகளுக்கும் துருக்கிக்கும் சென்று வந்தார்.


உடல் நலம் திருப்தியில்லாததாலும், மருத்துவர்களின் ஆலோசனைகளாலும் ஓய்வுதான் தேவையெனக் கருதி, 1900 ஆம் ஆண்டு, பேலூர் மடம் திரும்பினார். ஆடு. நாய், மான் என்று பல பிராணிகளை வளர்த்தார். குருதேவருடன் இளம்பிராயத்தில் கழித்த நாட்களை நினைவு கூர்ந்து நாட்களை போக்கினார். இவ்வளவு காலத்தில் உலகில் எவ்வளவோ நிகழ்ச்சிகள் நடந்தேறிவிட்டன. சுவாமிஜி உலகம் முழுவதும் சுற்றி குருதேவரின் அருளால் கருத்துக்களைப் பரப்பி வந்தார், அதன் பயனாக, பல நூற்றாண்டு காலமாக உறங்கிக்கிடந்த பாரத மக்கள் விழிப்படைந்துள்ளர்கள்.

முன்னேறுவதற்கான பாதையை அவர்களே கண்டுபிடித்துக் கொள்வார்கள். கிழிந்த ஆடையைப்போல் தமது உடலை துறந்துவிட்டு இறைவனின் திருவடிகளை அடைய சுவாமிஜி விரும்பினார். அடிக்கடி தியானத்தில் ஆழந்தார்.

1902 ஜூலை 4, மாலை கோயிலில் ஆரத்தி நிறைவேறியது. சுவாமிஜி தமது அறையில் தியானம் செய்த நிலையிலேயே அவரது உயிர் பிரிந்து, அவர் எங்கிருந்து வந்தாரோ அங்கே சென்றுவிட்டது.


வேலூர் மடத்தில் அந்த அறை இன்றும் நினைவுச் சின்னமாக வைக்கப்பட்டுள்ளது. கங்கைக் கரையில் அவரது உடல் தகனம் செய்யப்பட்ட இடத்தில் சுவாமி விவேகானந்தரின் அழகிய கோயில் அலங்கரிக்கிறது.
சுவாமிஜி தனது பயணத்தை முடித்துவிட்டார். அவரது சக்தி வாய்ந்த சிந்தனைகள் பாரத மக்களை தட்டியெழுப்பியதால் பாரத நாடு சுதந்திரம் பெற்றுவிட்டது. அவரது சிந்தனைகளை செயலாக்கி, நாம் ஆன்மீக விழிப்பு பெற்று இந்தியாவின் எல்லா முன்னேற்றங்களுக்கும் அடிப்படை ஆன்மீகமே என்ற சுவாம-யின் கருத்தை நிறைவேற்றுவோமாக.

இத் தொடர் இத்துடன் நிறைவு பெறுகிறது.




## அட்டையில்:

தைப் பொங்கலை முன்னிட்டு சூரியக் கடவுளி விண்ணில் காட்சி கொடுப்பது இடம் பெறுகிறது. எங்கள் சமயம் பல்லாயிரம் (1700 ஆண்டுகளுக்கு முன்) ஆண்டுகளுக்கு முன்பே சூரியனின் ஒளிக் கதிரில் ஏழு வர்ணங்கள் இருக்கின்றன என்பதையும், கதிரவன் ஏழு குதிரைகள் பூட்டிய தேரில் வருவதையும் இந்த உண்மையை வேத காலம் தொடக்கம் எமது சமயத்தவர்கள் தெரிந்து வைத்திருந்தார்கள். அதற்கு அவர்கள் கொடுத்த வடிவமே எங்கள் சாத்திரங்களில் வர்ணிக்கப்படும் சூரிய பகவான் ஆகும். இவ் ஆன்மிக உண்மை, விஞ்ஞானக் கண்டு பிடிப்பாக வெளியிடப்பட்டு புகழடைந்தது பல்லாயிரம் வருடங்களுக்குப் பின்பு.



According to Hinduism the sun god is driven by a seven-horsed Chariot depicting the seven colours of the light spectrum. This has been maintained from the Vedic period which is roughly between 1700 and 1100 BCE,

Sir Isaac Newton (25 December 1642 – 20 March 1727) was a famous physicist who discovered that light was not a single colour of light rays, but a combination of all the colours on the light spectrum by shining white light through a triangular glass prism.



# கேள்வி பதில்



## கேள்வி:

மனசாட்சி கூறியபடி நடந்தால் போதும் என்று பெரியோர் பலர் கூறி இருக்கிறார்கள். மனம் செல்லியபடி நடக்கக் கூடாது என்று சாத்திரங்கள் கூறுகின்றன. எதை எடுத்துக் கொள்வது?


**பதில்:** தினமும் நாம் அலுவலகம் போகிறோம். அங்கே வேலை நடக்கும் முறை எப்படி என்று நமக்குத் தெரியும். வெளியே பல இடங்களிலிருந்தும் வரும் கடிதங்களை என்ன செய்கிறார்கள்? ஒரு உதவியாளர் அதைப் பெற்றுக் கொள்கிறார். பிரித்து எண்ணைக் குறித்து அடுக்கி பிறகு தலைமை அதிகாரி பார்ப்பதற்கு வைக்கிறார். அதிகாரி கடிதத்தில் உள்ள விவரத்தைப் படித்துப் பார்க்கிறார். அந்த அதிகாரிக்கு அதிகாரம் இருந்தாலும் அவரே அக்கடிதங்களுக்குப் பதில் எழுதுவதில்லை. பதில் தேவை என்றும், அவசரம் என்றும், உடனே என்றும் குறிப்பிடுகின்றார். சில சமயம் வேறு வேலையாட்களை அழைத்துப் பேசியும் முடிவெடுக்கிறார். அதன் பின் இதுவே பதிலாக வெளியே அனுப்பப்படுகிறது.

இதே போன்ற அமைப்புதான் நம்முள் இருக்கிறது. மனம் என்பது இந்த ‘ ரிசீவிங்கிளார்க்கைப்’ (receiving cleark) போல்தான். ருசியாகவும், மணமாகவும், காட்சியாகவும், பேச்சாகவும், தொட்டுணர்வாகவும் வரும் செய்தியை அது உடனே புரிந்து கொள்கிறது. இந்த உலகில் அந்த மனம் எப்படி ஆசைப் படுகிறதோ அதற்கு உடனே அடிமையாகி நாம் காரியத்தைச் செய்துவிடுகிறோம். இது கடிதத்தை வாங்கும் ஊழியர் தாமே முடிவான பதிலையும் அனுப்பி வைப்பது போலத்தான். இப்படி அலுவலகம் நடந்தால் குழப்பம்மான் மிஞ்சும்! மனம் போனபடிச் செயல்படும் மனிதரின் வாழ்வும் இப்படித்தான் சீர் கெட்டுப் போகும்.

அதனால் மனம் சொல்வதை உடனே கேட்காதே, புத்தியைப் பயன்படுத்து! என்று சாத்திரங்கள் கூறுகின்றன. புத்தி, மனம் கொடுக்கும் செய்தியை எடுத்துக் கொள்கிறது. ஆனால் உடனே முடிவெடுப்பதில்லை. அதிலுள்ள சுயநலம், பொதுநலம், நல்லது, கெட்டது எனப் பலவற்றையும் சீர் தூக்கிப் பார்க்கிறது. கடைசியில் சரியானதையே செய்யும்படி ஒரு சக்தி உந்துகிறது. அதுதான் இவ்வளவையும் கவனிக்கும் ஆத்மா. அந்தச் சக்தி சாட்சியாகத்தான் நின்று கொண்டிருக்கிறது. நாம் தவறான முடிவைத் தெரிவு செய்தால் அதன் பலா பலனை நாமேதான் அனுபவிக்க வேண்டும். அது வெறும் சாட்சியாக நின்று பார்த்துவிட்டு ஒதுங்கிக் கொள்கிறது. இதுவே பலரும் மனசாட்சி என்று குறிப்பிடுவதாகும்.

உணர்ச்சிவசப்பட்டு செயற்படும் மனிதன் தவறுகளைச் செய்து துன்பத்தைத் தேடிக் கொள்கிறான். அறிவைப் பயன்படுத்திச் செயற்படும் மனிதன் மனச்சாட்சியை ஒதுக்காமல் ஏற்றுக் கொண்டு உயர்வைத் தேடிக்கொள்கிறான். இதற்கு நமக்கு ஒரு பக்குவம் தேவை. அதைத்தான் நமது சாத்திரங்கள் எடுத்துச் சொல்லி நம்மைப் பண்படுத்துகின்றன.





சுவாமி சின்மயானந்தர்.(Mind anf Man என்ற கட்டுரையிலிருந்து)



கேள்வி: வாழ்நாளில் உலகத் தொடர்புள்ள காரியங்களில் ஈடுபட வேண்டிய அவசியம் உள்ளவர்கள் அதன்பின் பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டு முன்னேற முடியுமா?

பதில்: திருநாவுக்கரசு நாயனார் சைவ சமயத்தில் ஈடுபாடு கொண்டு வாழ்ந்தது நாலே ஆண்டுகள்தான். அப்போது அவருக்கு வயது எழுபத்தேழு இருக்கும்.



ஆறு நாட்கள் மட்டுமே பக்தனாக முழு உணர்வுடன் வாழ்ந்தார் கண்ணப்ப நாயனார். சுந்தர மூர்த்தி நாயனாரை இறைவன் தடுத்தாட்கொண்ட போது அவருக்கு வயது பதினாறு. சுந்தரர் கைலாயம் போன போது அவருக்கு வயது பதினெட்டு. ஆகையால் வயது முக்கியமில்லை.

இளமையிலேயே பக்தி ஏற்படக் கிடைத்தால் நல்லது. இல்லையென்றால் மனப் பக்குவம் வர வேண்டுமே என்ற ஏக்கத்துடனே, நல்லவராக வாழ்ந்தால் அது தானாகவே வந்து சேர்ந்துவிடும். அப்படி வரும் போது நாம் சில காலம்தான் உண்மையான பக்தி பூண்டு வாழ்ந்தாலும் பலன் கிடைக்கும்.

செம்பு என்றைக்கு உண்டோ அன்றே களிம்பும் உண்டு. அதை நாம் துலக்கிப் பயன்பத்த வேண்டும். அரிசி என்றைக்கு உண்டோ அப்போதே உமியும் உண்டு. அதை நாம் தான் விலக்கிச் சமைக்க வேண்டும்.

- திருமுருக கிருபானந்தவாரியார்.


# மாணவர் எழுதியவை

## 1). நாம் யார்க்கும் குடியல்லோம்

- மதுரன் ரவிதரன்

(உயர்தர வகுப்பு – திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி)

திருநாவுக்கரசு (அப்பர்) நாயனார் இத்தேவாரத்தைப் பாடியுள்ளார். இதில் மொத்தமாக பத்துப் பாடல்கள் உள்ளன. இந்தத் தேவாரங்கள் திருநாவுக்கரசு நாயனார் சிவபெருமானிடம் கொண்ட அசையாத பக்தியைக் காட்டுகின்றன. இறைவனிடம் பக்தி கொண்டுள்ளதால், தான் உலகில் எதற்குமே பயப்படமாட்டேன் என்று கூறுகிறார். நாம் யாருக்கும் அடிமையில்லை. இயமனுக்கும் அஞ்சப்படத் தேவையில்லை. எதற்கும்



துன்பப்படமாட்டோம். இறுமாப்புடையோம். எமக்கு எந்த நோயுமில்லை. ஒருவருக்கும் பணியமாட்டோம். இன்பத்தைத் தவிர துன்பமில்லை. ஏனென்றால் நாங்கள் எவரது கட்டுப்பாட்டிற்கும் அப்பாற்பட்டவர்கள். சிவபெருமான் வெள்ளைச் சங்கினால் செய்யப்பட்ட தோடுகளை அணிந்தவர். எல்லோருக்கும் கடவுளுமானவர். சிவனுடைய பாத மலர்களை சரணடைந்துவிட்டோம்.

Namarkum kudiyallom;Namanai anjom,

We are not the citizen of any one: we fear no death,

Naragathil idar padom: nadalai illom

Hell will not bother us:we have no turbulence within,

Emappom ;pini ariyom; panivom allom,

We shall walk with our head up- a gait suited to our temperament; We are not known to afflictions; and we never bow our heads in obesience,

Inbame ennalum thunbamillai;

Forever we abide in bliss unknown to sorrow,

Thamarkum kudiyalla thanmayana Shankaran nart shanku ven kuzhai or


kadil Shankara who is the citizen of none wearing a white Conch shell as an ear ornament;

Komartke endrum meela alai ; Koi malar sevadi kurigi-nome.

We have willingly subjected our self as an irredeema-ble Servitor at the flower fragrant red feet of the em-peror (Shankara ,who by nature is the subject of none being the Lord Supreme;sporting on his ear a white conch shell)

This was the answer given by Saint Thirunavukkarasar when he was ordered to be Arrested and brought to the court of Mahendra varma Pallava who was a practising jain And a non-believer of Siva.

## 2). தைப்பொங்கல்



-செல்வி சுகனி சுகந்தன்

தைப்பொங்கல் தமிழர்களால் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும் ஒரு விழாவாகும். இது தமிழர் திருநாள், உழவர் திருநாள் என்றும் அழைக்கப்படும். பொங்கல் விழா தொன்று தொட்டு தமிழர்களால் கொண்டாடப்படுகிறது. தமிழர் வாழும் நாடுகளான தமிழ்நாடு, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், ஐரோப்பியா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, தென் ஆபிரிக்கா போன்ற நாடுகளில் இனறும் கொண்டாடப்படுகின்றது.

மனிதன் உயிர் வாழ்வதற்கு உணவு தேவை. அதற்கு உழவன் வயலிலே பாடுபடுவான். காளை மாட்டின் உதவியுடன் நிலத்தைப் பண்படுத்துவான். பின்னர் மழையின் உதவியுடன் நெல்லை விதைப்பான். அந்த நெல் வளர்ந்து பயன்தருவதற்கு சூரியனின் ஒளி தேவை. இப்படியாக வளரும் பயிர் முற்றியதும், அதை அறுவடை செய்து, பொங்கலிட்டு சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் பொருட்டு, படைத்து மகிழ்விப்பார்கள்.

வீட்டு முற்றத்திலே, அழகாக கோலமிட்டு, புதுப்பானை வைத்து, பாலூற்றி, புது அரிசி போட்டு பொங்கல் இடுவார்கள். பொங்கும் பொழுது சிறுவர்கள் பட்டாசு வெடித்து மகிழ்வார்கள்.

மறுநாள், மாட்டிற்கு நன்றி செலுத்தும் பொருட்டு, மாடுகளைக் குளிப்பாட்டி, மலர் மாலைகளை அணிவித்து, பொங்கலிட்டு அதற உணவு கொடுப்பார்கள். இதுவே தமிழர்களாகி நாங்கள் இயற்கைகக்கும், பிற உயிர்களுக்கும் செலுத்தும் மரியாதையாகும்

நான் இப்படியான பொங்கலை ஒரு நாளும் பார்தது இல்லை. பெரியவர்கள் சொல்லக் கேள்ளவிப்பட்டிருக்கிறேன். புத்தகங்களில் வாசித்திருக்கிறேன். நான் நான் அதைப் பார்க்காததையிட்டு மிகவும் கவலை அடைகிறேன். உண்மையான பொங்கலை என் தாய்நாடு சென்று பார்க்கவும் ஆவலாய் இருக்கிறேன்

‘உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்”

## கடவுள் பாதி - மிருகம் பாதி

அன்று உலகம் தோன்றிய முதல் நாள். உலகத்தில் இருக்கும் எல்லா உயிகளுக்கும் கடவுள் ஒரு அட்டவணை செய்தார். அவற்றுக்கு ஆயுட்காலம் எவ்வளவு என்பதையும் தீர்மானிக்க வேண்டியிருந்தது. சுவாமியின் கட்டளைப்படி நாரதர் ஒவ்வொரு உயிரினத்தையும் அழைத்துக் கொண்டு வந்தார். அவற்றிடமே அவை விரும்பிய ஆயுட்காலத்தைக் கேட்டு அப்படியே வரமும் கொடுத்து அனுப்பிவிட்டார். ஊர்வன, பறப்பன, புழு, பூச்சி ஆகிய எல்லாம் முடிந்த பிறகு மிருகங்களின் பங்கும் வந்தது,

" உங்கள் எல்லாருக்கும் முப்பது ஆண்டுகள் ஆயுசு" என்று மொத்தமாக வரம் கொடுத்தார் கடவுள். அவை எல்லாவற்றிற்கும் மகிழ்ச்சி. கத்திக் கொண்டும் துள்ளிக் கொண்டும் உலகத்தை நோக்கிப் புறப்பட்டன கோடிக்கணக்கான ஜீவராசிகள்.

" நாரதா! எல்லாரும் போய் விட்டார்களா?" எனக் கேட்டான் பகவான். " இன்னும் நான்கு ஜீவராசிகள் மட்டும் காத்துக் கொண்டிருக்கின்றன. அவை உங்களிடம் முறையிட விரும்புகின்றன" என்றார் நாரதர்.

முதலில் கழுதை உள்ளே வந்து கண்ணீர் விட்டது. " கடவுளே நான் எதற்காக முப்பது ஆண்டுகள் வாழ வேண்டும். கொஞ்சம் வளர்ந்தவுடன் மூட்டைகளைச் சுமக்க வைப்பார்கள், சரியாகத் தீனி கிடைக்காது. சிறுவர் முதல் பெரியவர் வரை என்னைக் கேலி செய்வார்கள். இந்த வாழ்க்கைக்கு 30 ஆண்டுகள் தேவையா?" என்றது கழுதை.

" பயப்படதே! உன் ஆயுளைப் பதினெட்டாகக் குறைக்கிறேன். மனிதன் உன்னைத் துன்புறுத்தினாலும் நீ மனிதனுக்கு நன்மையையே செய்" என வரம் கொடுத்தார்.

அடுத்ததாக கவலையுடன் நாய் உள்ளே நுழைந்தது. " ஆண்டவனே! தாங்கள் அறியாததா? நான் இரவு பகல் தூக்கமின்றி ஓடித் திரிய வேண்டும். என் பெயரைத் திட்டுவதற்கேற்ற இழி சொல்லாகப் பயன்படுத்துவார்கள். சிறுவர்கள் என்னைக் கல்லால் அடிப்பர்கள். இந்த நாய்ப் பிழைப்பிற்கு முப்பது ஆண்டுகள் எதற்கு? குறைத்தருளங்கள் சுவாமி " எனப் புலம்பியது.

" அப்படியா? சரி! நீ பன்னிரண்டு ஆண்டுகள் வாழ்ந்தால் போதும். அதுவும் நீ நல்லபடி நடந்து கொண்டால் உன்னை வீட்டில் வைத்துச் சீராட்டுவார்கள், நன்றியுள்ள மிருகம் எனப் பெயர் பெறுவாய்" என ஆசி கூறி அனுப்பினார்.

காத்திருந்த குரங்கு ஓடி வந்து தலைக்கு மேல் கைகளைக் கூப்பியபடி " எனக்குமா 30 ஆண்டுகள்? என்னால் உழைத்துப் பிழைக்க முடியாது. விஷமம் செய்து காலம் தள்ள வேண்டும். மரத்துக்கு மரம் தாவியாக வேண்டும். கிளைகளைப் பிடித்துக் கொண்டு தொங்க வேண்டும். இதற்கெதுக்கு முப்பதுஆண்டுகள்? தயவு செய்து குறையுங்கள்" என்றது. " சரி, உனக்கு இருபது ஆண்டுகள் போதும். ஆனால் நீ நல்லபடியாகப் பிழைத்துக் கொள்வாய். ஆண்டவனின் தொண்டன் என்று பூஜிக்கப்படுவாய்" என கடவுள் ஆசி கூறி அனுப்பினார்.

கடைசியாக மனிதன் உள்ளே வந்தான். " முப்பது வயதுதான் கொடுத்திருக்கிறீர்கள். கல்வி கற்கவும், வேலையில் சேரவும், திருமணம் செய்து கொள்ளவும் இந்த வயது சரியாகப் போய்விடும். அதன் பின் வாழ்க்கையை அனுபவிப்பது எப்போது? என் குழந்தைகளைக் காப்பாற்றுவது எப்படி? எனக்கு ஆயட்காலத்தைக் கூட்டிக் கொடுக்க வேண்டும்" என அழுதான்.

கடவுளின் முகம் வாடிப் போனது. மனிதனை அனுதாபத்துடன் பார்த்தார். பிறகு மனிதனை ஆசீர்வதித்து, " சரி அப்பா! உன் விருப்படியே நடக்கட்டும். உனக்குக் கொடுத்த முப்பது ஆண்டுகளுடன் கழுதையின் பதினெட்டு ஆண்டுகளையும், நாயின் பன்னிரெண்டு ஆண்டுகளையும், குரங்கின் இருபது ஆண்டுகளையும் எடுத்துக்கொள். மொத்தம் எண்பது ஆண்டுகள் கிடைக்கும். சமர்த்தியம் இருந்தால் அதற்குப் பிறகும் வாழ்ந்து கொள்!" என்றார் கடவுள்.

மனிதனுக்கு ஒரே மகிழ்ச்சி. கீழே விழுந்து கடவுளை வணங்கிவிட்டு ஓடி விட்டான். பகவான் கவலையுடன் இருந்தார். நாரதர் அவரை வணங்கி " ஆண்டவனே! மனிதனின் வேண்டுகோள் தவறா? ஏன் இப்படிச் சோர்ந்து விட்டீர்கள் ? என்று கேட்டார்.

" ஆமாம் நாரதா! நான் கொடுத்த முப்பது ஆண்டுகளுக்குத்தான் அவன் சிரமமின்றி, உடல் ஆரோக்கியத்துடன், பிறர் உதவியின்றி வாழ முடியும். அத்துடன் அவன் பிழைத்துப் போயிருக்கலாம். தெரியாத்தனமாக மேலும் ஆயுள் வேண்டுமெனக் கேட்டுப் பெற்று விட்டான். இப்போது நடக்கப் போவதென்ன? அடுத்த பதினெட்டு ஆண்டுகளுக்கும் கழுதையைப் போல வேலையில் சுமையையும், பின் உழைத்த பணத்தை நாயைப் போலப் பன்னிரண்டு ஆண்டுகள் காவல் காத்தும், பிறகு வயதான காலத்தில் இன்னும் இருபது ஆண்டுகள் குடும்பத்தினர் சொன்னபடி எல்லாம் ஆடிக்கொண்டும் இருந்து உயிரை விடப் போகிறான். இது என்ன பிழைப்பு? முப்பது வயதில் அவன் ஞானம் பெற்று, மனப் பக்குவம் அடைந்து என்னை வந்து அடைந்திருக்கக் கூடாதா?" என்று பதில் சொல்லிப் பெருமூச்சு விட்டார்.

உண்மைதான். இன்றும் மனிதன் பெரும்பாலும் கடைசி வரை மிருக உணர்வுடன் பயனில்லாத வாழ்க்கையே வாழ வேண்டி இருக்கிறது.

முப்பது வயதில் ஞானம் பெற்று இறைவனை அடைய விரும்பியவர்கள் யார்? ஒரு சில ஆசாரிய புருஷர்களே.

பெருமையுடன்
21 வது
வருடத்தில்

# RUBY'S
CATERING

**020 8799 7180**

www.rubyscatering.co.uk - mail@rubyscatering.co.uk

| உன்னத உணவு | வைபவ மண்டபம் | மகோன்னத உபசரிப்பு |
|---|---|---|





**திருமணம் – பிறந்த நாள் – பூப்புனித நீராட்டு விழா**
**கலாச்சார நிகழ்ச்சிகள் – விருந்து உபசாரம்**
**அரங்கேற்றம் – வளைகாப்பு – பெயர் சூட்டும் விழா**





**ACCREDITED SRILANKAN CATERERS @**

Hilton THISTLE HOTEL London Heathrow Holiday Inn

**உட்பட பிரபல ஹோல்களில் அங்கீகாரம் பெற்ற**
**தரம் மிகு இலங்கை மற்றும்**
**தென்னிந்திய உணவுத் தயாரிப்பாளர்கள்.......**

Tel: **020 8799 7180**
**mail@rubyscatering.co.uk - www.rubyscatering.co.uk**


*R. Pathmanaba Iyer*
*27-B, High Street,*
*Plaistow*
*London E13 0AD*


WESTERN
Jewellers
வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகளை குறைந்த
விலையில் பெற்று கொள்ள நாடுங்கள் உங்கள் வெஸ்டன் ஜுவலர்ஸ்.
First Srilankan Jewellery shop in UK
Specialise in 22ct Gold, White Gold, Platinum
& Diamond Jewellery.
Tooting Branch.
230 Upper Tooting Road
London SW17 7EW
Tel: 020 8767 3445
Wembley Branch.
5,Plaza Parade, 29-33 Ealling Road,
Wembley, Middlesex HA0 4YA
Tel: 020 8903 0909
Season's Best is Summer, Saree's Best is Silk Emporim Sarees
SILK
EMPORIUM
122 Upper Tooting Road
London SW17 7EN
Tel: 02086721900
OPENING HOURS : MONDAY - SATURDAY (10.30 am - 6.30pm) , SUNDAY (11.30am - 6.30pm)